# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 243 ஆடி 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை 27 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


மாகாண சபைகளுக்கு

## காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கக் கோத்தா கடும் எதிர்ப்பு

வழ்ங்கினால் கொழும்பால் கட்டுப்படுத்த முடியாது எனவும் விசனம்



யாழ்ப்பாணம், ஜூலை 27

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார் அடுத்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த தரப்பின் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று >> 25

## டெனீஸ் விவகாரத்தைத் தீர்க்க திரைமறைவு முயற்சி மும்முரம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாண அமைச்சராக பா.டெனீஸ்வரன் இயங்குவதற்கு அனுமதிப்பதா இல்லையா என்கிற பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் திரைமறைவு முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்த் தேசியக் >> 24

டெனீஸின் அமைச்சர் பதவி வழக்கு

## தான் தாக்கல் செய்த வழக்கில் தானே அவகாசம் கேட்ட விக்கி

செப்ரெம்பருக்குத் தள்ளிப் போனது விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு அமைச்சரவையிலிருந்து பா.டெனீஸ்வரனை நீக்கியதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையை நீக்கக் கோரி, வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் தற்போதைய ஆட் >> 24

## வடக்கில் 2 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரம்ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன. ஆண்டிறுதிக்குள் ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார் கள். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் என்று முக்கிய பாடங்களுக்குத் தகுதியான ஆசிரியர்கள் இங்கு இல்லை.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், சில இடங் >> 25

## அனந்தியின் துப்பாக்கி விவகாரத்தால் அமளி

வடக்கு மாகாண சபையில் ஆளும் தரப்பினர் வார்த்தை மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாண சபை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கைத்துப்பாக்கி வைத்திருக்கின்றார் என்ற குற்றச்சாட்டு விடயத்தில் சபையில் நேற்றுப் பெரும் அமளி துமளி >> 24

## உண்மை வெளிவந்தபோது அமைதி காத்தார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜூலை 27

கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது போலி உதயன் பத்திரிகையை அப்போதைய அரசுதான் வெளியிட்டது என்று வடக்கு மாகாண சபையில் நேற்றையதினம் மற்றைய உறுப்பினர்கள் சொன்னபோது அதற்குப் >> 25

## வட மாகாணத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும்

வலியுறுத்துகின்றார் ரம்புக்வெல

கொழும்பு, ஜூலை 27

தேர்தல் முறைகளில் எமக்குப் பிரச்சினை இல்லை. மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டுக்குள் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. அதிலும் வடக்கு >> 25

## நாட்டில் இனி போர் வராது

ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

கடந்த 3 ஆண்டுகளாக சிறப்பான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இனவாதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளோம். அதனால் >> 24

## தவராசாவிடமும் துப்பாக்கி இருந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 27

கடந்த பெப்ரவரி மாதம் வரையில் தான் கைத்துப்பாக்கி வைத்திருந்தார் என்று நேற்றுச் சபையில் தெரிவித்தார் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈபிடிபி >> 25

## தாயரின் திவசத்திற்கு வந்த தனயன் இறப்பு

மீசாலையில் நேற்றுச் சோகம்

கொடிகாமம், ஜூலை 27

தாயாரின் இரண்டாம் ஆண்டுத் திவசத்திற்கு வந்த மகன் தவறுதலாகத் தண்ணீர் தொட்டியில் வீழ்ந்ததில் உயிரிழந்தார். முல்லைத்தீவில் >> 25

see more news in
newuthayan.com

## நிதி கிடைக்கவில்லை என்பதாலேயே கிளிநொச்சி சந்தை பணிகள் தாமதம்

வடக்கு ஆளுநர் நேற்றுத் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி பொதுச் சந்தைக்குப் புதிய கட்டடம் அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியபோதும் இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை, இதனால் பணிகள் தொடங்கப்படவில்லை என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் >> 24

## மாகாணத் தேர்தலை நடத்தும் முறை தொடர்பில் முடிவில்லை

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் வரவில்லை >> 25

புதிய கொள்கையின் கீழ்

## அடுத்த தவணையில் ஆசிரிய இடமாற்றம்

>> 25

## பெண்ணின் கழுத்தை வீடு புகுந்து வெட்டினர்

தும்பளையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம் ஜூலை 27

வீட்டில் தைத்துக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்தை மர்ம >> 25

## சமூகம் விழிப்படைந்தால் மட்டுமே வாள்வெட்டுகளைக் குறைக்கலாம்

ரெஜினோல்ட் குரே சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜூலை 27

தற்போதைய இளைஞர்கள் இணையத்தளம், கைபேசிப் பாவனையில் மூழ்கியுள்ளனர். உறவினர்கள் வந்தால்கூட அவர்களுடன் உரையாடுவதில்லை. தனிமையை விரும்புகின்றனர். திரைப்படங்களைப் >> 24




# முள்ளியவளை விபத்தில் பெண் அலுவலர் காயம்

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு, முள்ளியவளையில் நேற்று நடந்த விபத்தில் பெண் அரச அலுவலர் ஒருவர் படுகாயமடைந்தார். கரைத்துறைப்பற்றுப் பிரதேச சமுர்த்தித் திணைக்களத்தில் பணியாற்றும் முள்ளியவளையைச் சேர்ந்த திருவருட்செல்வன் புஸ்பகந்தி (வயது44) என்பவரே படுகாயமடைந்தார். காரும், மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து நடந்தது. காரின் சாரதியும் ஒரு பெண் என்று கூறப்படுகின்றது. விபத்தில் படுகாயமடைந்த புஸ்பகந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ற-ரி3)

# 5 மாதக் கருவைக் கலைத்து புதைத்த பெண் மீது வழக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

சட்டவிரோத கருக்கலைப்புச் செய்து குழந்தையை மண்ணில் புதைத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மண்ணில் புதைத்த இளம் பெண் ஒருவரை இளவாளைப் பொலிஸார் கைது செய்தனர்.

இளவாளைப் பகுதியில் வசித்து வரும் 26 வயதுப் பெண் ஒருவர் திருமணம் ஆகாமல் கர்ப்பமாகியுள்ளார். ஐந்து மாதக் குழந்தையை அவர் சட்டவிரோதமாகக் கலைத்தார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர். மாத்திரைகளை உட்கொண்டு அவர் கருக்கலைப்புச் செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் விசாரணை செய்தனர். குழந்தை இறந்து பிறந்ததால் அதனைப் புதைத்துவிட்டதாக அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

குழந்தை புதைக்கப்பட்ட இடத்தைச் சட்ட வைத்திய அதிகாரி சகிதம் தோண்டிய பொலிஸார் குழந்தையின் உடலை மீட்டனர். மேலதிகச் சோதனைகளைத் தொடர்ந்து மருந்து பயன்படுத்தி சட்டவிரோதமாகக் கர்ப்பத்தைக் கலைத்தார் என்று பெண் மீது பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(உ8,26,114)

# அரச திணைக்களங்களின் 'ஈகோ'வால் வளப் பயன்பாடு திருப்தியாக இல்லை!

## பனை அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 27

அரச திணைக்களங்களிற்கு இடையில் காணப்படும் 'ஈகோ' பிரச்சனையால் இருக்கும் வளங்களையும் திறம்பட பயன்படுத்த முடியவில்லை என பனை அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ம.செல்வின் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான ஐந்து ஆண்டு அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பான நூல் வெளியீடு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் வளங்கள் இல்லை என்பது பிரச்சனையா அல்லது இருக்கின்ற வளங்களை முகாமைத்துவம் செய்ய முடியவில்லை என்பது பிரச்சனையா எனப் பார்த்தால் வளங்களை திணைக்களங்கள் முகாமைத்துவம் செய்வதில்லை என்பதே பெரும் பிரச்சினையாக உள்ளது. அதற்குத் திணைக்களங்களுக்கு இடையில் இருக்கின்ற போட்டித் தன்மை, குழுநிலையில் செயற்படும் திறன் இன்மை என்பன காரணங்களாகின்றன. இதனால் பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக ஒரு பிரதேசத்தில் உள்ள திணைக்களத்தில் தேவைக்கு அதிகமான வளம் இருக்கும் போது மற்றைய பிரதேச திணைக்களத்திற்கு அவற்றை வழங்கி உதவுகின்ற தன்மை இங்கு இல்லை. இவ்வாறான நிலையே அநேகமான இடங்களில் காணப்படுகின்றது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள ஐந்தாண்டுக்கான அபிவிருத்தி திட்ட குறிப்பேட்டில் உள்ள விடயங்கள் மக்கள்




பிரதிநிதிகளுக்கு மிகவும் முக்கியமானவை. ஏனெனில் அவர்கள் தங்களின் அபிவிருத்தி திட்டங்களை முன்மொழிய இந்தக் கையேடு உதவியாக இருக்கும். மாவட்டத்தின் அபிவிருத்தி என்பது தனியொரு துறையில் மட்டும் இருக்காது அனைத்துத் துறைகளிலும் இருக்கவேண்டும். மீளக் குடியமர்த்திவிட்டு புள்ளிவிவரங்களை உருவாக்குவதில் மட்டும் அபிவிருத்தி இல்லை. ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டும். மாவட்டம் முழுமையாக அபிவிருத்தி அடையும் போதுதான் மாகாணத்தின் அபிவிருத்தி உயரும் எனவே மாகாணம், மத்தி எனப் பாராது அனைவரும் அபிவிருத்தியில் ஈடுபடவேண்டும் என்றார்.

(உ-8)

# மொழிப் பிரச்சினையே இனங்களின் விரிசலுக்கான அடிப்படைக்காரணம்

## வன்னிப்பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர்



நிகழ்வில் உரையாற்றும் போதே வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கே மூன்று சமயத்தவர்கள் வாழ்கின்றீர்கள் எந்தச் சமயத்தவராக இருந்தபோதும் வாழ்க்கையை மிக நல்ல முறையில் வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதே சமய நியதி.

நான் இந்தப் பிரதேசத்தில் இரண்டு வருடங்களுக்கு மேல் கடமையாற்றி இருக்கின்றேன் சிங்கள மக்களுக்கு எப்படி சேவை செய்தேனோ அப்படியே தமிழ் மக்களுக்கும் பாகுபாடின்றி சேவையாற்றினேன்.

ஆனால் நமக்குள் மொழிப் பிரச்சனை உள்ளது தமிழ் மொழி எமக்குப் புரியாது அதே போல் சிங்களம் உங்களுக்குப் புரியாது, இந்த மொழிப் பிரச்சினை ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள மிகத் தடையாக இருந்தது

எமக்கு மொழி தெரியாவிட்டாலும் தமிழ் மொழிக்கு நாம் மரியாதை கொடுக்கின்றோம். அதனால்தான் இன்றைய இந்த நிகழ்வில் தேசிய கீதமும் பொலிஸ் கீதமும் தமிழில் பாடப்பட்டது.

அதே போல் பொலிஸ் நிலையம் வந்து முறைப்பாடு செய்வதற்கும் முறைப்பாட்டுப் பிரதி பெறுவதற்கும் மற்றும் உங்களுக்குத் தேவையான எந்த ஒரு செயற்பாடுகளையும் தமிழில் பெற்றுக்கொள்ள லாம்.

அத்துடன் இங்கே வாழுகின்ற இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் போன்ற மக்களின் மத வழிபாடுகளிலும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் செய்துள்ளோம்.

அதிகமான தமிழ் மக்களின் வாழ்க்கை முப்பது வருட போரினால் வீணாகி விட்டது அந்த முப்பது வருடம் இனி நமக்கு கிடைக்கப் போவதில்லை.

குறிப்பாகச் சிறுவர்களுக்கு சாதி, மத, மொழி அடையாளங்களைக் காட்டி பிரிவினையுடன் வளர்க்கக் கூடாது நாம் அனைவரும் இலங்கையின் மக்கள் என்று சொல்லி வளருங்கள்.

அத்துடன் பொலிஸ் என்பது மக்களுக்காகத்தான் பொலிஸாரின் வாகனங்கள், கட்டிடங்கள், சம்பளப் பணம், அனைத்தும் மக்கள் வரிப் பணத்திலிருந்து எமக்கு கிடைக்கின்றது.

பொலிஸாரோடு இணைந்து சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் குடு, கஞ்சா, கள்ளச்சாராயம், போன்ற போதைப்பொருட்களை ஒழிக்க இணைந்து செயற்படுங்கள்.

நல்ல எதிர் காலத்துடன் நிம்மதியாக வாழலாம் என்று கூறிய அவர்

இந்த வீட்டினை கட்டிமுடிக்க காரணமாக இருந்த முருங்கன் பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், ஜெயரோஷன் மற்றும் கட்டட பொருட்கள் வழங்கிய நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள், நானாட்டான் வர்த்தகர்கள் போன்றவர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்

இந்நிகழ்வில் மன்னார் பிரதான பொலிஸ் அத்தியட்சகர்கள், முசலி, முருங்கன் பொலிஸ் அத்தியட்சகர்கள், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர், மற்றும் உறுப்பினர்கள், சமூக சேவகர் பாஸ்கர நாதன் உட்பட கிராமத்து மக்களும் கலந்து கொண்ட னர்.

(213)

# மர நடுகைத் திட்டத்தில் நட்ட மரக் கன்றுகள் உழுதழிப்பு

## செங்குந்தா இந்துக் கல்லூரியில் அடாவடித்தனம்

செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடுகை செய்யப்பட்ட மரக் கன்றுகள் விஷமிகளால் அழிக்கப்பட்டுள்ளன. தேசிய மர நடுகைத் திட்டத்தின் கீழ் செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் 75 இற்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் நடப்பட்டன. அவை அனைத்துமே உழுது அழிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மர நடுகை மாதத்தை முன்னிட்டு ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தின் எல்லைப் பகுதியில் சுமார் 90 மரக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. இவற்றில் பட்டுப்போனவைகள் போக எஞ்சியிருந்த மரங்கள் அனைத்தும் இரவோடிரவாக உழுது அழிக்கப்பட்டுள்ளன.

மைதானத்துக்கு நேற்றுக் காலை சென்ற மாணவர்கள் மரக் கன்றுகள் அழிக்கப்பட்டமை தொடர்பில் அதிபருக்கு தெரிவித்தனர். இதையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும், பிரதேச செயலகத்திலும் பாடசாலை நிர்வாகத்தால் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆளுநர் செயலகத்துக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. பாடசாலை மைதானத்தில் இரவு வேளைகளில் கூடும் இளைஞர்கள் மதுபானம் அருந்துவதுடன் வெற்றுப் போத்தல்களை அங்கேயே வீசிச் செல்கின்றனர் என்று பாடசாலைக் சமூகம் விசனம் தெரிவிக்கின்றது. இதனால் மாணவர்கள் தினமும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் கூறப்பட்டது. (உ-8)

# பூநகரியில் நடமாடும் சேவை

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கான சட்ட ஆவணங்களை பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை பூநகரி மத்தியகல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது. குறித்த நடமாடும் சேவையில் சம்மந்தப்பட்ட திணைக்களங்களால் வழங்கப்படும் பின்வரும் சேவைகளை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். தேசிய அடையாள அட்டை பெறுதல் தொடர்பான சேவைகள், சட்ட உதவி ஆலோசனைகள் தொடர்பான சேவைகள், ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், நீர் பட்டியல் தொடர்பான பிரச்சனைகளை தீர்த்துவைத்தல் தொடர்பான சேவைகள், 'மின்சாரப் பாவனை தொடர்பான சேவைகள், வரி சம்மந்தமான பிரச்சனைகளை தீர்த்து வைத்தல் தொடர்பான சேவைகள், மனித உரிமைகள் தொடர்பான சேவைகள், காணிச் சீர்திருத்தம் தொடர்பான சேவைகள், தேசிய வீடமைப்பு அதிகாரசபையுடன் தொடர்பான சேவைகள், ஊழியர் சேமலாபநிதி/கடன்களை மத்தியவங்கியிலிருந்து பெறுதல் தொடர்பான சேவைகள், ஊழியர் சேமலாபநிதி நிலுவைகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான சேவைகள், கமநல அபிவிருத்தி திணைக்களத்துடன் தொடர்பான சேவைகள், விசாரணைச் சேவைகள் என்பன இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுளது.

(222)

## மட்டுவில் இரட்டைக் கொலை வழக்கில்

# இராணுவத்தினர் தரப்பு ஆட்சேபணையை நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்று நிராகரிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 27

மட்டுவில் இளைஞர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினரின் தரப்பில் எழுப்பப்பட்ட ஆட்சேபனையை நிராகரித்தது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.

கொலை இடம்பெற்றதும் சாட்சியங்கள் பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலங்களின் உண்மைப் பிரதி அழிந்துவிட்ட நிலையில், அதன் நிழற்பிரதியை வைத்துக்கொண்டு சுருக்கமுறையற்ற விசாரணையை நீதிமன்றம் நடத்த முடியாது என்ற ஆட்சேபனையை குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்கள் எழுப்பியிருந்தார்கள். அதனை நிராகரித்த நீதிமன்றம் இந்த வழக்கு மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டு சட்ட மா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்போது, எதிரிகள் தரப்பு தமது ஆட்சேபனையை மேல் நீதிமன்றில் முன்வைக்க முடியும் என்று தெரிவித்தது.

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியில் தமிழ் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினரின் வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைக்காக வந்தது. சந்தேகநபர்களில் 5 இராணுவத்தினர் மன்றில் முன்னிலையாகினர். வழக்கின் 3ஆவது சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் உயிரிழந்துவிட்டார்.

வழக்குத் தொடுனர் தரப்பில் சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதியும் இராணுவத்தினர் சார்பில் தென்னிலங்கை சட்டத்தரணிகளும் முன்னிலையாகினர்.

"இராணுவத்தினருக்கு எதிரான சாட்சிகள் பொலிஸில் வழங்கிய வாக்குமூலங்களின் உண்மைப் பிரதிகள் இல்லை. அவற்றின் நிழல் பிரதிகளை வைத்து வழக்கை நடத்த முடியாது. அதனால் இந்த வழக்கிலிருந்து இராணுவத்தினர் ஐவரையும் விடுவிக்கவேண்டும்" என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கடந்த தவணையின்போது மன்றில் ஆட்சேபனை வெளியிட்டார்.

"சாட்சி ஒருவர் இல்லாதபோதுதான் அவர் வழங்கிய பொலிஸ் வாக்குமூலத்தின் உண்மைப் பிரதி இருக்கவேண்டும். ஆனால் இந்த வழக்கில் சாட்சிகள் மன்றில் தோன்றி சாட்சியமளிப்பதால், அவர்களின் பொலிஸ் வாக்குமூலத்தின் நிழல் பிரதியை முன்வைத்தால் போதும்" என்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் உரைத்திருந்தார்.

இரு தரப்புச் சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான், வழக்கை நிழல் பிரதியுடன் தொடர்வது தொடர்பில் எதிரிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை குறித்த மன்றின் கட்டளை வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதனடிப்படையில் எதிரிகள் தரப்பு விண்ணப்பம் நேற்று நீதிவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

வழக்கின் சுருக்கமுறையற்ற விசாரணைகள் வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி இடம்பெறும் என்றும் நீதிமன்று தவணையிட்டது.

**பின்னணி**

1997ஆம் ஆண்டு ஒக்டோபர் 28ஆம் திகதி இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இதனுடன் தொடர்புபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்தனர். 1998ஆம் ஆண்டு நீதிவான் நீதிமன்றம் குறித்த நபர்களுக்கு பிணை வழங்கியது.

இதனைத்தொடர்ந்து கிடப்பில் போடப்பட்ட வழக்கு 2016ஆம் சட்டமா அதிபரால் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் போரில் உயிரிழந்திருந்தனர். எஞ்சிய 14 இராணுவத்தினர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களில் 9 பேரை வழக்கிலிருந்து விடுவிக்க சட்ட மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கினார். ஏனைய 5 சந்தேகநபர்களுக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 1997ஆம் ஆண்டே விசாரணைகளை மேற்கொண்டிருந்த இராணுவப் பொலிஸார், கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் சங்கிலி மற்றும் கைக்கடிகாரம் என்பவற்றை முகாமுக்குள் இருந்து மீட்டிருந்தனர்.

(உ-103)

கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யும் வடமாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண தொழிற்துறைத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி, தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் புடவைக் கைத்தொழில் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தும்

'மாகாணக் கைத்தொழில் கண்காட்சி-2018'

இடம்: யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
காலை 9.00மணி- மாலை 6.00மணிவரை

ஜூலை 28,29

ஊடக அனுசரணை உதயன்



பிரதம விருந்தினர் : கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் – வடமாகாண சபை
அவர்களால் 28.07.2018 காலை 10 மணிக்கு கண்காட்சி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படும்

வடமாகாண கைப்பணியாளர்கள் மற்றும் நெசவாளர்களினால் உருவாக்கப்பட்ட பின்வரும் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன

கைத்தறி நெசவு உற்பத்திகள்
சாறி, பெற்சீட், தலையணை உறை, சாறம், துவாய்,
களிமண் உற்பத்திகள்
தும்பு, ஓலை, புல்சார்ந்த உற்பத்திகள்
பிரம்பு, மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள்
உலோகக் கைப்பணிப் பொருள்கள்
ஆபரணங்கள்
சங்கீத உபகரணங்கள்
துணிகளினாலான கைப்பணிப் பொருள்கள்
சிரட்டையிலான கைப்பணிப் பொருள்கள்..

சிப்பியிலான கைப்பணிப் பொருள்கள்
பட்டிக், ரேந்தை
மர உற்பத்திப் பொருள்கள்
தோற் பொருள்கள்
கல்லாலான கைப்பணிப் பொருள்கள்
வரைபுகளும் சிற்பங்களும் (பாரம்பரியக் கலை)
தென்னை, பனை சார்ந்த உற்பத்திகள்
நானாவித கைப்பணிப் பொருள்கள்
நினைவுச்சின்னங்கள்
போன்றன....

வடமாகாண உற்பத்தி... ...னைப் பொருள்களின் செய்முறை, விற்பனைக்
கூடங்களும், ஏனைய சி... விற்பனைக் கூடங்களும் அமைக்கப்படவுள்ளன

அனைவரையும் தவறாது பார்வையுற்று
பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தொழிற்துறைத் திணைக்களம், வடமாகாணம், கைதடி



கிளாலி புனித யாகப்பர் ஆலய திருநாள் நேற்று முன்தினம் சிறப்பாக நடை பெற்றது. அதனைத் தொடர்ந்து புனிதருடை சொருப பவனி இடம் பெற்றது.

## பேருந்து தரிப்பிட மண் அகழ்விலும் எலும்புகள் வெளிவருமா மக்கள் அச்சம்

மன்னார்,ஜூலை 27

நகர அபிவிருத்தி அமைச்சினால் , மன்னார் நகர மத்தியில் அமைக்கப்பட இருக்கும் புதிய பேருந்து தரிப்பிடத்திற்கான அடிக்கல் கடந்த 20ஆம் திகதி நடப்பட்டதை தொடர்ந்து அத்திபாரங்கள் கட்டுவதற்கான கிடங்குகள் வெட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் புதிய பேருந்து தரிப்பிடம் அமைவது பற்றி மக்களின் கருத்துக்களை கேட்டபோது,

மிக மோசமாக காணப்பட்ட மன்னார் பேருந்து தரிப்பிடம் தற்போது அபிவிருத்தியின் மூலம் புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கப்பட்டதானது மகிழ்ச்சி, மன்னாரில் மண் தோண்டும் இடமெல்லாம் எலும்புக் கூடுகளும் சட்டி பானைகளும் வருவது வழக்கம். பேருந்து தரிப்பிடத்திலும் அப்படி ஏதேனும் பொருட்கள் வெளிவந்தால் அவ்வளவுதான், தொல்பொருள் திணைக்களம் அபிவிருத்திப்பணியை நிறுத்திவிடும் இந்த விடயத்தில் அவதானமாக செயற்பட வேண்டும் என்று மக்கள் சிலர் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

அத்துடன் புதிய பேருந்து தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 180 மில்லியன் என்றபோதும் 113 மில்லியனுக்கே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக நகர சபை தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (213)



## பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்த படையினர்

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்தில் வீதிப்போக்குவரத்து பணிகளில் ஈடுபட்ட பொலிசாரின் நடவடிக்கைகக்கு படையினர் இடையூறு ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸ் அதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் கடந்த 19 ஆம் திகதி மாலை முல்லைத்தீவு உடுப்புக்குளம் வீதியில் வீதி போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்ட வேளை குறித்த வீதியில் கால்சட்டையுடன் இரண்டு படையினர் மதிவண்டியில் பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

இவர்களில் 59 ஆவது படைப்பிரிவினை சேர்ந்த அதிகாரி ஒருவர் பொது மக்களின் ஊர்தியினை சோதனை செய்து கொண்டு நின்ற பொலிஸாரின் பக்கம் வந்த குறித்த படையினன், பொலிஸாரை அவதூறாக பேசியுள்ளதுடன், பொதுமக்கள் முன்னிலையில் பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறாக நடந்துகொண்டுள்ளதாக கடமையில் ஈடுபட்ட வீதிபோக்குவரத்து பொலிசார் தமது நாளாந்த செயற்பாட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கமைய 20 ஆம் திகதி முல்லைத்தீவு நிலைய பொலிஸ் அதிகாரி குறித்த இரண்டு பொலிஸாரிடமும் இருந்து வாய்முறைப்பாடு எடுத்துள்ளதாகப் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி3)

# கடற்படையினரை வெளியேற்றி மக்களை குடியேற்றுங்கள்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

மன்னார்,ஜூலை 27

முள்ளிக்குளம் மக்களின் காணிகள் மற்றும் வீடுகளில் வசித்து வருகின்ற கடற்படையினரை உடனடியாக வெளியேற்றி முள்ளிக்குளம் மக்களை மீள் குடியேற்றம் செய்ய அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் துரித நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.



கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த முள்ளிக்குளம் மக்களின் காணிகளுக்குள் சுமார் ஒரு வருடங்களின்பின் கடந்த 18 ஆம் திகதி முள்ளிக்குளம் கிராம மக்கள் தமதுசொந்த நிலத்தில் கால் பதித்தனர்.

குறித்த மக்கள் காடுகளை துப்பரவு செய்து எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் தற்காலிகக் கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

அந்த மக்களை நேற்று முன்தினம் காலை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில், மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ், நானாட்டான் பிரதேசசபை உறுப்பினர்களான மரியசீலன், ஜீவன், ஏ.றொஜன் ஆகியோர் நேரடியாக சென்று பார்வையிட்டு அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மன்னார் மாவட்டம் முசலி பிரதேசச்செயலர்பிரிவுக்குட்பட்ட, முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது பூர்வீக கிராமத்திற்கு கடந்த ஒரு வராத்திற்கு முன்னர் செல்ல முயன்றுள்ளபோதும், கடற்படையினருடைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த மக்கள் தற்காலிகமாக முள்ளிக்குளம் ஆலயத்திற்கு முன்பாக செட்டியார்குளம் என்ற குளக் காணிக்குள் 50 குடும்பங்கள் வரை மரங்களுக்கு கீழே பிள்ளை களுடன் குடியேறியுள்ள னர்.

இதுவரை குறித்த 50 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக அவர்களுக்கு தேவையான உலர் உணவுகள், தரப்பால்கள், குடிநீர் வசதி போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

அங்குள்ள பங்குத்தந்தை மற்றும் அருட்சகோதரர்களின் உதவியுடன் அந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த கிராம மக்கள் கடந்த ஒரு வருடத்திற்கு முன் சுமார் 38 நாள்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

தமது பூர்வீக காணிகளில் இருந்து கடற்படையினரை வெளியேற்றி தமது சொந்த காணிகளில் குடியேற்ற கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தின் பின் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் ஒரு வருட காலம் கடந்துள்ள நிலையில் இது வரை நிறைவேற்றவில்லை.

இந்த நிலையில் ஒரு வராத்திற்கு முன் தமது காணிகளுக்குள் சென்றுள்ளனர்.

மக்கள் இருக்கின்ற இடத்தில் இருந்து சுமார் நூறு மீற்றர் தொலைவில் மக்கள் வீடுகளில் கடற்படையினரும், அவர்களுடைய குடும்பத்தினரும் வசித்து வருகின்றனர்.

இந்த நாட்டின் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் சமாதானம் வர வேண்டும் என கூறுகின்ற நிலையில் முள்ளிக்குளம் மக்களினுடைய வீடுகளில் இருக்கின்ற கடற்படையினரை உடனடியாக அகற்றி முள்ளிக்குளம் கிராம மக்களுக்கு அந்த வீடுகளும் காணிகளும் வழங்கப்பட வேண்டும்.

அவற்றை செய்வதன் ஊடாகவே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். - என்றார். (56)



### ஈருருளி வழங்கல்

தியாகராசா கமலசுதனின் நிதிப்பங்களிப்பினால் தரம் 7இல் கல்வி கற்கும் தி.தேனுசாவுக்கு கற்றலை மேம்படுத்தும் முகமாக ஈருருளி ஒன்று திருமதி தியாகராசாவால் வழங்கப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கலந்து கொண்டார்.



முல்லைத்தீவு மாத்தளன் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு கடந்த 24 ஆம்திகதி வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆண்டியையா புவனேஸ்வரனால் சி.பி.ஜி நிதி ஒதுக்கீட்டிலிருந்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டது. (222)

## வட மாகாணசபை உறுப்பினரால் உதவி வழங்கல்

வவுனியா,ஜூலை 27



வட மாகாணசபை உறுப்பினர் ப. சத்தியலிங்கத்தினால் வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள தமிழரசுக்கட்சியின் அலுவலகமான தாயகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக தையல் இயந்திரங்கள், சுயதொழில் முயற்சிக்கான பாத்திரங்கள், கால்நடை வளர்ப்பிற்கான காசோலைகள், கூரைத் தகடு என்பன வழங்கி வைக்கப்பட்டிருந்தது. மொத்தமாக நான்கு இலட்சத்து 30 ஆயிரம் பெறுமதியான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நகரசபைக்கு தெரிவு செய்யப்பட்டது. பரதலிங்கம், ரி. கே. இராஜலிங்கம், மற்றும் தமிழரசுக்கட்சியின் வவுனியா கிளை [illegible] சிவஜோதி ந. கருணாநிதி [illegible] (ந)

## "ஞானச்சுடர்" வெளியீடு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் ஆடிமாத இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குச் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுத கலாசுரபி செ.மோகனதாஸ் கலாமிசன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் வெளியீட்டுரையை பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்வி தயாளினி குமாரசாமியும், மதிப்பீட்டுரையை ஆசிரியர் சைவப்புலவர் சசிலேகா ஜெயராஜனும் நிகழ்த்துவர்.(173)

## "பண்பாட்டுப் பெருவிழா"

யாழ்ப்பாணம்,ஜூலை 27

யாழ்ப்பாணம் மாவட்ட கலை, கலாசாரப் பேரவையும் மாவட்டச் செயலகமும் இணைந்து வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் "பண்பாட்டுப் பெருவிழா" நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் காலை 9 மணிக்கு இடம்பெறும்.

மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதன்மைச் செயலர் அ.பத்திநாதன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அபிராமி பாலமுரளி, மதிப்புறு விருந்தினர்களாக வவுனியா மாவட்டத்தின் மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஸ்ணானந்தர், இணுவில் நாதஸ்வர மேதைகலாபூஷணம்இராசுசுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (147)

## பட்டமளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி தொலைக்கல்வி புறநிலை அலகுகளின் பட்டமளிப்பு நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைகாலை8.30மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். (162)

உறுப்பினர்கள் இலஞ்சம் வாங்கினரென

# அவதூறாகத் துண்டு அறிக்கைகள் விசாரிக்கும்வரை அமர்வு இல்லை

## வேலணை சபையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 27

**சபையின் உறுப்பினர்கள் இலஞ்சம் வாங்கினர் என்று தெரிவித்து அவதூறாக துண்டு அறிக்கைகள் வெளியிட்டவர்களை விசாரித்துத் தீர்வு முன்வைக்கும் வரையில் சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.**

வேலணைப் பிரதேச சபையின் அமர்வு தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது.இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் வசந்தகுமாரால் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வேலணைப் பிரதேச சபையால் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது.தண்ணீர் கொள்வனவு செய்யும் கிணறுகள் சிலவற்றில் நீர் உவர்த் தன்மை அடைந்ததால் நீரின் தேவை மற்றும் சிக்கன தன்மை அறிந்து தனியார் தாங்கிகளில் கொள்வனவு செய்வது மட்டுப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் கடந்த அமர்வில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.அதற்குப் பின்னர் சில பொது அமைப்புகள் தனியார் தாங்கிகளையும் தண்ணீர் எடுக்க அனுமதிக்கவேண்டும் என்று தெரிவித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஒரு துண்டு அறிக்கைகள் ஆர்ப்பாட்டக்காரர்களால் வெளியிடப்பட்டது.

தனியார் தாங்கிகள் மட்டுப்படுத்தப்பட்டபோதும் சர்வோதயம் என்ற அமைப்புக்கு மட்டும் தண்ணீர் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இந்த செயற்பாட்டுக்கு சபையின் நியமன உறுப்பினர்கள் இலஞ்சம் வாங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டு அந்த துண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டது.

ஆர்ப்பாட்டம் செய்த அமைப்பின் தலைவர் ஒருவர் சபையின் உறுப்பினராக இருக்கும் நிலையில் இந்தத் துண்டு அறிக்கைகள் சபையை,சபை உறுப்பினர்களை அவமதிக்கும் செயலாக உள்ளது.ஆகவே இது தொடர்பில் ஆர்ப்பாட்டம் செய்த அமைப்புகள் விசாரிக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் விவாதம் சபையில் நடைபெற்றது.ஆர்ப்பாட்டம் செய்த அமைப்புகளை விசாரிக்கவேண்டும் என்று கோரி உறுப்பினர்கள் ஆதரவுவழங்கினார். ஆர்பாட்டம்நடத்திய அமைப்பு ஒன்றின் தலைவராக உள்ளார் என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் க.நாவலனிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் நான் அந்த அமைப்பிலில்லை என்று பதில் அளிக்க அவையில் அமளிதுமளி ஏற்பட்டது.

இது தொடர்பில் தனியார் தொலைக்காட்சிக்கு அமைப்பின் தலைவர் என்ற ரீதியில் கருத்து ஒன்றை வழங்கியுள்ளார். ஆனால் இப்போது தலைவர் இல்லை என மழுப்பல் பதில் அளிக்கின்றார் என்று அவையில் தெரிவிக்கப்பட்டமையால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது.

நியமன உறுப்பினர்களுக்கு அவதூறு ஏற்படுத்தி துண்டு அறிக்கைகள் வெயிடப்பட்டதால் மிகுந்த விரக்திக்கு உள்ளாகியுள்ளோம் ஆகவே மான இழப்பீட்டு வழக்கு தொடுப்பதற்கு சபை அனுமதி வேண்டும்.அமைப்புகள் விசாரிக்கபடவேண்டும் அல்லது நியமன உறுப்பினர்கள் 8 பேரும் வெளிநடப்பு செய்வோம் என்று தெரிவித்த நிலையில் சபை ஒத்திவைக்கப்பட்டது. (7)

அநாதரவாகத் திரிந்த

## திசமகராகம முதியவர் கைதடி இல்லத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

எவரது துணையுமின்றி வடமராட்சிப் பிரதேசத்தில் நடமாடிய தென்பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கதிர்காமம் திசமகராகம பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதான பியதிசபன்டா என்ற முதியவர் வடமராட்சி பிரதேசத்தில் வீதிகளில் நடமாடிய நிலையில் பொதுமக்களால் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் மருத்துவமனை நிர்வாகத்தினரால் கைதடி முதியோர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டார் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

மனநிலை பாதிக்கப்பட்ட இந்த முதியவர் பற்றிய முழுமையான விவரங்களை அறியமுடியாது உள்ளன.முதியவரின் உறவினர்கள் இல்லத்துடன் தொடர்பு கொண்டு இவர் பற்றிய விவரத்தைத் தந்து உதவுமாறும் அவர் கேட்டுள்ளார். (17)



## திண்மக்கழிவு தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி

தென்மராட்சி, ஜூலை 27

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தில் முன்பள்ளிச் சிறார்களுக்கான திண்மக்கழிவு தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி வகுப்பு நேற்று பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது சாவகச்சேரி புனித தோமஸ் முன்பள்ளிச் சிறார்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (9)

## ஆக்கப் பொருள் கண்காட்சியும் பரிசில்கள் வழங்கலும்

தென்மராட்சி, ஜூலை 27

தென்மராட்சி கல்வி வலய ஆங்கில அலகினரால் நடத்தப்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வலய நிலை ஆங்கில மொழித்தினப் போட்டியின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும், பரிசில்கள் வழங்கலும் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிகக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (9)

## பெருந்திருவிழா

சுதுமலை, ஜூலை 27

யாழ்ப்பாணம், தாவடி தெற்கு கொக்குவில் திருவருள்மிகு சிறி ஆதிகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளைசனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி வெள்ளிக் கிழமை தேர் உற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (147)

***

கொடிகாமம், ஜூலை 27

யாழ்ப்பாணம் கொடிகாமம் அருள்மிகு சிறி மகா காளியம்பாள் திருக்கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தீத்தத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (159)

## நூல் வெளியீடு

பருத்தித்துறை, ஜூலை 27

ஆர்.எஸ்.ஆனந்தனின் "இருளைக்காட்டும் ஒளிகள்" சிறுகதை வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை ஞானாலயத்தில் (வி.எம்.றோட்)பருத்தித்துறை நகரசபை தவிசாளர் கலாபூஷணம் யோ.இருதயராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

# செயலமர்வும் நடமாடும் சேவையும்



யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் வடக்கு மாகாண பாடசாலையில் இந்த ஆண்டு ஜி.சி.ஈ .சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக அதிபர்களுக்கான செயலமர்வும், ஆசிரியர்களின் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளை அவர்களின் இடத்திலேயே தீர்த்து வைப்பதற்குமான நடமாடும் சேவை வடமராட்சி கல்வி வலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது பரீட்சைக்கு தோற்ற இருக்கும் ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியாக ஆய்வு செய்து அவர்கள் எந்தெந்த பாடங்களில் குறைவான மதிப்பெண்களை பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது என்பது பற்றியும், மாணவர்கள் உயர்தரத்துக்குசெல்லும் வாய்பை அதிகரிக்கவும் பாடசாலை அதிபர்களுக்கு புள்ளிவிவரத்தகவல்களுடன் விளக்கமளிக்கப்பட்டது

தொடர்ந்து வடமராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் அதிபர்கள்,ஆசிரியர்கள்,கல்வி சாரா ஊழியர்களின் நிர்வாக ரீதியிலான குறைகளை நிவர்த்தி செய்யும் நடமாடும் சேவை இடம்பெற்றது. இந்த நடமாடும் சேவைக்கு 62 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அவை அனைத்தும் உடனடியாகதீர்த்துவைக்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன்,கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார்,பிரதி மாகாண கல்விப் பணிப்பாளர்,கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அனந்தராஜ் மற்றும் மாகாண கல்வித்திணைக்கள அதிகாரிகள்,கல்வி அமைச்சின் அதிகாரிகள், வடமராட்சி வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சரவணமுத்து பொன்னம்பலம் ஆஸ்ரேலியாவில் அமரத்துவம் அடைந்தமையையிட்டு அஞ்சலி நிகழ்வு கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

# ஆளும்கட்சி மோதலால் அதிர்ந்தது மாகாண சபை

**சபைச் செய்தியாளர்**

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சிப் பிடுங்குப்பாடு, உள்வீட்டு மோதலால் நேற்றைய அமர்வு சூடு பிடித்தது. சிறப்பு அமர்வில் ஆளும் கட்சியில் ஒரு பிரிவினர் பங்கேற்காததால், கீரைக் கடைக்கும் எதிர்கடை இல்லாத நிலை இருந்தது. நேற்றைய அமர்வில் ஆளும் கட்சியின் எல்லாப் பிரிவினரும் பங்கேற்றனர். வழமைபோன்று 'பிச்சல் பிடுங்கலுடன்' சபை அமர்வு காரசாரமாக அமைந்தது.

வடக்கு மாகாண சபையின் 128ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக்காலை 9.45 மணிக்கு ஆரம்பமானது. யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கூட்டம் 2.30 மணிக்கு இருப்பதால் சபை அமர்வு மதியபோசனத்துடன் நிறைவுக்கு வரும் என்று அவைத் தலைவர் அறிவிப்புடன் சபை தொடங்கியது. சுகாதார அமைச்சின் குழுக் கூட்டம் பி.ப. 2மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது என்ற தகவல் அவைத் தலைவரின் காதுக்குச் சென்றதும் சூடாகினார். சபையில் சுகாதார அமைச்சர் இருக்கவில்லை. ஆனால் ஒரு வாங்கு வாங்கினார் அவைத் தலைவர். சபை அமர்வு நாள்களில் எப்படி 2 மணிக்கு கூட்டம் நடத்த முடியும். எங்கள் அமைச்சர்களே இப்படிச் செய்வதா? உறுப்பினர்கள் குழுக் கூட்டங்களுக்குச் செல்லாமல் புறக்க ணிப்பதுதான் சரியாக இருக்கும் என்று, பல தடவைகள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டிச் சலித்துப் போனதால் ஆத்திரத்தில் கொட்டித் தீர்த்தார் அவைத் தலைவர்.

## விக்கியின் அரைச் சதம்

எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் வில்லங்க மான கேள்விகளை எழுப்பியிருந்தார். முதலமைச்சரின் அமைச்சுப் பணியாளர்கள் சுற்றுலா அதிகார சபையுடன் இணைந்து சுற்றுலா அபிவிருத்தி தொடர்பில் ஆராயச் சென்றமை தொடர்பிலேயே கேள்வியிருந்தது. சுற்றுலா சென்றவர்களின் பெயர்களை எதிர்க்கட்சித் தலைவர் துருவித் துருவிக் கேட்டபோதும் முதலமைச்சர் வெளியிடவில்லை. சுற்றுலா அபிவிருத்தி என்ற பெயரில் முதலமைச்சரின் பணியாளர்கள் 'சுற்றுலா' சென்று வந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் கூற, ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன் கடுப்பேத்திறார் மைலாட் என்ற வடிவேலு பாணியில், கடுப்பேத்தாமல் போங்கே எதிர்க்கட்சித் தலைவரே என்றார். எதிர்க்கட்சித் தலைவர் சரி ஐயா என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார். முதலமைச்சர் வானூர்தியில் கொழும்பு சென்று வந்தமை தொடர்பில் அடுத்த கேள்வி அமைந்திருந்தது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் வானூர்தியைப் பயன்படுத்தி கொழும்பு சென்று வந்ததில் அரைச் சதம் அடித்துள்ளார். அதனை அவரே வெளிப்படுத்தினார்.

## வில்லங்கம்

கேள்வி பதில்களை முடித்துக் கொண்டு அவைத் தலைவர் அடுத்த விடயத்துக்குள் நகர முற்பட்டார். ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன், சிறப்புரிமை பிரச்சினை எழுப்பினார். அமைச்சர் அனந்தி சசிதரனுக்கு தன்னிலை விளக்கம் வழங்க வாய்ப்பு வழங்கப்பட்ட பின்னர் சிறப்புரிமையை எழுப்பலாம் என்று அவைத் தலைவர் கூற, அனந்தியின் சிறப்புரிமை தனிப்பட்ட விடயம். நான் எழுப்புவது இந்தச் சபையின் சிறப்புரிமை என்று தனது கோரிக்கையை நியாயப்படுத்த முனைந்தார் சயந்தன். இருப்பினும் அனந்திக்கு தன்னிலை விளக்கம் வழங்க வாய்ப்பு வழங்கப்பட்டது. கடந்த அமர்வில் ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின், தன்னிடம் கைத்துப்பாக்கி இருப்பதாக பொய்யுரைத்துள்ளார் என்று நீட்டி முழங்கினார். வடக்கின் முதல் பெண்மணி தானே என்று விளித்துக் கூறிக் கொண்டு முதல் பெண் அமைச்சரும் தானே என்றார் அனந்தி. தியாகி திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டத்தில், தான் 13 வயதாக இருக்கும்போதே கலந்து கொண்டவள் என்பதையும் உரையின் இடையில் கூறினார். இதன்போது குறுக்கிட்ட ஆளும்கட்சி உறுப்பினர் கே.சயந்தன், கடு மையான ஆட்சேபனையை எழுப்புவதாகக் கூற, வடக்கு முதலமைச்சர், அனந்தியின் உரை யைக் குழப்பாது பேசவிடுமாறு பரிந்துரைத்தார்.

## மோதல்

உச்சசத்தத்தில் உறுப்பினர்களின் உரைமோதல் தொடங்கியது. அனந்தி சசிதரன், அவைத் தலைவரைச் சீண்டிவிட, என்னை எரிச்சலூட்ட வேண்டாம் என்றார் அவைத் தலைவர். அஸ்மினால் அச்சுறுத்தல் என்று பொய் சொல்ல வேண்டாம். அதற்கு ஆதாரம் இருக்கா என்று அனந்தியிடம் கேள்வி எழுப்பினார் அவைத் தலைவர். இந்தச் சூடான விவாதத்தில் அனந்தி சசிதரன், தனதும், முதலமைச்சரினதும், கஜதீபனினதும், சிவாஜிலிங்கத்தினதும் வாக்குகளால் கிடைத்த நியமன ஆசனத்தில்தான் அஸ்மின் வந்தவர் என்று கூறினார்.

சூடாகிய அவைத் தலைவர், அப்ப எங்களுக்கு வாக்குகள் கிடைக்க வில்லையோ என்று கேள்வி எழுப்பினார். இல்லை, நான் முன்னிலை பெற்றவர்களது பெயர்களைச் சொன்னேன் என்று சமாளித்தார் அனந்தி. இந்த விடயத்தைப் பற்றிப் பிடித்த ஆளும் கட்சி உறுப்பினர் சுகிர்தன், மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் வாக்களித்தார்கள் என்று போடுபோட்டார்.

இந்தச் சூடான விவாதத்தில் ஆயுதம் வைத்திருப்பதற்கு சட்டரீதியான உரித்து உண்டு என்று அடிக்கடி எல்லா உறுப்பினர்களும் சொல்லிக்கொண்டே, அனந்தியின் கைத்துப்பாக்கி விவகாரத்தில் மோதிக் கொண்டார்கள்.

ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின், சபையில் பேசிய விடயத்துக்கு பொலிஸில் எப்படி முறைப்பாடு கொடுக்கலாம் என்று வரிந்துகட்டிக் கொண்டு மோதலுக்கு தயாரானார். குறுக்கிட்ட அவைத் தலைவர், சட்ட ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டி சபையில் பேசியதை நீதிமன்றில் கூட கேள்விக்கு உட்படுத்த முடியாது என்று முடித்துவிட்டார். சட்டம் தெரிந்தவர்களுக்கு அது தெரியும் என்று இடையில் ஒரு குத்தலும் விட்டார்.

## அனந்திக்கு வயது 16

அனந்தியின் உரையிலிருந்து மூன்று விடயங்களை அவைப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படவேண்டும் என்ற கோசத்துடன் மூக்கை நுழைத்தார் ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன். 'அஸ்மின் போன்றவர்கள் இங்கிருப்பதால் ஆபத்து' என்ற வசனத்தை பதிவேட்டிலிருந்து நீக்கவேண்டும். வடக்கு மாகாணத்தின் முதல்பெண்மணி என்று அனந்தி சொன்னார். வடக்கின் முதல் பெண்மணி, ஆளுநரின் மனைவி. தியாகி திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டம் நடக்கும்போது அனந்திக்கு வயது 16. ஆனால் அவர் இங்கே 13வயது என்று பொய் சொல்லியிருக்கின்றார் என்று தனது சட்டவாதத்தை முன்வைத்தார் சயந்தன்.

## இடுப்பை பார்க்கும் மக்கள்

அனந்தி சசிதரனை தமிழர்களின் எதிரிகள் தரப்பின் முகவர் என்று மறைமுகமாகக் கூறி மற்றொரு பிரச்சினையை கிளப்பிவிட்டார் அஸ்மின். தனது உரையில், அனந்தி கைத்துப்பாக்கிக்கு விண்ணப்பித்த ஆதாரத்தை சபையில் வெளிப்படுத்தினார். விண்ணப்பத் தின் பிரதியைக் காட்டி, அவருக்கு கைத்துப்பாக்கி கிடைத்துவிட்டது எனச் சொல்ல முடியாது என்று, அனந்திக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார் சிவாஜிலிங்கம். ஒரு இடத்தில் சுவிச் போட்டால் பல இடங்களில் லைட் எரியும். அது தெரிந்துதான் பேசுகின்றேன் என்று சிவாஜி லிங்கத்துக்குப் பதிலடி கொடுத்தார் அஸ்மின்.

சூடான சிவாஜிலிங்கம், அஸ்மினை அவரது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியே கட்சியிலிருந்து நீக்கிவிட்டது என்று கூற, இங்கு கட்சியில்லாதவர்கள் பலர் இருக்கின்றனர் என்று அவைத் தலைவர் தன்பங்குக்கும் ஒரு போடுபோட்டார். யாரோ ஒருவர் சபையில் பொய் சொல்லிக் கொண்டிருக்கின்றார் என்று ஈ.பி.டி.பி. உறுப்பினர் தவநாதன் குறிப்பிட்டார். உறுப்பினர்களிடம் ஆயுதம் இருக்கின்ற கருத்தால் மக்கள் போற இடங்களில் இனி இடுப்பைப் பார்க்கப் போகினம் என்று குறிப்பிட்டார்.

## பொய்

எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, இந்தச் சபையில் பொய்தான் அதிகமாகப் பேசப்படுகின்றது என்று தொடங்கினார். கடந்த அமர்வில் அதனைச் சுட்டிக்காட்டினான் என்று பீடிகையும் போட்டார். எனக்கு ஞாபகம் இல்லை என்று, எதிர்க்கட்சித் தலைவரின் வாயைக் கிளறினார் அவைத் தலைவர். அமைச்சர் சபை தொடர்பில் ஆளுநர் கடித விவகாரத்தில் முதலமைச்சர் பொய் கூறியதை அவர் முன்வைக்க, அவைத் தலைவர், முதலமைச்சரை அந்த விடயத்தில் காப்பாற்றி விட்டார். சற்றுக் கடுப்பான எதிர்க்கட்சித் தலைவர், உங்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை என்று கூறி அமர்ந்துவிட்டார். மீண்டும் துப்பாக்கி விடயத்து அவை திரும்பியது. தன்னிடம் துப்பாக்கி வைத்திருப்பதாகச் சொன்னால் அதை நிரூபிக்கவேண்டும். விண்ணப்பிப்பது வேறு. அது கிடைப்பது வேறு. எனது முகவரிக்கு துப்பாக்கி கிடைத்தாகச் சொன்னதற்கு ஆதராம் சமர்பிக்கவேண்டும் என்று அனந்தி விடாப்பிடியாக நின்றார்.

## இரண்டுமே ஒன்றுதான்

ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன், விண்ணப்பிப்பதும், ஆயுதம் வைத்திருப்பது என்று கூறுவதும் தவறில்லை என்று சட்டவியாக்கியானம் கொடுத்தார். இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தந்த துப்பாக்கி கொஞ்ச காலத்துக்கு முன்னர்தான் கொடுத்தேன். என்னிடம் கேட்டிருந்தால் நானே தந்திருப்பேன் என்றார். சிலபேர் அனுமதியோட கைத்துப்பாக்கி வைத்திருக்கின்றார்கள், சில பேர் அனுமதியில்லாமல் கைத்துப்பாக்கி வைத்திருக்கின்றார்கள். இன்னும் சிலர் நாங்கள் எல்லாம் திருப்பிக் கொடுக்கேல்ல என்று இப்பச் சொல்லுறவர்களும் இருக்கின்றார்கள் என்று ஆளும் கட்சி உறுப்பினர் சத்தியலிங்கம், சிலருக்குச் 'சூடு' வைத்தார்.

## வலி தெரிகிறதா?

நாங்கள் அமைச்சராக இருந்தபோது எங்களுக்கு எதிராக திருமதி அனந்தி சசிதரன் குற்றச்சாட்டு முன்வைத்தார். விசார ணைக்குழு முன்பாக அவர் வரவில்லை. ஒரு உறுப்பினருக்கு எதிராக குற்றம் சுமத்தி னால் அது பொய்யாக இருந்தால் அதன் வலி எப்படி இருக்கும் என்பது இப்போது அவருக்குப் புரிந்திருக்கும் என்று சத்தியலிங்கம் சாட்டையடி கொடுத்தார். அமைச்சர் அனந்தி சசிதரன் எந்தப் பதிலும் உரைக்காமல் அமைதியாக இருந்தார். இந்தப் பேச்சுக்குள் மூக்கை நுழைத்த சயந்தன், அமைச்சராக இருந்த சத்தியலிங்கம் கோப்புக்களை களவாடிச் சென்றார் என்று பொய்யுரைத்தார்கள். அந்தப் பொய்யுரைப்பு இன்னமும் மீளப்பெற்றுக் கொள்ளப்படவில்லை என்று முதலமைச்சரை மறைமுகமாகச்சாடினார்.

## அமைச்சர் சபையா வாரியமா?

துப்பாக்கி விவகாரம் ஓய்ந்ததும், சயந்தனின் சிறப்புரிமை பிரச்சினை சபையில் எடுக்கப்பட்டது. துப்பாக்கியால் சூடாகியிருந்த சபையில் குட்டிக் கதையுடன் தனது விடயத்தை தொடங்கினார் சயந்தன். கணவன் தொடர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்று மனநல மருத்துவரிடம் மனைவி சென்றாராம். இதற்கெல்லாம் மனநல மருத்துவரை நாடவேண்டியதில்லை. தொலைக்காட்சிக்கான சுவிச்சை நிறுத்தினால் போதும் என்றார் மனநல மருத்துவர். அதை நிறுத்திய பின்னர் 'ரோச்' அடிச்சு தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்று மனைவி சொன்னார். அதைப்போன்றுதான் இங்கும் நிலமை இருக்கின்றது - என்றார்.

வடக்கு அமைச்சரவை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அது நடைமுறைப்படுத்தும் வரையில் மாகாணத்தின், சட்டவாக்க, நிறைவேற்று நிர்வாகத்துறை இயங்க முடியாது. சபை அமர்வுகள் நடத்துவதில் பயனில்லை. அது நிறைவேற்றப்படும் வரையில் சபை அமர்வை ஒத்திவைப்போம் என்று குண்டொன்றைப் போட்டார். இந்த விவகாரத்தில் உரையாற்றிய சிவாஜிலிங்கம், நீதிமன்றம் 7 அமைச்சர்கள் என்று சொல்லியிருக்கின்றது என்பதைச் சொல்ல எதிர்க்கட்சித் தலைவர், சபையை தவறாக வழிநடத்தவேண்டாம் என்று கூறி நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பில் கருத்துச் சொல்ல முற்பட்டார். குறுக்கிட்ட அவைத் தலைவர், அதைச் சொல்வதற்கு நான் இருக்கின்றேன். அதைச் சொல்கின்றேன் என்றார் கடுப்பாக. இதேவேளை, சிவாஜிலிங்கம் எங்களைப் போன்றவர்கள் பதவியிலிருந்தால் இந்த விடயம் எல்லாம் ஒரு நாளில் தீர்க்கப்பட்டிருக்கும் என்றார். சிவாஜி லிங்கம் யார் சார்பில் பேசுகின்றார் என்று திடீரென கேள்வி எழுப்பினார் சயந்தன். அவருக்கு வந்த சந்தேகத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எனது கட்சியான ரெலோ சார்பில்தான் பேசுகின்றேன் என்;று சூடாகச் சொன்னார் சிவாஜிலிங்கம்.

விவாதத்தில் குறுக்கிட்ட அவைத் தலைவர், இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முடியும் என்று எண்ணுகின்றேன். ஆளுநர், முதலமைச்சருடன் பேசியிருக்கின்றேன் என்றார். அமைச்சர் வாரியம் தொடர்பான தங்கள் செய்தி ஆறுதலாக இருக்கின்றது என்றார் சயந்தன். சிவாஜிலிங்கம், அமைச்சர் வாரியம் அல்ல அமைச்சர் சபை என்று சிரித்துக்கொண்டே சொன்னார். சயந்தனும் சிரித்துக்கொண்டே, நன்றி தமிழராசிரியர். ஈழப்போரில் தமிழ்நாட்டின் தாக்கத்தின் கனதி அது என்று தனது தவறை தமிழகத்தின் மீது பழிபோட்டார். தேநீர் இடைவேளைக்குச் செல்லும்போது விவா தத்தின் சூடு தணிந்திருந்தது.

## எனக்கொரு உண்மை தெரிஞ்சாகனும்

தேநீர் இடைவேளையின் பின்னர் பேசத் தொடங்கிய ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன், எனக்கொரு உண்மை தெரிஞ்சாகனும் என்ற பீடிகையுடன் தொடங்கினார். நியதிச் சட்டங்கள் மாகாணசபையில் தேக்கமடைந்திருப்பதாகச் சொல்லப்படுகின்றதே என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு உண்மை தெரிய வேண்டும் என்றார். அவைத் தலைவர் ஒவ்வொரு நியதிச் சட்டமும் என்ன நிலையில் இருக்கின்றது என்பதைப் பட்டியலிட்டார்.

மீன்பிடி நியதிச் சட்ட வரைவை, மாகாண அமைச்சர் சிவநேசனிடம் பெப்ரவரி மாதம் கையளித்துவிட்டேன். அதற்கு என்ன நடந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார். காணாமல் ஆக்கப்பட்டோர் தமது பிள்ளைகளை இன்னாரிடம் ஒப்படைத்தேன். அவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்பதைப் போன்று கேட்கவேண்டியுள்ளதாக சலித்துக் கொண்டார்.

சபை மதியபோசனத்துக்காக நெருங்கிக் கொண்டிருக்கையில் கல்வி அமைச்சரின் நடமாடும் சேவை தொடர்பில் வில்லங்கம் வெடித்தது. நடமாடும் சேவையில் ஒரு நாளில் பிரச்சினை தீர்க்க முடிந்தால், அதிகாரிகள் இவ்வளவு காலமும் வேலை செய்யவில்லை என்பதுதானே அர்த்தம் என்று அவைத் தலைவர் கேள்வி எழுப்பினார். அதிகாரிகளைப் பாதுகாக்கும் வகையில், ஆசிரியர்களும் இதுவரை முறைப்பாடு செய்யவில்லை. சிலர் போதுமான ஆவணங்களுடன் முறைப்பாடு செய்யவில்லை என்று கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் சமாளித்தார். வழமையாக அமைச்சர் சபைக்கு சார்பாக குரல்கொடுக்கும் சிவாஜிலிங்கமும், சர்வேஸ்வரனுடன் முட்டி மோதிக் கொண்டார். ஆசிரிய இடமாற்றம் தொடர்பிலும் காரசாரமாக கருத்துக்களால் மோதிக் கொண்டனர் உறுப்பினர்கள். நடமாடும் சேவை ஊடாக அரசியல் செயற்பாட்டில் கல்வி அமைச்சர் ஈடுபடுகின்றார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. கல்வி அமைச்சர் மாகாண சபை உறுப்பினர்களை நடமாடும் சேவைக்கு அழைக்கவில்லை என்பது தொடர்பிலும் பிரஸ்தா பிக்கப்பட்டது.

## அதிகாரிகள் பிரச்சினை

கல்விப் பணியாளர்களின் பிரச்சினை தீர்ப்பது தொடர்பான நடமாடும் சேவை. பொதுமக்களின் பிரச்சினை பற்றி ஆராயப்படாது என்று கல்வி அமைச்சர் கூறியிருந்தார். இதற்கு அழைக்கப்படாமை தொடர்பில் பிரச்சினையில்லை என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் கூற, அதிகாரிகளின் பிரச்சினைகளை உறுப்பினர்கள் பார்க்கக் கூடாதோ என்று வில்லங்கமான கேள்வி எழுப்பினார் சிவாஜிலிங்கம். கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், ஆசிரியர்களின் முறைப்பாடுகளை தனது முகவரிக்கு அனுப்புமாறு கோரியிருந்தார். கல்வி அமைச்சரின் செயலரிடம் அனுப்புவதுதானே முறைமைஎன்று புதுக்குண்டைப் போட்டார் ஆளும் கட்சி உறுப்பினர் சுகிர்தன்.

அமைச்சர்களை புதன்கிழமைகளில் சந்திப்பதற்கு பலர் வருகின்றார்கள். தங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதற்காகத்தான் அவர்கள் எங்களிடம் வருகின்றார்கள் என்று சப்பைக்கட்டு கட்டினார் சர்வேஸ்வரன். இதன்போது சர்வேஸ்வரனுக்கு ஆதரவாக அவரது கட்சி உறுப்பினர் இந்திரராசா கருத்துரைத்தார். சூடாகிய சுகிர்தன், கல்வி அமைச்சரைப் பாதுகாக்கும் வகையில் பேசவேண்டாம் என்றார். இருவருக்கும் இடையில் கருத்து மோதல் நடந்தது. நடமாடும் சேவையில் எப்போது பிழைபிடிக்கலாம் என்று பார்த்திருந்து பிழைபிடிக்கின்றார்கள் என்று குறைப்பட்டுக் கொண்டார் சர்வேஸ்வரன். இந்த மோதலுடன் சபையின் அமர்வும் நிறைவுக்கு வந்தது.

# வலி உணரும்போதுதான் தெரியும்: அனந்திக்கு சத்தியலிங்கம் பதிலடி

யாழ்ப்பாணம், ஜூலை 27

**அமைச்சர்களான எங்கள் மீது முதலமைச்சர் நியமித்த விசாரணைக்குழுவில் முறைப்பாடுகளைக் கொடுத்தவர் திருமதி அனந்தி சசிதரன். அது தொடர்பில் எத்தனை விடயங்கள் எங்கள் தொடர் பில் ஊடகங்களில் வந்தது? இப்போது அவருக்கு அது விளங்கும். ஒரு உறுப்பினரின் மதிப்பைப் பாதிக்கும் வகையில் நாங்கள் செயற்படும்போதான வலி, அதனை உணரும்போதுதான் தெரியும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், மாகாணசபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

சத்தியலிங்கத்தின் குற்றச்சாட்டுத் தொடர்பில் திருமதி அனந்தி சசிதரன் பதில் ஏதும் கூறவில்லை.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், திருமதி அனந்தி சசிதரன் கைத்துப்பாக்கி வைத்திருப்பது தொடர்பில்ஆளும்கட்சிஉறுப்பினர்அஸ்மினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு, அனந்தி தன்னிலை விளக்கமளித்தார். இந்த விவாதத்தில்உரையாற்றுகையிலேயே ப.சத்தியலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொய்யான விடயங்களைக் குறிப்பிட்டு உறுப்பினர் மீது அபாண்டமாக பழிசுமத்தும்போது அவருடைய மனநிலை என்ன என்பதை இந்தச் சபை இப்போது புரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன். சத்தியலிங்கம், டெனிஸ்வரன் களவெடுத்தார்கள் என்று இங்குள்ள உறுப்பினர்கள்தான் முறைப்பாடு கொடுத்தார்கள். தீரவிசாரிக்காமல் அவர்கள் கொடுத்த முறைப்பாடுகளால் எங்கள் மனம் எவ்வளவு துன்பப்பட்டிருக்கும். இதனை சம்பந்தப்பட்டவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அமைச்சர் அனந்தி சசிதரன்தான் முதலமைச்சர் நியமித்த விசாரணைக்குழுவில்எனக்குஎதிரான முறைப்பாடுகளைக் கொடுத்தார். இப்போது அவருக்கு விளங்கும். உறுப்பினரின் மதிப்பை பாதிக்கும் வகையில் நாங்கள் செயற்படும்போது அதன் வலி உணரும்போதுதான் தெரியும் - என்றார். (5,26)

## அதிகார முறைகேடுகளில் வடக்குக் கல்வி அமைச்சர்

### குற்றஞ் சுமத்துகிறார் சுகிர்தன்

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை தனது பெயருக்கு முறைப்பாடுகளைத் தெரிவிக்குமாறு கூறியதன் ஊடாக, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் முழுமையான நிர்வாக முறை கேட்டில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு வடக்கு மாகாணசபை ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் குற்றம்சுமத்தினார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்விலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது, வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நடமாடும் சேவை நடத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை தனக்கு முறைப்பாடு செய்யுமாறு கல்வி அமைச்சர் கோரி யிருந்தார். கல்வி அமைச்சின் செயலர் ஊடாகத்தான் முறைப்பாடுகள் செய்யப்படவேண்டும். ஏன் கல்வி அமைச்சர் இவ்வாறு செயற்பட்டார் என்று கேள்வி எழுப்பினார்.

'ஒவ்வொரு புதன்கிழமையும் அமைச்சர்கள் ஒவ்வொருவரும் மக்களைச் சந்திக்கின்றார்கள். அதிகாரிகளே எல்லாம் செய்வது என்றால், மக் கள் சந்திப்புத் தேவையில்லையே?. சின்ன விடயத்துக் கும் மக்கள் அமைச்சர்களைத் தான் நாடுகின்றார்கள். நாங்கள் தவறான கலாசாரத்தை பரப்பியிருக்கின்றோம். அதிகாரிகளால் தீர்க்க முடியாததை நாங்கள்தான் தீர்க்கவேண்டும். எங்களின் மேற்பார்வையில் அதி காரிகள் தான் நடமாடும் சேவை நடத்துகின்றார்கள்' என்று கல்வி அமைச்சர் பதிலளித்தார்.

'அமைச்சர் பக்கச்சார்பாகச் செயற்படமுடியும். அவர் அரசியல்வாதி. அவர் தனக்கு வேண்டத்தகாதவர்களின் முறைப்பாடுகளை குப்பையில் போடமுடியும். அதிகாரிகள் முன்னெடுப்பது தான் பொருத்தமானது' என்றார் சுகிர்தன்.

நடமாடும்சேவை ஊடாக ஒரே நாளில் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றால் அதிகாரிகள் இதுவரை அதனைச் செய்யவில்லை என்றுதானே அர்த்தம். அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள். சில அதிகாரி கள், ஆசிரியர்களை மதிப்பதில்லை. இதுதான் இங்கேயுள்ள பிரச்சினை என்றார் அவைத் தலைவர்.

'சில ஆசிரியர்கள் இதுவரை முறைப்பாடு செய்யவில்லை. சிலர் போதிய ஆவணங்கள் இல்லை என்று முறைப் பாடு செய்யவில்லை. நடமாடும் சேவை யில் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது' என்றார் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன். (5,26)

## எதிரிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு எம்மவர்களும் துணை

### அனந்தி விவகாரத்தில் அஸ்மின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

எமது மக்களைப் பலவீனப்படுத்தும் எதிரிகளின் நிகழ்ச்சி நிரல்கள் தொடர்கின்றது. அதற்குத் துணைபோகும் எம்மவர்களின் செயல் திட்டங்களையும் எமது மக்களும் நம்பி ஏமாந்து கொண்டேயிருக்கின்றார்கள். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

அனந்தி தன்னிலை விளக்கம் வழங்கிய பின்னர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ் பேசும் மக்கள் அப்பாவித்தனமானவர்கள். உணர்சிகளே அவர்களை ஆட்சி செய்கின்றன. இத்தகைய உணர்வுபூர்வமான விடயங்களை தமக்கான மூலதனமாகப் பயன்படுத்துகின்றார்கள். இறுதியில் அனுதாபிகளாக இருந்த மக்களே பாதிக்கப்படுகின்றார்கள்.

நான் முஸ்லிம் என்பதால் வடக்கிலே தமிழ் மக்களின் அநீதிகள் குறித்துப் பேசாமல் இருக்கவோ அல்லது தமிழ் மக்களிற்கு இடம்பெறும் வெட்டுக்குத்துகள் குறித்து பேசாமல் இருக்கவோ போவதில்லை. எந்த இடத்திலும் வெளிப்படையாக உண்மையைப் பேசவும் நீதி நியாயத்தை எடுத்துரைக்கவும் தயங்கியது கிடையாது.

2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தல் காலத்திலே திட்டமிட்ட வகையில் எமது எதிரிகளால் யாழ்ப்பாணத்திலே மேற்கொள்ளப்பட்ட பெண் வேட்பாளர் மீதான தாக்குதல், பெண் வேட்பாளரை மையப்படுத்திய போலியான உதயன் பத்திரிகை வெளியீடு எனத் தொடங்கி இன்றுவரை பல்வேறு விடயங்கள் எமது எதிரிகளின் பிரத்தியேகமான முகவர்கள் காய்களை நகர்த்தி செய்விக்கின்றார்கள். தமிழ் மக்களின் உரிமைகளை ஜனநாயக ரீதியான போராட்டங்களை எவ்வாறு உள்ளுக்குள் இருந்து இயக்குகின்றார்கள் என்கிற பல்வேறு விடயங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

எமது மக்களை பலவீனப்படுத்தும் எதிரிகளின் நிகழ்ச்சி நிரல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. அதற்குத் துணைபோகும் எம்மவர்களின் செயற்றிட்டங்களையும் எமது மக்களும் நம்பி ஏமாறுகின்றார்கள் - என்றார். (5,26)

## ஆயுதம் எனக்குப் புதிதில்லை ஆனால் ஆதாரம் வேண்டும்

### சபையில் அனந்தி

யாழ்ப்பாணம், ஜூலை 27

போராட்டமோ, ஆயுதமோ எனக்குப்புதிதில்லை. ஆனால், நான் கைத்துப்பாக்கி வைத்திருக்கின்றேன் என்ற குற்றச்சாட்டுக்குஉரியஆதாரம்சபையில் சமர்பிக்கப்படவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. கடந்த சிறப்பு அமர்வில், ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின், திருமதி அனந்தி சசிதரன் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதிபெற்று கைத்துப்பாக்கி வைத்திருப்பதாகக் குற்றம் சுமத்தியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டுக்கு அனந்தி தன்னிலைவிளக்கம் நேற்று வழங்கினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

என் மீது உறுப்பினர் அஸ்மின் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். ஆயுதத்தில் நான் விருப்பம் கொண்டவர் போன்று காண்பிக்க முயற்சித்துள்ளார்கள். அது உண்மைக்குப் புறம்பானது. குற்றச்சாட்டு முன்வைத்தால், அதற்கு ஆதாரமும் சமர்பித்திருக்கவேண்டும். நான் வெளிமாகாணங்களுக்குச் சென்றுவரும்போது இந்தக் குற்றச்சாட்டால் ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரிடும். எனது அரசியல் பிரவேசம் நான் விரும்பிப் பெற்றதல்ல. வடக்கின் முதல் பெண்மணியாக, முதலாவது பெண் அமைச்சராக நான் இருக்கின்றேன்.

அவர்களின் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கு என்னைப் பலிக்கடாவாக்க முயற்சிக்கின்றார்கள். நான் 13வயதிலேயே, தியாகி திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டேன். அரச பணியாளராக இருந்தபோது 1995ஆம் ஆண்டு இலங்கைக்கு பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வருகை தந்தபோது நானும் ஏழு அரச பணியாளர்களும் கொழும்பு சென்ற போது மூன்று நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டோம். 1996ஆம் ஆண்டு சூரியகதிர் நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மூன்று நாள்கள் கடும் சித்திரவதைக்கு உட்பட்டேன். இந்த விடயங்கள் சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

அரசினால் தொடர்ச்சியான அச்சுறுதலுக்கு உள்ளாகியவள் என்ற வகையில் இந்த நாட்டின் மக்கள் தங்களுடைய பாதுகாப்புக்காக அரசிடம் ஆயுதத்தை அல்லது பாதுகாப்பைக் கேட்கின்ற நிலையிலேயே ஒட்டுமொத்த மக்களும் இருக்கிறார்கள். இவர் போன்ற உறுப்பினர்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதத்தைக் கேட்க வேண்டும்.

ஆயுதத்தை நான் வைத்திருந்தால் அதனை ஏன் வெளியில் தெரியத்தக்கதாக கொண்டு செல்லவேண்டும். என்மீதான குற்றச்சாட்டு என்ன நோக்கத்துக்காக முன்வைக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுக்;கு சபை கண்டிக்கவேண்டும். அவைத் தலைவர் பாதுகாப்பு அமைச்சிடம் இது தொடர்பில் ஆராய்ந்து உண்மையைச் சபைக்குச் சொல்லவேண்டும் - என்றார். (5,26)

## தொண்டர் ஆசிரியர் நியமனங்களால் வடக்கில் பெரும் பிரச்சினை ஏற்படும்

### எச்சரிக்கின்றார் ஆளும் கட்சி உறுப்பினர் அரியரட்ணம்

தற்போது வழங்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர் நியமனங்களால் அடுத்த ஆண்டு பெரும் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதாக வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும், முன்னாள் கல்விப் பணிப்பாளருமான ப.அரியரட்ணம் எச்சரிக்கைவிடுத்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கல்வி தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தொண்டர் ஆசிரியர்களாக 182பேருக்கு இந்த ஆண்டு ஆரம்பத்திலும், 457பேருக்கு கடந்த வாரமும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களைக் கொண்டு ஆசிரிய வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்படுகின்றன. அடுத்த ஆண்டு ஜனவரியில் இவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் செல்ல வேண்டும். இரண்டு ஆண்டுகள் அங்கு பயிற்சிபெற்ற பின்னர் தான் கல்லூரிகளுக்கு மீண்டும் நியமிக்கப் படுவார்கள். ஜனவரி மாதம் ஏற்படும் வெற்றிடத்தை எப்படி நிரப்பப் போகின்றோம்?

இங்குள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு 200பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள். 639பேரும் விண்ணப்பித்தாலும், 200பேருக்கு மாத்திரம்தான் அனுமதி என்றால், தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு முடிய 2024 ஆம் ஆண்டு ஆகிவிடும். முதலில் பயிற்சி பெற்று வெளியேறியவருக்கும் 2024ஆம் ஆண்டு பயிற்சி பெற்று வெளியேறுபவருக்கும் இடையில் 8 ஆண்டுகள் சேவைக்கால இடைவெளி இருக்கப் போகின்றது.

ஜனவரி மாதம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு எல்லோரும் செல்வதற்கு நிற்கப் போகின்றார்கள். தமக்கு இடம் கிடைக்காத வர்கள் திருப்பியும் போராட்டம் நடத்துவார்கள். இங்குள்ள பயிற்சிக் கலாசாலை மாத்திரம் அல்லாது ஏனைய இடங்களிலும் உள்ள பயிற்சிக் கலாசாலைக்கு இவர்களை அனுப்பவேண்டும். இதனூடாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் - என்றார். (5.26)

## வவுனியா வடக்கில் நடந்த காணி கைமாற்றல் குறித்து விசாரணை

### மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப் பகுதியில் வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஏ9 வீதியில் நடைபெற்றதாக கூறப்படும் காணி கைமாற்றல் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி அவை பற்றிய விவரத்தினை இந்தச் சபைக்குத் தெரியப்படுத்துமாறு வடக்கு மாகாண காணி அமைச்சரையும், வடக்கு மாகாண காணி ஆணையாளரையும், வடக்கு மாகாண தலைமைச் செயலரையும் இந்தச் சபை கோருகின்றது என்ற தீர்மானம் நேற்று நிறைவேற்றப் பட்டது.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் சமர்பிக்கப்பட்ட தீர்மானம், சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சரும், காணி அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், காணி கைமாற்றல் தொடர்பில் என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பினார். அதனை நீங்கள் முழுமையாக விசாரியுங்கள் என்று தீர்மானத்தைமுன்மொழிந்து உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் பதிலளித்தார்.

எல்லைப் பிரதேசத்தை தெளிவாக அடையாளப்படுத்தவேண்டும் என்று அவைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். இராமனூர்புளியங்குளத்திலிருந்து கனகராயன் குளம் குஞ்சுக்குளம் வரையிலான பகுதி என்று ஆளும் கட்சியின் மற்றொரு வவுனியா மாவட்ட உறுப்பினர் எம்.தியாகராசா பதிலளித்தார். (5,26)

## மாவனல்ல அபிவிருத்திக்கு 70 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 25
மகிந்த ராஜபக்ச ஆட்சியில்கூடச் செய்யப்படாத பெரும் அபிவிருத்தி வேலைகள் தெற்கின் மாவனலை தேர்தல் தொகுதியில் ஆறு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக 70 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்தார்.
கிருங்குதெனிய வட்டாரத்தில் 60 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள நான்கு உள்ளூர் வீதிகளுக்கான அடிக்கல்நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்காகப் பாடுபட்டவர்களுக்காக தொழில்வாய்ப்புகள், சமுர்த்தி நிவாரணம், காணி உறுதிப்பத்திரம் வழங்குதல், தொழில் வாய்ப்பு வசதிகள் வழங்கப்படும். இன்னும் இன்னோரன்ன பல பிரச்சினைகளுக்குத் துரித கதியில் நடவடிக்கை எடுக்கப்படும்.
இந்த அரசால் ஒன்றும் செய்ய முடியாது என்று சிலர் கூறுகின்றார்கள். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுக்குப் பின்னர் இந்த அரசு இல்லாமற் போய்விடும் என்றும் இன்னும் சிலர் கூறுகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி விளம்பரம் இல்லாமல் சேவைகள் செய்யும் கட்சி.
மூன்று வருடங்கள் ஆட்சியைக் கைப்பற்றி இருந்தாலும், கடன் சுமையை இறக்க வேண்டிய நிலைக்குத் தலைமை அமைச்சர் தள்ளப்பட்டிருந்தார். அந்தக் கடன்களைச் செலுத்த வேண்டியிருந்தது. நாங்கள் வேலை செய்தோம். 100 நாள் வேலைத் திட்டத்துக்குள் மாவனலைத் தேர்தல் தொகுதிக்குள் பெரியளவிலான பாதை வேலைகள் செய்துள்ளோம்.
அதற்கு நாங்கள் விளம்பரம் செய்யவில்லை, ஊடகங்களில் விளம்பரப்படுத்தவும் இல்லை. கடந்த அரசு மலசலகூடம் கட்டினாலும் மகிந்த ராஜபக்சவின் படத்தை அங்கு தொங்கவிடும். அதற்கு 25 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டிருக்கும் - என்றார். (4)


சீனாவிடம் நிதி பெற்ற விவகாரத்தில்

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் மகிந்தவுக்கு எதிராக வரலாம்

ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு, ஜூலை 27
**முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்குச் சீனா நிதியுதவி வழங்கியதாக நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பான உறுதியான தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெற்றால், மகிந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்குத் தயங்கமாட்டோம் என்று சுற்றாடல் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அஜித் மன்னபெரும தெரிவித்தார்.**

கொழும்பு பிட்டகோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
முதலாவது மேல் நீதிமன்றப் பணிகளை விரைவாக ஆரம்பிக்கவுள்ளோம். அந்தப் பணிகள் ஆரம்பித்த பின்னர் முன்னைய ஆட்சியினதும் தற்போதைய ஆட்சியினதும் மோசடிகளுக்குச் சட்டம் கையாளப்படும் விதத்தை நாட்டு மக்களும் பார்த்துக் கொள்ள முடியும்.
முன்னைய ஆட்சியின்போது பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இலஞ்சம் வழங்கியுள்ளனர். இதன் காரணமாகக் குறித்த உறுப்பினரின் பதவி பறிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கைக்கே அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. எதற்காகப் பிரிட்டன் நாடாளுமன் உறுப்பினருக்கு இலஞ்சம் வழங்கப்பட்டது என்பது தெரியாது உள்ளது. அது தொடர்பில் விசாரணை செய்ய வேண்டும்.
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்குச் சீனா நிதியுதவி வழங்கியதாக நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை மையமாக வைத்து முன்னாள் அரசதலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியாது. என்றாலும் அந்தச் செய்தி தொடர்பான உறுதியான தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெற்றால் மகிந்தவுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவர முடியும். அதற்குத் தயங்க மாட்டோம்.
முன்னைய ஆட்சியின் மோசடி தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. நடவடிக்கையைத் துரிதமாகச் செயற்படுத்த முடியாது. இலங்கையின் நீதிக் கட்டமைப்பின்படி வழக்குகள் முடிவுறுவதற்கு நீண்டகாலம் தேவைப்படுகின்றது. அதற்காகவே மேல்நீதிமன்றை அமைக்கத் தீர்மானித்து நாடாளுமன்றிலும் அதற்கெனச் சட்டம் இயற்றினோம். தற்போது மூன்று மேல் நீதிமன்றங்களில் முதலாவது மேல்நீதிமன்றப் பணிகளை விரைவாக ஆரம்பிக்கவுள்ளோம்.
அந்தப் பணிகளை ஆரம்பித்த பின்னர் முன்னைய ஆட்சியினதும் தற்போதைய ஆட்சியினதும் மோசடிகளுக்குச் சட்டம் கையாளப்படும் விதத்தை நாட்டு மக்கள் பார்க்க முடியும் - என்றார். (4,31)




கேலிச்சித்திரம்

## ஆத்திரத்தை அடக்கினாலும் அதை அடக்க முடியாதென்பர்

கொழும்பு, ஜூலை 25
தனியார் பேருந்தில் பயணித்த முதியவர் ஒருவருக்கு நடந்த அநீதி குறித்து பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.
சம்பவம் பதுளையில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்தவர் குலரட்ண. பதுளையில் இருந்து மகியங்கனைக்குச் செல்லும் தனியார் பேரூந்தில் அவர் பதுளை பேருந்து நிலையத்தில் நின்று பேருந்தில் ஏறிப்பயணித்துள்ளார். அவருக்கு வயது 67.
அவர் அநேகமாக ஒரு நீரிழிவு நோயாளியாக இருந்திருக்கலாம். அடிக்கடி சிறுநீர் கழிப்பது நீரிழிவு நோயாளர்களின் இயல்பு குறைபாடு. பதுளையிலிருந்து மகியங்கனைக்குப் பயணம் என்பது சுமார் 5 மணித்தியாலங்கள். இதற்கிடையில் சிறுநீர் கழிக்க வேண்டிய அவசியம் எப்படியும் அநேகமானோருக்கு ஏற்படும். அவசியம் ஏற்படும்போது பேருந்தை நிறுத்த வேண்டுமென்பது எழுதப்படாத சட்டம்.
அப்படியிருக்க, குறித்த தனியார் பேரூந்தின் நடத்துநர், குலரட்ணவுக்கு அவசரமாகச் சிறுநீர்கழிக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. பேருந்தை நிறுத்துமாறு நடத்துநரிடம் கேட்டபோதும் நிறுத்தவில்லை. ஆனால் சிறுநீர் கழிக்காது அதை அடக்கிக்கொண்டும் இருக்கமுடியவில்லை. பேருந்தை நிறுத்துமாறு குலரட்ண திரும்பத் திரும்பக் கேட்டதால் சினமடைந்த நடத்துநர், பேருந்தை நிறுத்துமாறு சாரதியிடம் கூறி பேருந்து மெதுவாகச் சென்றுகொண்டிருக்கும்போதே அவரைப் பேருந்திலிருந்து வெளியே தள்ளிவிட்டுள்ளார்.
அவர் வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்தார். தனக்கு நடந்த தவற்றை அவர் கந்தகெடில பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தற்போது அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார். (4)

## சிறை நண்பனிடம் கெரோய்னுடன் சென்றவருக்குச் சிறை

கொழும்பு, ஜூலை 27
நண்பனைப் பார்க்கச் சென்றவரும் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.
தலாத்துஓயாவில் பாடசாலையில் கல்விகற்கும் காலத்தில் இருந்தே ஒன்றாக வளர்ந்த இரண்டு நண்பர்கள் பாடசாலைக் காலம் முடிந்த பின்னரும் அவர்களின் நட்பு தொடர்ந்தது. ஒன்றாகவே உண்டு ஒன்றாகவே குளித்து ஒன்றாகவே உறக்கினார்கள். அதன்பின்னர் ஒன்றாகவே குடிக்கவும் போதைப் பொருள்களைப் பாவிப்பதற்கும் பழகிவிட்டார்கள். அவர்களில் ஒருவர் தற்செயலாகப் பொலிஸாரின் சோதனையில் மாட்டிக்கொண்டார். அவரைச் சோதனை செய்தபோது அவரிடமிருந்து ஹெரோய்ன் போதைப் பொருளை மீட்டனர். இதனால் அவர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். அதனைக் கேள்வியுற்ற அவரது நண்பர், சிறையிலிருக்கும் தன் நண்பனைப் பார்க்க வெறுங்கையுடன் போகக்கூடாதென்று நினைத்து அவருக்குப் பிடித்த ஹெரோய்ன் சிறியளவை எடுத்துச் சென்றுள்ளார். அவருடைய கெட்டநேரம், அவரும் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். இப்போது இருவருமே சிறையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## நிதி மோசடிகளில் ஈடுபட்டனரெனத் தாயும் மகளும் பொலிஸால் கைது

கொழும்பு, ஜூலை 27
இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி எனக் கூறி பெருமளவில் நிதி மோசடியில் ஈடுபட்டு வந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 55 வயதுப் பெண்ணும் அவரது 19 வயது மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்கள் பயணம் செய்த மகிழூர்ந்தைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்தனர்.
இருவரும் விகாரைகளுக்குச் சென்று விகாரைகளின் அபிவிருத்திக்காக மத்திய வங்கியின் ஊடாக கோடிக்கணக்கில் பணத்தை வழங்க முடியும் எனக் கூறி, அதற்காக வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்து, பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
வழங்கப்படும் கோடிக்கணக்கான பணத்தில் தனக்கு ஒரு தொகையை வழங்க விகாராதிபதிகளின் விருப்பத்தை பெற்று தனது பங்கைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட 19 வயதுப் பெண் விகாரைகளுடன் அலைபேசி மற்றும் முகப்புத்தகம் மூலம் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார். பணத்தை பெற்றுக் கொண்ட பின்னர், முறைப்பாடுகள் செய்யப்பட்டு, பிரச்சினைகள் ஏற்பட்டால் அதில் இருந்து தப்பிக்க குறித்த பெண் தனது மகளைப் பயன்படுத்தி வந்துள்ளார். வெலிமடை கெப்பிட்டிபொல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் பிக்கு ஒருவரிடம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும் ஒரு தொகைப் பணத்தைத் தருவதாகக் கூறி, பிக்கு சந்தேகநபர்களை விகாரைக்கு வரவழைத்துள்ளார். இதனையடுத்து அங்கிருந்த பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். பண்டாரவளை பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் உத்தரவின் பேரில் வெலிமடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# பழைய முறைமையில் மாகாணசபைத் தேர்தல்

## ஐ.தே.கட்சி ஏகமனதாகத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 27
வட மாகாணம் தவிர்ந்த ஏனையஐந்துமாகாணங்களுக்குத்தேர்தல்நடத்துவதாயின்,டிசெம்பரில் தேர்தல் நடத்த முடியும். இல்லையேல் ஜனவரியிலேயே தேர்தலை நடத்த முடியும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ர சிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் முறைமையின் பிரகாரம் உடன் நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின்செயற்குழுக்கூட்டத்தில் நேற்று முன்தினம் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போதே தலைமை அமைச்சர்இதனைத்தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது.

மாகாண சபைத் தேர்தலைப்பழையமுறைமையின் கீழ் நடத்துவதற்கு சிறுப்பான்மை கட்சிகளும் தீர்மானம் எடுத்துள்ள நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

மாகாண சபை தேர்தல் முறைமையை எந்த முறை மையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சிறு பான்மைக் கட்சிகள் மாகாண சபைத் தேர்தலைபழையமுறைமையின் கீழ் நடத்த வேண்டும்எனகடுமையாகவலியுறுத்தி வருகின்றன.

மாகாண சபைத் தேர்தலைப்பழையமுறைமையின்கீழ்நடத்தவேண்டும் எனசிறுபான்மைகட்சிகள் கடந்த திங்கட்கிழமை கூடி கலந்துரையாடித்தீர்மானமும் எடுத்திருந்தன.

மாகாண சபைத் தேர்தலைப்பழைய முறைமையின் கீழ் உடன் நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியும் தீர்மானம் எடுத்துள்ளது.

வட மாகாணம் தவிர்ந்து ஏனைய ஐந்து மாகாணங்களுக்குத் தேர்தலைநடத்துவதாகஇருந்தால் டிசெம்பரில் தேர்தல் நடத்த முடியும்.

அப்படி அல்லாது வடக்குடன் இணைத்து ஆறு மாகாணங்களுக்குத் தேர்தல் நடத்துவதாகவிருந்தால் ஜனவரியிலேயே தேர்தல் நடத்த வேண்டிஏற்படும். எவ்வாறாயினும் உடன் தேர்தலை நடத்த வேண்டும் என்றார்.

இந்த செயற்குழு கூட்டத்தின் போது சமகால அரசியல்விவகாரங்கள்தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. ஏற்கனவே 2 இலட்சம் பேருக்குச் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்க வேண்டும்எனதீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் இடம் பெற்ற செயற்குழுவில் இன்னும் ஒரு இலட்சம் பேருக்குச் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும் அபிவிருத்தித் திட்டங்களின் நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணை குறித்தும் அவர் மீது கட்சியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ரி2,31)

*மாணவி துர்நடத்தை*

# பேஸ்புக்கில் பதிவேற்றிய ஆசிரியர்கள் இருவர் கைது

மாணவிஒருவரைப்பாலியல்துர்நடத்தைக்கு உட்படுத்தி அதனைக் காணொலி எடுத்து முகப் புத்தகத்தில் பதிவேற்றிய ஆசிரியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம்மொனராகலைமாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

32,33 வயதுகளை உடைய இரு ஆசிரியர்களே மொனராகலை மாவட்டக் குற்றத்தடுப்புப்பிரிவினரால்கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களைஎதிர்வரும்ஓகஸ்ட்7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நேற்று முன்தினம் மொனராகலை நீதிவான் உத்தரவிட்டதாகப் பொலிஸ்ஊடகப்பேச்சாளரின்அலுவலகம்தெரிவித்துள்ளது.

மொனராகலைப்பொலிஸ்அத்தியட்சர் சுஜித் வெதமுல்லவின் ஆலோசனையின் பேரில் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுஸ்ரீதீவிரவிசாரணைகளைஆரம்பித்துள்ளது.

சந்தேக நபர்களில் ஒருவர் அரச பாடசாலைஆசிரியர். மற்றையவர்தனியார் வகுப்பு ஆசிரியர். பாடசாலையில் வரலாற்றுப் பாடம் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர் முதலில் மாணவியை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார்.

தனதுமனைவிபிள்ளைகளைப்பொலன்னறுவைப் பகுதியில் உள்ள அவர்களது தாய் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு, மாணவியை வீட்டுக்கு அழைத்து இந்தச்செயலில்ஈடுபட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வகுப்புத் தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரியரான தனது நண்பரிடம்மாணவியைஒப்படைத்துள்ளார். அவர் மாணவியை, மொனராகலை கனிஷ்ட பாடசாலை அருகே உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தி அதனைக் காணொலியாக்கி முகப் புத்தகத்தில் பதிவேற்றியுள்ளார்.

இந்த நிலையிலேயே மொனராகலை மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக்கிடைக்கப்பெற்ற,முறைப்பாட்டுக்கு அமைவாக உடன் நடவடிக்கை எடுத்துஆசிரியர்கள்இருவரையும்கைது செய்துவிளக்கமறியலில்வைத்துள்ளனர். (ரி2,71)

# மீட்கப்பட்ட எலும்புகளில் தாக்கப்பட்ட அடையாளம்

## மன்னாரில் நேற்றும் அகழ்வுகள் முன்னெடுப்பு



**மன்னார், ஜூலை 27**
**மன்னார், சதொசவளாகத்தில்நேற்று 42 ஆவது நாளாகவும் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் பலவற்றில் கூரிய ஆயுதத்தால் பலமாகத் தாக்கப்பட்டமைக்கான முறிவுகளைக் காண முடிகின்றது என்று கூறப்படுகின்றது.**

இதுதொடர்பில்பேராசிரியர்ராஜ்சோமதேவ கருத்துத் தெரிவித்துள்ளார்.

எலும்புக்கூடுகளைப் பொறுத்த மட்டில், உடல்கள் ஒழுங்கற்ற வகையில் அவசர அவசரமாகப் புதைக்கப்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன என்று அவர் கூறியுள்ளார். அவை புதைக்கப்பட்ட காலப் பகுதியைத் தற்போது கூற முடியாது. முழுமையான ஆய்வுகளின் பின்னரே கூறலாம். இதுவரை மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் துப்பாக்கிச் சூட்டுக்கான அடையாளங்கள் எவையும் இல்லை.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் 5 எலும்புக் கூடுகள் சிறுவர்களுடையவை என்று அவர் கூறினார்.

அதேவேளை, நேற்று நடத்தப்பட்ட அகழ்வுப் பணிகளில் கோமகம பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும்இணைந்துகொண்டனர். மன்னார் நீதவான் ரி.ஜே.பிரபாகரன் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்றன.

சிறப்புச் சட்ட மருத்துவ அதிகாரி டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஸவிடுமுறையில் சென்றுள்ள நிலையில் அவருக்குப் பதிலாகக் குருநாகல் சட்ட மருத்துவ அதிகாரி அஜித் திஸநாயக்க தலைமையில் களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ராஜசோம தேவாவின் குழுவினரும் இணைந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுத்தனர்.

தற்போது வரை 32 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்டுள்ள 52 மனித எலும்புக் கூடுகளை மீட்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ரி4,56,60)

# யானை தாக்கியதில் முதியவர் படுகாயம்

வவுனியா, ஜூலை 27
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சண்முகபுரம் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகிய முதியவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. வீட்டினுள்ளிருந்து வெளியில் வந்த முதியவரை வீட்டின் அருகில் நின்ற யானை தாக்கியது என்று கூறப்பட்டது.

படுகாயமடைந்த முதியவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதுடன் யானை - மனித மோதல்களும் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த மாதம் நீலியா மொட்டைப் பகுதிமக்கள் தமக்கு யானை வேலி அமைத்துத் தருமாறு கோரி வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (110)



40 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக கர்நாடக சங்கீத இசைக் கச்சேரி மேற்கொண்டு புதிய உலக சாதனை படைத்த ஆரூரன் அருனந்தி, அரசதலைவர் மைத்ரி பால சிறி சேனவை கடந்த செவ்வாய்கிழமை அரச தலைவர் அலுவலகத்தில் சந்தித்தார்.

# வறட்சி நிவாரணம் வழங்க விவரங்கள் திரட்டப்படுகின்றன

தென்மராட்சி, ஜூலை 27
யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்களின் விவரங்கள் கிராம அலுவலர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு இரண்டு கட்டங்களாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தது.

நெற் செய்கை தவிர்ந்த மேட்டுநிலப் பயிர்ச் செய்கை மேற்கொள்வோர் தற்போதைய வறட்சியால் தம்மால் மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் அழிவடைந்து வருவதாகவழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து இடர் முகாமைத்துவ அமைச்சு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் விவரங்களைப் பெறுமாறு அறிவித்துள்ளது. (9)



**மன்னார், வங்காலை புனித ஆனாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று நடைபெற்றது. திருவிழாவில் மன்னார் மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்ணான்டோவால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (ரி4,213)**

## கைதடியில் மின் தடை


கொடிகாமம், ஜீலை 27
உயர் மின்னழுத்த, தாழ் மின்னழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை 9 மணியிலிருந்து பி.ப. 6 மணி வரை கைதடி கிழக்கு, நவபுரம், கள்ளி நகர், கைதடி வடக்கு ஆகிய பிரதேசங்களில் மின் வழங்கல் தடைப்படும் என்று சாவகச்சேரி மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-159)

## சாதனையாளர் மதிப்பளிப்பு

கொடிகாமம், ஜீலை 27
யாழ்ப்பாணம் வரணி நாவற்காடு.குடமியன் கிராம தற்சார்பு வளர்ச்சிக் கழகத்தினரால் சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு நாவற்காடு பொதுநோக்குமண்டபத்தில் அண்மையில் கழகத் தலைவர் வே.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் விருந்தினராக பிரதேச கிராம அலுவலர் ம.அமலதீபன், குடமியன் அ.த.க.பாடசாலை அதிபர் ம.வினாஸ்குமார், கரம்பை அ.மி.த.க.பாடசாலை அதிபர் ச.அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
2017ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று சாதனை படைத்த மாணவர்கள் மற்றும் கழக அங்கத்தவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.
(159)



சுயேட்சைக் குழு உறுப்பினர் க.கணபதிப்பிள்ளை தனது சம்பளத்தை நெடுந்தீவு மகாவித்தியாலயம்,நெடுந்தீவு றோ.த.க பெண்கள் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஜி.சி.ஈ சாதாரணத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவருக்கு பங்கிட்டு வழங்கியுள்ளார்.



யாழ்ப்பாணம் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பரீட்சைகளில் சாதனை படைத்த மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட வித்தகச்செழுமை நூல் வெளியீட்டு நிகழ்வு ஆச்சிரமத்தில் அண்மையில் இடம்பெற்றது. சந்நிதியான் ஆச்சிரமக் கலைப் பண்பாட்டு பேரவை உறுப்பினர் கு.அருணகிரிநாதனிடமிருந்து பாடசாலை அதிபர் ஒருவர் சிறப்புப்பிரதி பெற்றார்.
(173)

# பிரதேச அபிவிருத்திக்கு சபை நிதியிலிருந்து 200 இலட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜுலை 27
வலி.தென் மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு சபை நிதியிலிருந்து சுமார் 200 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ள தவிசாளர் அ.ஜெபநேசன், இப்பணத்தை ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ரூபா 7இலட்சம் வீதம் 28 உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து வழங்கவுள்ளார்.

அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் ஆகியோருக்கு நிதி ஒதுக்குவதுபோல் தங்கள் வட்டாரங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரதேச சபையினால் நிதியொதுக்க வேண்டுமென்று பிரதேசசபை உறுப்பினர் சிலர் கோரியிருந்தனர்.
இவர்களின் கோரிக்கையையடுத்து இந்த நிதி பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.
இதேவேளை 28 கிராம அலுவலகர் பிரிவுக ளைக் கொண்ட வலி.தென் மேற்கு பிரதேசம் 17 வட்டாரங்களுக்கு 5 கட்சிகளைச் சேர்ந்த 28 உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
சிலவட்டாரங்களுக்கு 2, 3 உறுப்பினர்களும்சிலவட்டாரங்களுக்கு ஒரு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் ஒரு உறுப்பினர் மட்டும் தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்களை அபிவிருத்தி செய்வதில் பின்னடைவு ஏற்படுமென்றும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர். (115)

## ஆய்வரங்கம் இன்று

யாழ்ப்பாணம், ஜீலை 27
யாழ்ப்பாணம் மாவட்ட கலை, கலாசாரப் பேரவையும் மாவட்டச் செயலகமும் நடத்தும் "யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியற் பண்பாட்டுச் சுவடுகள்" எனும் ஆய்வரங்கம் இன்று வெள்ளிக்கிழமைகாலை8.30மணிக்கு யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற உள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் தமிழ்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார். (147)

## அனுமதி அட்டை பெறல்

யாழ்ப்பாணம் வரணி மகா வித்தியாலயத்தில் ஜி.சி.ஈ உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்பட்டது.
இதுவரை அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளாத இரண்டாம் தடவை பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களைசீருடையில்வருகை தந்து அனுமதி அட்டையைப்பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர் ப.செல்வ விநாயகம் தெரிவித்துள்ளார். (159)

## நவநாள் திருவிழா

சாவகச்சேரி கச்சாய் சாலை புனித லிகோரியார் ஆலய நவநாள் திருவிழா இன்று மாலை 5 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி மாலை சிறப்பு ஆராதனையும் நடைபெற்று மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள் பூசையும் திருச்சொரூப பவனியும் நடைபெறும். நவநாள் ஆராதனைகளை பங்குத் தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா தலைமையில் நடைபெறும். (9)

## யுனிசெப் பிரதிநிதிகள் குழு குடியமர்வை அவதானிப்பு

யாழ்ப்பாணம், ஜீலை 27
ஐக்கிய நாடுகளுக்கான சிறுவர் நிதியத்தின் யுனிசெப் அமைப்பின் தெற்காசிய நாடுகளுக்கான பிரதிநிதி எம்.எஸ்.ஜியோன் ஜோஜ், யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான விதிவிடப் பிரதிநிதியுமான ரிம் சுட்டான் தலைமையிலான குழுவினர் கடந்த 18ஆம் திகதி வலி.வடக்கு பளை, வீமன்காமம் மீள்குடியேற்றப் பிரதேசத்துக்குப் பயணம் செய்தனர்.
இதன்போது மீள்குடியேற்ற பிரதேசத்தில் செயற்படும் தாய்மார் கழக அங்கத்தவர்களையும் சிறுவர் கழக அங்கத்தவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இந்தச் சந்திப்பு பளை வீமன்காமம் தெற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடம்பெற்றது.
இதன்போது கடந்த மாதம் தெற்காசிய இளைஞர் மாநாட்டுக்கு சென்ற நல்லிணக்க புரத்தைச் சேர்ந்த இ.மதிஸ்ராவுக்கு பயிற்சிச் சான்றிதழை யுனிசெப் அமைப்பின் தெற்காசிய பிரதிநிதி வழங்கி வைத்தார்.
இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிராந்திய சுகாதாரப் பணிமனைப் பொறுப்பதிகாரி பரா. நந்தகுமார் மற்றும் அங்கு பணியாற்றும் சொண்ட் நிறுவன உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (115)

## வேல் பவனி

சாவகச்சேரி டச்சு சாலை பழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறி பழனி வேல் பவனி இன்று மாலை 4 மணியளவில் ஆரம்பமாகி நடனம் மற்றும் உடுக்கு வாத்திய நிகழ்வுகள் ஆகியவற்றுடன் சாவகச்சேரி நகர் ஊடாக பவனி வந்து ஆலயத்தை வந்தடையும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (9)

## குழாய்கிணறு இடித்து வழங்கி வைப்பு

கொடிகாமம், ஜீலை 27
சாவகச்சேரி பிரதேச சபையின் 2 இலட்சத்து 25ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் வரணி நூலகத்துக்கு குழாய்க் கிணறு மற்றும் தண்ணீர்த் தாங்கி அமைத்து வழங்கப்பட்டது.



கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினராக பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன் கலந்து கொண்டு தண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். (எ-159)

## துர்நாற்றம்வீசியவாய்க்கால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது

### பருத்தித்துறை தவிசாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜீலை 27
பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகாமையில் உள்ளவாய்க்கால்பாதையில்தண்ணீருடன் கழிவுகள்தேங்கி, நுளம்புபெருகும்நிலைகாணப்படுகிறதுஎன்று முறையிடப்பட்டதையடுத்து அந்தப் பகுதி சீரமைக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் தெரிவித்தார். பிரதேச மக்கள் தெரிவித்ததாவது:
இதன் வாய்க்கால் தண்ணீர் ஒரே இடத்தில் தேங்கியுள்ளது என்றும் குப்பை கூழங்களால் நிரம்பிக்காணப்படுவதால் அதிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. அந்த வாய்க்கால் மேற்பக்கம் மரப்பலகை போடப்பட்டு மூடப்பட்டும் சில இடங்களில் மூடிகள் இன்றியும் பாதுகாப்பற்ற நிலையிலும் காணப்படுகின்றது.
சில இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது தொடர்பாகபருத்தித்துறை நகர சபைக்கு பலமுறை அறிவித்தபோதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
இது தொடர்பாக நகரசபை தலைவருடன் "உதயன்" தொடர்புகொண்டு கேட்டபோது "எமக்கு இதுதொடர்பாக அறிவிக்கப்பட்டதையடுத்து நேரில் சென்று பார்வையிடப்பட்டது. சபைக்குரிய நீர்த்தாங்கிமூலமாக கடலில் இருந்து தண்ணீர் பெற்று வாய்க்காலில் விட்டு தேங்கியிருந்த குப்பை மற்றும்கழிவுநீர் என்பன அகற்றப்பட்டுள்ளது.
வாய்க்கால் கட்டுமானத்தில் ஏற்பட்ட சிறிய பிழைகளே நீர் தேங்கி நிற்பதற்குக் காரணமாக இருக்கலாம். அத்துடன் வாய்க்காலுக்கு அருகிலிருக்கின்றவர்கள் தமது வீட்டுக்கழிவுநீர், அருகிலுள்ளவர்த்தக நிலையங்களின் குப்பைகளையும் அந்தக் கழிவு வாய்காலுக்குள் கொட்டுகின்றனர். அதனாலும் தண்ணீர்தேங்கி நின்று துர்நாற்றம் வீச காரணமாகின்றது. எவ்வாறாயினும் அது நகரசபைமூலமாகத் தற்போது துப்பரவு செய்யப்பட்டுள்ளது - என்றார். (14,422)

## எப்படி ஒத்துழைக்கவேண்டும் நிர்வாகம் சபைக்குக் கடிதம்

பருத்தித்துறை,ஜீலை 27
சந்நிதி ஆலய நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.ஆகவே இவ் ஒத்துழைப்பு எது சார்ந்தது எவ்வகையான ஒத்துழைப்பு என்பதை எமக்கு அறியத்தருமாறு வல்வட்டிதுறை நகரசபைக்கு ஆலய நிர்வாகத்தால்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
வல்வட்டிதுறை நகரசபையின் நான்காவது அமர்வு கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை தவிசாளர் கோ.கருணாணந்தராசா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது நகரசபைக்குட்பட்ட அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.
சந்நிதி ஆலயநிர்வாகத்தை அண்டியபகுதியில் உள்ள கழிவகற்றல் மற்றும் ஏனையபகுதிகளில் உள்ள பெரும்பாலான சேவைகளை நகரசபை மேற்கொள்ளுகின்ற போதும் சந்நிதி கோயில் நிர்வாகம் தம்முடன் ஒத்துழைப்பதில்லை என்று வல்வட்டிதுறை நகரசபைத் தவிசாளர் தெரிவித்திருந்தார்.

## 'தொந்தியைக் குறைப்போம்' ஈருருளிப் போட்டி

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின்போஷாக்கு மாதத்தினை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மருத்துவமனை ஊழியர்களுக்கிடையிலான 'தொந்தியைக் குறைப்போம்' என்ற கருப்பொருளில் ஈருருளிப் போட்டி நடைபெறவுள்ளது.
இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவ கலாநிதி த.குகதாசன் தலைமையில்இடம்பெறவுள்ளது. நிகழ்வில்முதன்மை விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர்த.ஐங்கரன்கலந்து கொள்ளவுள்ளார். (23)





உரும்பிராய் கிழக்கு காந்தி சனசமூக நிலையத்தில் புலம்பெயர் சமூகத்தால் வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தைத் திறந்து வைத்த கோப்பாய் பிரதேச தேசோதய தலைவர், புலம்பெயர் நாட்டைச் சேர்ந்த ஆறுமுகம் மோசஸ் மற்றும் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (173)


# 2 வருடங்கள் கூட ஆகாத நிலையில் நல்லிணக்கபுர வீடுகளில் வெடிப்புகள்

## உரிமையாளர்கள் விசனம்

**யாழ்ப்பாணம், ஜூலை 27**
**யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில்நல்லிணக்கபுரத்தில் மீள்குடியமர்வு அமைச்சின்நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட வீடுகளில் உடைவு கள் ஏற்பட்டுள்ளதாகமக்கள்கவலைதெரிவித்துள்ளனர்.**







போர் கால நிலமைகளில் இராணுவம் மக்களின் காணிகளை அபகரித்தது. மக்களும்இடம்பெயர்ந்தனர். நலன்புரி நிலையங்கள், முகாம்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டனர். பின்னர் சிறிய அளவிலானகாணிகள்விடுவிக்கப்பட்டு மக்கள் குடியமர்ந்தனர்.

மக்களின்நன்மைகருதிமீள்குடியமர்வு அமைச்சால்கீரிமலைப்பகுதியில்நூறு வீடுகள் அமைக்கப்பட்டு அதற்கு 'நல்லிணக்க புரம்' என்று பெயர் வைக்கப்பட்டது. தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தின் ஊடாக வீடு கட்டுவ தற்கான பொருள்கள் கொள்வனவு தொடர்பான வேலைகள் நடைபெற்றன.

இராணுவத்தினர் வீடுகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டனர். 2016ஆம்ஆண்டு100வீடுகள்அமைக்கப்பட்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு வீடுகளை மக்களுக்கு கையளித்தனர். வீடுகள் கையளிக்கப்பட்டு இரண்டுவருடம் கூட முழுமைபெறாத நிலையில் வீடுகளில் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இது பற்றி மக்கள் தெரிவித்ததாவது:

எமக்கு தரப்பட்ட வீடுகளில் வர்ணப்பூச்சுக்கள் வெளிறியுள்ளன. நிலங்கள் வெடித்துள்ளன, இதனால்எங்கள்குழந்தைகளை நிலத்தில் தூங்க வைக்க முடியவில்லை. கதவுகள் பிணைக்கப்பட்ட நிலைகளின் இடையில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால்மூன்றுமாதங்களில்கதவுகள் விழுந்து விடும். கூரைகள் வெடித்து தண்ணீர் வீட்டுக்குள்ளே வருகின்றது. இதனால்நிம்மதியானவாழ்க்கைவாழ முடியவில்லை.

வாழ்வாதாரம் குறைந்த நிலையில் இருக்கும் நாம் இந்த வீடுகளைச் சீரமைக்க முடியாது. எமது பாதையும் சீர் இல்லாமல் உள்ளது. மழைக் காலம் ஆரம்பிக்கவுள்ளது. ஆகவே இது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் கிராமஅலுவலர் ஊடாக பிரதேசசெயலருக்குதெரியப்படுத்தியுள்ளோம்-என்றனர். இது தொடர்பில் தெல்லிப்பழை பிரதேசசெயலரைத்தொடர்புகொண்டபோது அழைப்புக்கு பதில் கிடைக்கவில்லை.

தெல்லிப்பளைபிரதேசசெயலர் ஊடாக பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனுக்குஇதுதொடர்பில்தெரிவிக்கப்பட்டு அவரால்அரசதலைவரின்நேரடியான கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளதாக அதிகாரிகளின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-7)



## வடக்கில் குளங்கள் சீரமைக்கப்படுகின்றன

கிளிநொச்சி, ஜூலை 27
தற்போது வடக்கின் பல பகுதிகளிலும் குளங்களைச்சீரமைக்கும்பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். யாழ்ப்பாணத்தில் 7, 8 இடங்களில் வேலைகளை ஆரம்பித்துள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன்.

கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களுடனான கலந்துரையாடல்ஒன்றுகிளிநொச்சியில் அமைந்துள்ள கமநல சேவைகள் திணைக்கள மண்டபத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமை விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தலைமையில்இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது இங்குள்ள பணியாளர்கள் தமக்கு மிஞ்சிய அளவுக்கு வேலை பார்க்கின்றனர். 40 வீதமான ஆளணியை வ்வத்துக் கொண்டே இவர்கள் பணிகளைச் செய்து வருகின்றார்கள்.


சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் விவுசாய புரட்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதற்குப் பின்னர் வந்த போர், உயிரிழப்பு, சொத்திழப்பின் பின்னர் தற்போதே மீண்டும் எழுந்து கொண்டிருக்கின்றோம். இப்போதுஅதேபோன்ற ஊக்குவிப்பொன்றுவராவிட்டால் அது பெரிய பாதிப்பாகவே இருக்கும். தற்போது ஆயிரம் குளங்கள் திட்டத்தின் கீழ் குளங்கள் அபிவிருத்திப்பணிமேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், விவசாய வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அதற்காக வடக்கில் உள்ள விவசாயவீதிகள்தொடர்பில்நாம்விவரங்களைத் திரட்டி வரும் வாரத்துக்குள் கையளிக்கவுள்ளோம். இயற்கை விவசாயத்தை விரும்பும் விவசாயிகள் இன்றும் உள்ளனர். அவர்களைப் போன்று எதிர்கால சந்ததிக்காக இரசாயனமற்ற விவசாயமுறையைப்பயன்படுத்துவதற்கான திட்டங்களைமேற்கொள்ள வேண்டும் - என்றார்.

கலந்துரையாடலில்கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்கள் பிரதிஅமைச்சர்மற்றும் கிளிநொச்சி கமநல அபிவிருத்திஉதவிஆணையாளர், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதே வேளை, விதைகள்உற்பத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் விவசாயப்பிரதிஅமைச்சர் அங்கஜன் இர்ாமநாதன் தலைமையில் நேற்றுமுன் தினம் பரந்தனில் அமைந்துள்ள பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது விதைகள் உற்பத்திமற்றும்விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சிப் பிரதி விவசாயப் பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ-6,35)

## ஊடகப் பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை27
யாழ்ப்பாணம் நியூ ரங்கனாஸ் ஹோம் பில்டர்ஸ் மற்றும் மார்க்கம் கனடா நியூரங்கனாஸ் நகைமாடம் ஆகியவற்றின் அனுசரணையில், "ஊடகப்பெண்கள் குழு"வின் ஏற்பாட்டில் ஊடக நிறுவனங்களில் பணிபுரியும்பெண்கள்ஊடகவியலாளர்களாகபணிபுரியும் பெண்கள், மற்றும் எதிர்காலத்தில் ஊடகத்துறையில் பணிபுரிய விரும்பும் பெண்களுக்கான "ஆளுமையை வளர்த்தல்" செயல்முறை பயிற்சிப் பட்டறை அமர்வு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 4மணிவரை இரு அமர்வுகளாக யாழ்ப்பாணம் கந்தர்மடம், பழம்வீதியில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இடம்பெறவுள்ளது. துறைசார்ந்த வெளிநாடு மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த இரு கலாநிதிகள் வளவாளர்களாகப்பங்குகொண்டுபயிற்சிகளைவழங்கவுள்ளார்கள். பங்குகொள்ள விரும்பும் பெண்கள் தமது விண்ணப்பங்களை jaaltha minis_gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (எ)





## மருதநகர் சூலகமத்தில் தொடர் மணல் அகழ்வு

### தடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 27
கிளிநொச்சி நகருக்கு அண்மையில் அமைந்துள்ள மருதநகர் சூலகமம் பகுதியில் சட்டவிரோதமான முறையில்மணல்அகழ்வு இடம்பெற்றுவருவதாகப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரின் மத்தியில் பொலிஸ்நிலையத்திலிருந்துஒரு கிலோமீற்றருக்குள்நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குஅருகில்கிளிநொச்சி குளத்துக்கு முன்பாக மருதநகர்சூலகமம்கழிவுவாய்க்காலில் பகல் இரவாகச் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது. குறித்த பிரதேசம் மணல்அகழ்வுஅனுமதிக்கப்பட்ட பிரதேசம் அல்ல. அத்தோடு வயற்காணிகளுக்கு மத்தியில் இந்தமணல்அகழ்வுஇடம்பெறுகிறது.

இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தாதுவிடின் அடுத்து வயல்காணிகளில்மணல்அகழ்வுகள்இடம்பெறும். எனவே உடனடியாக இதனைக்கட்டுப்படுத்தஉரியதரப்பினர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்என்றுமருதநகர் கிராம பொது மக்களும் கோரிநிற்கின்றனர். இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் குற்றச்செயல்களைகட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் குழுவின் பொறுப்பதிகாரிசதுரங்கவிடம்கேட்டபோது, கடந்த வாரம் குறித்த பகுதியில் அனுமதி இன்றி மணல் ஏற்றிய உழவியந்திரங்களுடன் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்" என்று தெரிவித்தார். (எ-6,35,213)

## ஆழ்துளைக் கிணறுகள் இடிக்கும் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன

கிளிநொச்சி, ஜூலை 27
முகமாலை தெற்குப் பகுதியில் ஆள்துளை (குளாய்கிணறு) அமைக்கும் பணிகள் அதிகரித்துக் காணப்படுவதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சிமாவட்டத்தின்பச்சிலைப்பள்ளிபிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை தெற்குப் பகுதி கடந்தவருடம்மீள்குடியமர்வுக்காகஅனுமதிக்கப்பட்டது. அங்கு தற்போது ஆள்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வாரம் கூட ஒருகிணறு அமைக்கப்பட்டது. இதன் காரணமாக எமதுகிணறுகளில்தண்ணீர்வற்றியுள்ளதுடன் நீரின் தன்மையும் மாற்றம் அடைகின்றது என்று கிராம மக்கள் தெரிவித்தனர். அத்துடன் ஆள்துளைக் கிணறுகள் அமைப்பதால் வரும் காலங்களில் நீரின் தன்மை மாற்றமடையக் கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

எனவேஉரியவர்கள்கவனத்தில்எடுத்துதடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இதுதொடர்பாகபச்சிலைப்பள்ளிபிரதேசசெயலாளரிடம் கேட்டபோது, தாம் குளாய்கிணறுகளை அமைப்பதற்கான அனுமதி வழங்குவதில்லை என தெரிவித்தார்.

பிரதேச சபை செயலாளரிடம் கேட்டபோது அனுமதிகள் வழங்கவில்லை [illegible]றாறு அமைக்கப்படுபவை அனுமதிபெறப்படாது அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (எ-6)

ஒரு மாதத்தில் மட்டும்

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 76 பேர் வடக்கு- கிழக்கில் கைது

வடக்கு கடற்படை தெரிவிப்பு





**யாழ்ப்பாணம், ஜூலை 27**
**வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 76 பேர் கைது செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று வடக்கு கடற்படை தெரிவித்துள்ளது.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது
வடக்கு கிழக்கு கடற்பரப்புக்கு சொந்தமான பகுதிகளில் கடந்த ஜூன் மாதம் முதல் கடந்த 20ஆம் திகதி வரை 76 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான மீன்பிடி, அனுமதியற்ற மீன்பிடி மற்றும் வெடி பொருள்கள் பயன்படுத்தி மீன்பிடி ஆகிய குற்றச்சாட்டுக்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 16ஆம் திகதி பருத்தித்துறை கடல் பகுதியில் வைத்து சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபட்ட 11பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 02 டிங்கி படகுகள், சட்டவிரோதமான ஒரு வலை மற்றும் மீன்பிடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன. கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீரியல் வளதிணைகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
கிழக்கு கடற்படையினரினால் கடந்த 16ஆம் திகதி புதுமாத்தளன் கடல் பகுதியில் சட்டவிரோதமான வெடிபொருள்கள் பயன்படுத்தி மீன்பிடி யில் ஈடுபட்ட ஒருவர் செய்யப்பட்டார். சந்தேக நபரிடமிருந்து பிடிக்கப்பட்ட ஆயிரத்து 350 மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர், மேலதிகசட்டநடவடிக்கைகளுக்காகமுல்லைத்தீவுநீரியல்வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டார். மீன்களும் ஒப்படைக்கப்பட்டன.
கிழக்கு கடற்பகுதியில் கிழக்கு கடற்படை வீரர்கள், முல்லைத்தீவு, மீன்வள ஆய்வாளர் மற்றும் கொக்கிளாய் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது அதே மாதத்தில் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 24 பேர் கைது செய்யப்பட்டனர். அங்கு அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 06 டிங்கி படகுகள் மற்றும் 04 சட்டவிரோதமான வலைகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
கடந்த17ஆம்திகதிபுல்மோட்டை கடல் பகுதியில் வைத்து சட்டவிரோதமானமீன்பிடியில்ஈடுபட்ட 06பேர்கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து, பிடிக்கப்பட்ட 64 கிலோகிராம் மீன்கள், ஒரு டிங்கி படகு, சட்டவிரோதமான ஒரு வலை என்பன கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள், மேலதிகசட்டநடவடிக்கைகளுக்காக குச்சவெளி நீரியல் வள திணைகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொருள்களும் ஒப்படைக்கப்பட்டன.
அதே நாளில் வடக்கு கடற்பரப்பில் அனுமதிப் பத்திரிகை இல்லாமல் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 14 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 210 கடல் அட்டைகள், ஒரு டிங்கி படகு மற்றும் சிறிய வள்ளம் கைப்பற்றப்பட்டன. குறித்த நபர்கள், கடலட்டைகள், டிங்கி படகு மற்றும் வள்ளம் ஆகியவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
கிழக்கு கடந்த 18ஆம் திகதி எலஸ்வத்த கடல் பகுதியில் வைத்துசட்டவிரோதமானமீன்பிடியில் ஈடுபட்ட 18 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து சட்டவிரோதமாக பிடித்த 25 கிலோ கிராம் மீன்கள், 03 டிங்கி படகுகள் மற்றும் 04 சட்டவிரோதமான வலைகள் கைப்பற்றப்பட்டன.
வடக்கு கடற்படையினரால் கடந்த 19ஆம் திகதி குருநகர் இறங்கு துறையில் வைத்து சட்டவிரோதமான வெடி பொருள்கள் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து சட்டவிரோதமாகபிடித்த 22 கிலோ கிராம் மீன்கள், டிங்கி படகு மற்றும் சட்டவிரோதமான 02 வலைகள் கைப்பற்றப்பட்டன. மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் நீரியல் வள திணைகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இவ்வாறு வடக்கு கிழக்கு கடற்பகுதிகளில் 76 பேர் வரையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

வவுனியாவில், வனவளத்திணைக்களம்எல்லைபோட்ட

# காணிகளுக்கான ஆதாரங்களை பிரதேச செயலரிடம் சமர்ப்பியுங்கள்

உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 27
வவுனியாவில், வனவளத்திணைக்களம்எல்லைபோட்டகாணிகளுக்கு, அவற்றுக்குரிய ஆதாரங்கள் இருப்பின் அவற்றை பிரதேச செயலாளரிடம்உடன்சமர்ப்பிக்குமாறுமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
போர் காரணமாக வடக்கு மக்கள் பலரும் தமது சொந்த இடங்களை விட்டுஇடம்பெயர்ந்துதற்போதுமீண்டும் தமது இடங்களுக்கு வருகின்றனர். இந்த நிலையில் மக்களின் காணிகளில் வனவளத் திணைக்களத்தினர் தமக்குரிய காணிகள் என எல்லைபோட்டு வருகின்றனர்.
இது தொடர்பாக கடந்த பல மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் நான் உட்பட மக்கள் பிரதிநிதிகளால் பேசப்பட்டதன் பிரகாரம் தற்போது வவுனியா மாவட்டச் செயலரால் பிரதேச செயலாளர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன்பிரதி எனக்கும் வந்துள்ளது.
அந்தக்கடிதத்தில், மக்கள்தமதுவாழ்விடங்களுக்காகஅல்லதுவாழ்வாதாரமாக பயன்படுத்திய காணிகள் இருப்பின் அவற்றுக்கான ஆதாரங்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் அந்தப் பகுதி பிரதேச செயலகங்களுக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. காணிகளுக்கான ஆதாரங்களாக வீடமைத்திருந்தாலோ அல்லது கிணறு, வான்பயிர்கள் போன்றவற்றை சுட்டிகாட்டியோ அல்லதுஅப்பகுதியின்கிராமஅபிவிருத்தி சங்கங்கள், சமாதான நீதவான்கள் மூலமாகவோ அதனை உறுதிப்படுத்திபிரதேசசெயலாளரிடம்கொடுக்கலாம்.
அத்துடன்வடக்கில்இடம்பெயந்தவர்களுக்காகஉருவாக்கபட்டமீள்குடியமர்வுச்செயலணியில்சிங்கள, முஸ்லிம் மக்களே உள்வாங்கபட்டிருந்தார்கள் நாம் இது தொடர்பாக மீள்குடியமர்வு அமைச்சிலே கதைத்ததன்பிரகாரம் தற்போது அந்தச் செயலிணியில் தமிழ்மக்களையும் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.
எனவே 1990ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம்திகதிக்குமுற்பட்ட காலப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தமது கிராம அலுவலரூடாக பதிவுகளை மேற்கோண்டுவீட்டுத்திட்டம் உட்பட வாழ்வாதாரம் போன்ற பல சேவைகளைபெற்றுக்கொள்ளமுடியும்-என்றார். (எ-110)

# சிறப்பாகசெயற்பட்ட விவசாயிகள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாக செயற்பட்ட விவசாயிகள் மதிப்பளிக்கப்படவுள்ளனர். மதிப்பளித்தலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று பிரதி மாகாண விவசாயப் பணிமனை தெரிவித்துள்ளது.
விவசாய நடைமுறைகளுக்கேற்ப சிறப்பாக செயற்பட்ட விவசாயிகளை மதிப்பதோடு செய்கையாளர்களுக்கிடையே போட்டி மூலமான ஊக்குவிப்பை ஏற்படுத்தி சூழலுக்கிசைவான பொருத்தமான தொழில்நுட்பங்களை விவசாயி களிடையேபரவச்செய்துஉற்பத்தியை அதிகரிக்கும்நோக்கில்மதிப்பளிப்புஇடம்பெறவுள்ளது.
திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தால்கடந்த ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சிறந்தசேதனவிவசாயச்செய்கையாளர்கள், காலநிலைமாற்றத்திற்கேற்ப பயிர்ச்செய்கை மேற்கொள்பவர், சிறந்த விவசாயச் செயன்முறைத் தொழில்நுட்பங்களைப்பழஉற்பத்தியில்நடைமுறைப்படுத்துபவர் ஆகியநான்கு முறைகள் அடிப்படையில் தெரிவுகள் நடைபெறவுள்ளன.
பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமை செய்து கடித உறையின் இடதுபக்க மேற்பக்கத்தில் 'சிறந்த விவசாயிகள்தெரிவு2018'எனக்குறிப்பிட்டுஎதிர்வரும்ஒகஸ்ட்மாதம்31ஆம்திகதிக்கு முன்னர்தங்கள்விவசாயப்போதனாசிரியருக்குகிடைக்கக்கூடியதாகஅனுப்பிவைத்தல்வேண்டும்அல்லது மாவட்டக்காரியாலயத்தில்சமர்ப்பித்தல்வேண்டும்.
ஏனையசெய்கையாளர்களுக்கும்சந்தர்ப்பம்அளிக்கும்வகையில்விவசாயத் திணைக்களத்தால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் மதிப்பளிக்கப்பட்டவர்கள் போட்டியில் கலந்து கொள்ளமுடியாது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# சட்டவிரோத மீன்பிடி; நேற்றும் 11 பேர் கைது

முல்லைத்தீவு, ஜூலை 27
முல்லைத்தீவில், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரால் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 11 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவுசாலைக்கடற்பரப்பில்நேற்றுக்காலை கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத்தினர்கடற்பரிசோதனையில் ஈடுபட்டனர். இதன்போது அங்கு அனுமதிப்பத்திரம் இன்றி கடற்றொழில்நடவடிக்கையில்ஈடுபட்ட 5 படகுகளையும் அதில் தொழில்செய்த 11 பேரையும் கைது செய்து மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு அலுவலகத்துக்கு கொண்டு வந்துள்ளதாக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி வி. கலிஸ்ரன் தெரிவித்தார். இவர்களை முல்லைத்தீவுமாவட்டநீதிமன்றில்முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கொ... ...றும் முல்லைத்தீவ க... ...ரோத கடற்றொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்த கடற்பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ-ரி3)

உரிய நேரத்தில் வினாத்தாள்கள் கிடைக்காமையால்

# யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாணக்கல்விவலயப்பாடசாலைகளுக்கு, இரண்டாம் தவணைப் பரீட்சைக்கான பாட வினாத்தாள்கள் உரிய நேரத்தில் கிடைக்காமையால் பாடசாலைகளில் நேற்று குழப்பம் ஏற்பட்டது.
அச்சுப் பதிப்பில் ஏற்பட்ட தாமதமே பரீட்சை நேரம் தாழ்த்தி ஆரம்பித்தமைக்கு காரணம் என்று யாழ்ப்பாணம் வலய கல்வி பணிமனை தெரிவித்தது.
இரண்டாம் தவணைக்குரிய பரீட்சைக்கான் நேர அட்டவணைகள் வடக்கு மாகாண கல்வி திணைக்கத்தால் அனைத்துவலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. இதற்கேற்ப வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயத்திலும் ஒரே நேரத்தில் நேர அட்டவணையின் அடிப்படையில் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.
இதனடிப்படையில் ஒவ்வொரு பாடசாலையும் தத்தமது கோட்டக் கல்வி அலுவலகத்துக்குச் சென்று குறித்த நாளுக்குரியவினாத்தாள்களைப்பெற்றுபரீட்சைகளை நடத்தின. இதேபோல் நேற்று யாழ்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கல்வி கோட்டங்களில் குறித்த பாடங்களுக்கான வினாத்தாள், பரீட்சை தொடங்கும் நேரத்துக்கு கிடைக்க பெறாமையால் மாணவர்கள் குழம்பியுள்ளனர். இதனால்பரீட்சைகள்நேரம்தாழ்த்தி நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் வலய கல்வி பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,
ஒப்பந்த அடிப்படையில் கேள்வி கோரல் முறையில் பரீட்சை வினாத்தாள்களை அச்சிட அச்சுப்பதிப்பு நிறுவனத்திடம் வழங்கியிருந்தோம். அச்சுப்பதிப்பில் ஏற்பட்ட தாமதமே பரீட்சைகள் ஆரம்பமாகத் தாமதமானது. ஆனாலும் 1.30 மணிக்குள் பரீட்சைகள் நிறை வடைந்தன. இனிவரும் காலங்களில் இந்த தவறுகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர். (எ-7)

## பண மோசடியில் ஈடுபட்ட ஆபிரிக்க குடிமகன் கைது

கொழும்பு, ஜூலை 27

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் தங்கியிருந்துபல்வேறுபணமோசடிகளில் ஈடுபட்டு வந்த ஆபிரிக்கக் குடிமகன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்த கம்பகாப் பொலிஸார்மேலதிகவிசாரணைகளுக்காகக் குற்றவியல் விசாரணைப்பிரிவுஅதிகாரிகளிடம் நேற்று முன்தினம்ஒப்படைத்துள்ளனர்.

கம்பகாபிரதேசத்தில்நடமாடித்திரிந்தசந்தேகநபர்அங்குள்ள இலங்கைக் குடிமக்களிடம் வங்கிகளில் அவர்களது பெயரில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கச்செய்துள்ளார்.

இவ்வாறுஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்குகளின் மூலம் சந்தேகநபர் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்இலங்கைக்குடிமக்களுக்கு இணைய அதிர்ஷ்ட இலாபச்சீட்டில்பரிசுகிடைக்கப்பெற்றுள்ளதாகவும்அதனைப் பெற்றுக்கொள்ள ஆயத்துக்கு வரி செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்து,பணத்தொகையை குறித்த வங்கி கணக்குகளுக்குச் செலுத்துமாறும் கூறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகையை வங்கியிலிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்காகக் கடந்த திங்கட்கிழமை மாலை நான்கு மணியளவில் கம்பகா பிரதேசத்தில் தனியார் வங்கியொன்றுக்கு சென்ற வேளையிலேயே கம்பகாப் பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

அவரிடமிருந்து இலங்கையர்கள்சிலரின்பெயர்களில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி கணக்குப் புத்தகங்களும், அதற்குப் பயன்படுத்தக் கூடிய வங்கி அட்டைகளும், அதன் மூலம் பெறப்பட்டஒருஇலட்சத்து13ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டன.

கம்பகா நீதிவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டசந்தேகநபர், மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றவியல் விசாரணைப் பிரிவு அதிகாரிகளிடம்ஒப்படைக்கப்பட்டார். (ரி2,71)



கொழும்பு, தேசிய மருத்துவமனையில், 20 கோடி ரூபா செலவில்அமைக்கப்பட்ட அதிநவீனநோய்த்தொற்றுநீக்கித் திணைக்களம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவப் பிரதி அமைச்சர்பைசல்காசீம்இதனைத்திறந்துவைத்தார். (ரி2)

தூக்குத் தண்டனை விவகாரம்

## பன்னாட்டு அழுத்தங்களுக்கு மைத்திரி அடிபணியமாட்டார்

*திட்டவட்டமாய்க் கூறுகிறார் மகிந்த சமரசிங்க*



**கொழும்பு, ஜூலை 27**

**அமைச்சரவையின் முழுமையான ஆதரவுடனேயே தூக்குத் தண்டனையை நிறைவேற்ற அரச தலைவர் தீர்மானித்தார். எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதில் பன்னாட்டு அழுத்தங்களுக்கு அரச தலைவர் ஒருபோதும் அடிபணியமாட்டார். இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

நாட்டுக்குள் போதைப்பொருள்கள்அதிகரித்துள்ளதாகவும் சிறைச்சாலைகளுக்குள் இருந்தே போதைப் பொருள்வியாபாரநடவடிக்கைகள் வழிநடத்தப்படுவதாகவும் புலனாய்வுத் தகவல் கிடத்திருப்பதாக அரச தலைவர் அமைச்சரவையில்தெரிவித்திருந்தார்.

இதனைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால், சிறைச்சாலைகளில்இருந்துவழிநடத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போதைப்பொருள்நடவடிக்கைகளில் கைதுசெய்யப்பட்டுத் தூக்குத் தண்டனை தீர்ப்பாக்கப்பட்டபின்னரும் சிறைச்சா லைக்குள் இருந்துகொண்டு இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவேண்டுமென்றும் அரச தலைவர் அமைச்சரவையில்தெரிவித்திருந்தார்.

அரச தலைவரின் இந்தத் தீர்மானத்துக்கு அன்று அமைச்சரவையில்இருந்த யாரும்எதிர்ப்புத்தெரிவிக்கவில்லை. தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் தீர்மானத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

தற்போது யாரும் தூக்குத் தண்டனை தொடர்பாக விமர்சிப்பதாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளக் முடியாது.

இதுதொடர்பாக வேறுபட்ட கருத்துடையவர்கள் இருக்கலாம். என்றாலும்அமைச்சரவையில்தீர்மானம்எடுக்கப்பட்டால் அதனைப் பாதுகாத்துக்கொள்வது அமைச்சரவையில் இருக்கும் அனைவரதும் கூட்டுப் பொறுப்பாகும்.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும்அரசதலைவரின்இந்தத்தீர்மானத்தை விரைவாக நிறைவேற்றுமாறு எழுத்துமூலம் சிலர் அரச தலைவருக்கு அறிவித்துள்ளனர். அதேபோன்று இதனை நிறைவேற்றக்கூடாது எனச்சிலர் தெரிவித்துள்ளனர்.

அதிகமானவர்களின்நிலைப்பாடாக இருப்பது தூக்குத் தண்டனையை நிறைவேற்றவேண்டும் என்பதாகும். தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் தீர்மானத்துக்குஅரசதலைவருக்குப் பன்னாட்டு ரீதியில் அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர்.

அரச தலைவர் இதற்கு அண்மையில் பதில் அளித்திருந்தார். அதனால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அரச தலைவர்பன்னாட்டுஅழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியமாட்டார்.

ஜெனிவா மனித உரிமைகள்ஆணைக்குழுவில்இது தொடர்பாகக்கேள்வி எழுப்பினால் எமது நாட்டின் நிலைமையைத் தெளிவுபடுத்த முடியும்.

பன்னாட்டுரீதியில்54நாடுகளில் தண்டனைச் சட்டம் நிறைவேற்றப்படுகின்றது. 29நாடுகளில்சட்டம்நடைமுறையில் இருந்தாலும் எமது நாடுபோன்று தண்டனை நிறைவேற்றுவதில்லை. 105 நாடுகளில் தண்டனைச்சட்டம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டுக்கு அண்மை நாடான இந்தியாவில் தூக்குத்தண்டனைநிறைவேற்றப்படுகின்றது. நாட்டினதும் நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதியுமே அரச தலைவர் தூக்குத் தண்டனையை நிறைவேற்றத் தீர்மானித்திருக்கின்றார் -என்றார். (ரி2,61)

## பல கோடி பெறுமதியான தங்கத்துடன் பெண் கைது

கொழும்பு, ஜூலை 27

தங்க நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுக்களைத் தனது உடலில் மறைத்து நாட்டுக்குள் கடத்திவர முற்பட்ட இலங்கைப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 30 வயதுடைய பெண் ஒருவரே கட்டுநாயக்க வானூர்தித் தள ஆயம் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். மீட்கப்பட்ட 5 கிலோ 185 கிராம் நிறை கொண்ட தங்க நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுக்கள் மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி கொண்டது என ஆயம் பிரிவினர் தெரிவித்தனர்.

இரகசியத் தகவல் ஒன்றுக்கு அமைவாக சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பதில் ஆயம் ஊடகப் பேச்சாளர் விபுல மினுவன்பிட்டிய தெரிவித்தார்.

சல்வார் அணிந்திருந்துள்ள இந்தப் பெண், தங்க நகைகள், தங்க பிஸ்கட்டுக்களைப் பைக்கட்டில் போட்டு உடலில் ஒட்டி வைத்தவாறு கடத்த முற்பட்டபோதே, கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆயம் பணிப்பாளர் ஓ.எம்.ஜபீர், பிரதி ஆயம் பணிப்பாளர் ஜகத் ஒபேசேகர ஆகியோரின் மேற்பார்வையில் மேலதிக விசாரணைகளை ஆயம் அத்தியட்சர்களான நுவன் அபேசேகர, ஸ்ரீலால் விஜேவர்தன உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்துள்ளனர். (ரி2,71)

## மஹேந்திரன் - உதயங்கவை அழைத்து வருவதில் சிக்கல்

*ராஜித சேனாரத்ன தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 27

அர்ஜுன மஹேந்திரன் மற்றும் உதயங்க வீரதுங்க ஆகிய இருவரையும் கைது செய்ய பன்னாட்டு பொலிஸின் உதவியுடன் அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. முயற்சிகள்கைவிடப்படவில்லை. ஆனால் பன்னாட்டு சட்டங்களுக்கு அமைய அவர்களை வரவழைப்பதில் கடினத் தன்மை உள்ளது. அதனை மீற முடியவில்லை. இவ்வாறுஅமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத்தீர்மானங்களை வெளியிடும்வாராந்தசெய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது

அர்ஜுனமஹேந்திரன்வரவழைக்கப்பட்டால் நியூயோர்க் ரைம்ஸ் செய்தி குறித்து முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச விளக்கம்கொடுப்பதாகக்கூறியுள்ளகாரணம் குறித்து ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது,

அர்ஜுனமஹேந்திரன்விவகாரம் வேறு, நியூயோர்க் ரைம்ஸ் சர்ச்சைவேறு. மத்தியவங்கிமுன்னாள்ஆளுநர்அர்ஜுனமஹேந்திரனைக் காரணம் காட்டி மகிந்த ராஜபக்சதப்பித்துவிடக்கூடாது.

அர்ஜுன மஹேந்திரன் மற்றும் உதயங்க வீரதுங்க விடயத்தில் அரசுதுரிதநடவடிக்கைகளைமுன்னெடுத்து வருகின்றது.

இருவரும் இலங்கையில் இருந்திருந்தால் அவர்களைக் கைதுசெய்திருப்போம். பன்னாடுகளில்உள்ள இவர்களைஇலங்கைக்குகொண்டுவருவது என்பது பன்னாட்டு சட்டத்தின் ஊடாகக் கையாள வேண்டியநகர்வாகும். பன்னாட்டுசட்டங்களைக்கையாண்டுசரியானசாட்சியங்களை ஒப்படைத்து அதன் பின்னர்அவர்களைஇலங்கைக்கு வரவழைக்க வேண்டும். எனினும்பன்னாட்டுப்பொலிஸ்உதவியுடன் நாம் இந்த நடவடிக்கைகளைக் கையாண்டு வருகின்றோம். உதயங்க வீரதுங்கவின் பன்னாட்டு வங்கிக் கணக்குகள் மற்றும் முன்னையஆட்சியில்இடம்பெற்ற பன்னாட்டு கொடுக்கல் வாங்கல் ஊழல் கணக்குகள் குறித்தும் தகவல்கள் கிடைத்துள்ளன.




ராஜபக்சக்களில்ஒருவரும், செயலர், அமைச்சர் சிலர் எனஒருபட்டியலேஉள்ளது.

இவர்கள் பேணிய சட்டவிரோத வங்கிக்கணக்குகள், மிக்கணக்கு வழக்குகள், துபாய் வங்கிக்கொடுக்கல்வாங்கல், சிங்கப்பூர் கொடுக்கல்வாங்கல்எனஅனைத்தும் திரட்டப்பட்டு வருகின்றன.

விரைவில் இந்தக் குற்றங்கள் குறித்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.


முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஜப்பான், ஹாங்கொங் பயணங்களை மேற்கொள்ளும் போதெல்லாம் உதயங்க வீரதுங்கவைச்சந்திக்கின்றார். ஏன்அவரை இலங்கைக்குக் கொண்டுவர முடியாதுள்ளது. இரண்டுவாரங்களில் இலங்கைக்குக் கொண்டு வருவதாகக்கூறினாரே. ஏன்ஒருமாதமாகியும் அவரை வரவழைக்க முடியவில்லை. இவர்கள் தமது அரசியலைத் தக்கவைக்க ஊடகங்கள் முன்னிலையில் பொய்களைக் கூறிவருகின்றனர். சிறப்புநீதிமன்றம் அமைக்கும் நடவடிக்கைகள் பிற்போடப்படவில்லை, இந்தமாதம் ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வழக்குகள் அனைத்துமே விரைவில் விசாரிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ரி2,61)



## உயர்ந்த உள்ளம்

கலிபோர்னியாவில் வசிக்கிறார் 30 வயது ஜெஸிகா மோரிஸ். சமீபத்தில் முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவருக்கு தன்னுடைய ஒரு சிறுநீரகத்தை தானமாக வழங்கியுள்ளார்.
பல் மருத்துவ தொழில்நுட்ப உதவியாளராக பணியாற்றி வரும் இவர், இந்த ஆண்டு ஜனவரி மாதம், "இந்த ஆண்டு யாராவது ஒருவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்று புத்தாண்டு உறுதிமொழி எடுத்துக்கொண்டார். கலிபோர்னியாவில் இருந்து 2 மணி நேரபயணதூரத்தில்சான்பிரான்சிஸ்கோவில் வசிக்கிறார் 30 வயது எழுத்தாளர் டேவிட் நச்சேர். இவரது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு, ஆறரை ஆண்டுகளாகிவிட்டன. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையைத் தவிர வேறு வழியில்லை. சிறுநீரக நன்கொடையும் கிடைக்கவில்லை. வேறு வழியின்றி, இறப்பை ஏற்றுக்கொள்ளத் தயாரானார் டேவிட். ஆனாலும் ஒரே ஒருமுறை இறுதியாக விளம்பரம் கொடுத்துப் பார்த்தால் என்ன என்று தோன்றியது. அந்த விளம்பரத்தை ஜெஸிகாவும் பார்த்தார். தன்னுடைய புத்தாண்டு உறுதிமொழியைச் செயல்படுத்துவதற்கான வாய்ப்பு வந்துவிட்டதாக உணர்ந்தார். டேவிட்டை தொடர்புகொண்டார்.
"விளம்பரத்தைப் பார்த்து சிலர், சிறுநீரகம் நன்கொடை அளிக்க முன்வந்தனர். ஆனால் அவர்கள் லட்சக்கணக்கில் பணம் கேட்டனர். சிலர் வெளிநாடுகளுக்கு சென்று வருவதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்கள். அவர்கள் கேட்டது தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. என் வாழ்நாள் முழுவதும் மருத்துவத்துக்கே அதிகம் செலவு செய்துவிட்டேன். பிறந்த மூன்றாவது மாதத்தில் ஒரு சிறுநீரகம் பழுதடைந்துவிட்டது. அதிலிருந்து 27 தடவை அறுவை சிகிச்சைகள் எனக்கு செய்திருக்கிறார்கள். ஆறரை ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாவது சிறுநீரகமும் செயலிழந்துவிட்டது. டயாலிசிஸ் மூலம் உயிர் வாழ்ந்து வந்தேன். ஒருகட்டத்தில் மாற்று சிறுநீரகம் பொருத்தாவிட்டால் உயிர் வாழ முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டேன். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், முன்பின் அறியாத எனக்கு ஜெஸிகா சிறுநீரகம் நன்கொடை அளிக்க முன்வந்ததில் அதிர்ச்சியாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. இவ்வளவு நல்ல உள்ளம் கொண்ட ஒருவருக்கு, எனக்கு சிறுநீரகம் அளிப்பதன் மூலம் ஏதும் பிரச்சினை வந்துவிடக் கூடாது என்று நினைத்து, வேண்டாம் என்று மறுத்தேன். ஆனால் ஜெஸிகா நான் சொல்வதைக் கேட்கவில்லை. முழு மனத்துடன் நன்கொடை அளிக்க வந்துவிட்டார். இவருக்கு நான் என்ன செய்ய முடியும்?" என்கிறார் டேவிட். (ம)

# இம்ரானின் இன்னிங்ஸ் பாகிஸ்தானில் ஆரம்பம்





இஸ்லாமபாத், ஜூலை 27
பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் இம்ரான் கானின் தெக்ரிக் இ இன்சாப் கட்சி அதிக இடங்களில் முன்னிலை பெற்று ஆட்சியைப் பிடித்தது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான இம்ரான்கான் 1996ஆம் ஆண்டு கட்சியை ஆரம்பித்தார். அன்று முதல் இவரின் கட்சி பெரிய தேர்தல்கள் எதிலும் சாதிக்கவில்லை. இதனால் இந்த வெற்றி அந்தக் கட்சி பெற்றுக்கொண்ட இமாலய வெற்றியென்று கருதப்படுகிறது.
பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாடெங்கிலும் 272 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. 137 தொகுதிகளில் வென்றால் பெரும்பான்மை வெற்றி என்ற நிலையில், 114 தொகுதிகளில் தெரிக்இின்சாப் கட்சியும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் 57 இடங்களிலும், பிலாவல் பூட்டோவின் கட்சி 36 இடங்களிலும் வெற்றிபெற்றன.
எனினும் இந்தத் தேர்தலில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ள நவாஸ் செரீப்பின் முஸ்லீம் லீக் கட்சி, "தேர்தல் முடிவுகளை நாம் ஏற்கப்போவதில்லை.
ஏனைய கட்சிகளுடன் இணைந்து சட்டரீதியாக இதை அணுகவுள்ளோம்" என்றும் அறிவித்தது.
நவாஸ் செரீப் ஊழல் மோசடி வழங்கில் சிறையிடப்பட்டுள்ளார். அவருடன் அவரது மகள் மரியம், மருமகன் ஆகியோரும் சிறையிடப்பட்டுள்ளனர். இதனால் இந்தத் தேர்தல் உச்சக்கட்டப் பரபரப்புக்கு மத்தியில் இடம்பெற்றது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளும் இந்தத் தேர்தல் தொடர்பில் தமது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தன.
தேர்தலின்போது பலுசிஸ்தான் மாகாணத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 37 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அணைக்கப்பட்டது கிரீஸின் காட்டுத் தீ



ஏதேன்ஸ், ஜூலை 27
கிரீஸின் தலைநகர் ஏதேன்ஸில் காட்டுத் தீ போராடி அணைக்கப்பட்டது.
இந்த இடரால் 80 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.
கிரீஸின் தலைநகர் ஏதேன்ஸில் கடந்த ஒரு வாரகாலமாக காட்டுத் தீ பரவி வந்தது.
இந்த இயற்கை இடரால் 57 பேர் உயிரிழந்தனர் என்று நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது.
தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட கடும் நடவடிக்கைகளின் பயனாக காட்டுத் தீ அணைக்கப்பட்டது. அதேநேரம் உயிரிழப்பு எண்ணிக்கை 80ஆக அதிகரித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## செவ்வாயில் ஏரி

வொஷிங்டன், ஜூலை 27
செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பது ஏற்கனவே கண்டறியப்பட்டிருந்த நிலையில் அங்கு தற்போது ஏரியொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியம் 'மார்ஸ் எக்பிரஸ்' என்ற திட்டத்தின் கீழ் மார்சிஸ் என்ற செயற்றைக் கோளை அண்மையில் செவ்வாய்க்கு அனுப்பியது. இந்தச் செயற்றைக்கோள் எடுத்து அனுப்பிய ஒளிப்படத்திலேயே செவ்வாயில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
செவ்வாயின் கிழக்குப் பகுதியில் இந்த ஏரி கண்டறியப்பட்டுள்ளது.
சுமார் 20 கிலோமீற்றர் நீளம் உடையதாக அந்த ஏரி உள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## அணுவாயுதங்களை தொடர்ந்தும் தயாரிக்கிறது வடகொரியா அமெ. அயலுறவுத்துறை அமைச்சர் பாம்பியோ குற்றச்சாட்டு




வொஷிங்டன், ஜூலை 27
வடகொரியா தொடர்ந்தும் அணுவாயுதங்களைத் தயாரித்து வருகிறது என்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளார் அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் பாம்பியோ.
அமெரிக்க அதிபர் ட்ரம்ப்-வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் கடந்த மாதம் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பின் போது இருவரும் பரஸ்பரம் வாக்குறுதிகளை வழங்கினர். "வடகொரியா தம்மால் தாக்கப்படாது. வடகொரியாவுக்குப் பாதுகாப்பு வழங்குவோம். கொரியத் தீபகற்பத்தில் தென்கொரியாவுடன் மேற்கொண்டு வந்த போர்ப் பயிற்சிகள் நிறுத்தப்படுகின்றன" என்பன அமெரிக்கா வழங்கிய வாக்குறுதியாக அமைந்தது. அதேபோல் வடகொரியா அணுவாயுதங்களை அழிக்கவும், தொடர்ந்து தயாரிப்பதைத் தவிர்க்கவும் வாக்குறுதி வழங்கியது.
இவ்வாறிருக்க வடகொரியா தொடர்ந்தும் அணுவாயுதங்களைத் தயாரிக்கிறது என்று தெரிவித்துள்ளார் பாம்பியோ. (ம)



# ‘இந்து சமயம்’

## ஆன்ம விமோசனம் தரும் வாழ்வியல் நெறி

மாதவி உமாசுதசர்மா

**வாழ்க்கை நெறி**

இந்து சமயத்துக்கு ‘சனாதன தர்மம்’ என்ற பெயரும் உண்டு. இதன் பொருள் ‘என்றுமுள்ள வாழ்க்கை நெறி’ என்பதாகும். அதாவது எந்த வழியில் அணுகினாலும் இறைவனை அடையலாம் என்பது அடிப்படையாகும்.

தற்கால நகர்வில் விஞ்ஞானம் கண்டு கொண்டுள்ள அபரிமிதமான பிரமிக்க வைக்கும் வளர்ச்சி, உலக முழுமையும் வியாபகம் பெற்றுள்ள அனைத்து இனக் குழுமங்களதும் கலாச்சார, பண்பாட்டு நெறிமுறைகளில் அதிகளாவான மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இந்தநிலையிலே தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், அதனைப் போற்றிப் பேணி வளர்க்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

இதற்கு இந்து சமயத்தில் உள்ள வாழ்வியல் நெறிமுறைகளை சரிவரக் கடைபிடிக்க வேண்டும். ஆம் இந்து சமய வாழ்க்கை என்பது, ‘அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை’ போன்ற பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் ஒருங்கிணையும் போது ஆளுமை வளம் பெறும். இந்து சமயம் தருகின்ற இத்தகு ஒருங்கிணைந்த பயிற்சியைப் பெறுகின்ற போது மனிதன் வாழ்க்கையில் சலனமின்றி பூரணத்துவமான அமைதியை காணலாம்.

**இறை தரிசனம்**

பொதுவாக இறைவனை அடைவதற்கு, ‘கர்ம யோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜ யோகம்’ ஆகிய நான்கு வழிகளின் ஊடே இறை தரிசனத்தை பெறலாம். இதனை நம் முன்னோர்கள் வரையறுத்துள்ளனர். ஆனால் உண்மையில் இறைவனை நெருங்குவதற்கும் இதற்கும் தொடர்பில்லை எனலாம். வேதங்கள், உபநிடதங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்த ஒருவனுக்கு இறையருள் கிடைக்காமல் போகலாம். வேத பாராயணம் பற்றி ஒரு வரி கூடத் தெரியாதவனுக்கு இறைவன் காட்சி கொடுக்கலாம். ஆக, இறைவழிபாட்டில் வெளிவேடங்கள் தேவையற்றவை. இயல்பான வழிபாட்டு முறையே போதுமானது. இதற்கு மேலும் உதவி புரியும் வகையில் 8 வகையான குணங்களை இந்து சமயம் வரையறை செய்துள்ளது. அவை வருமாறு,

1. உலகில் உள்ள அனைத்து உயிர்களிடத்தேயும் அன்போடு இருக்க வேண்டும். கருணையை கைவிடக்கூடாது. இதை வலியுறுத்தவே, ‘அன்பே சிவம், அதுவே நலம்’ என்றனர்.
2. பொறுமை மற்றும் எதையும் ஏற்றுக் கொள்கின்ற மன உறுதி வேண்டும்.
3. ஏனையவர்களை நினைத்து பொறாமைப்படக்கூடாது.
4. உடல், மனம் மற்றும் செயலில் எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும்.
5. தன் முனைப்புக் காரணமாகவும், பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலி மிகுந்த உழைப்பு வேண்டும்.
6. எப்போதும் கலகலப்பாக மனச் சஞ்சலம் இன்றி இருக்க வேண்டும்.
7. எப்போதும் நல்ல நடத்தைக் கோலங்களை பேண வேண்டும். தாராள மனதோடு இருத்தல் சிறப்பு.
8. எல்லா மோகங்களும் வலுவற்றவை, நிலையற்றவை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆக, இந்த எட்டு வகையான குணாதிசயங்களையும் கொண்டிருப்பதன் ஊடே, ‘அறம், பொருள், இன்பம், வீடு’ அகிய நான்கையும் பெற இயலும். இறைவனை எளிதில் காண இவை வழிப்படுத்துகின்றன. இந்து சமயத்தின் முக்கிய அம்சமே அது வேதங்கள், உபநிஷத்துக்கள், தத்துவங்கள், ஆகமங்கள், புராணங்கள் மற்றும் தர்மம் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்ட ஆன்மிக அடிப்படையில் தங்கி இருப்பதுதான். அது மட்டுமின்றி எந்த நல்ல கருத்துக்களையும் ஏற்றுக் கொள்வது இந்து சமயம் கொண்டுள்ள தனித்துவமான பண்பாக விள்ங்குகிறது.

இந்து சமயம் மனிதனுக்கும் அவனது கொள்கை, வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைகளுக்கும் முழுமையான சுதந்திரத்தை கொடுத்துள்ளது. இதன் காரணம் கொண்டே எத்தனையோ சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் இருந்தாலும் இந்துக்கள் இறைவழிபாட்டை வாழ்வியலோடு ஒருங்கிணைந்த ஒன்றாகவும் எளிமையானதாகவும் வைத்துள்ளனர்.

**வழிபாடும் வாழ்க்கை நடைமுறைகளும்**

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் ஒவ்வொன்றும் இந்து சமய இறைவழிபாட்டில் எதிரொலித்தப்படியே உள்ளது. இதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன.

**அன்பு**

ஆதி காலத்தில் காதல் புனிதமாக கருதப்பட்டது. அந்தப் புனிதம் தெய்வங்களின் லீலைகள்மூலம் உணர்த்தப்பட்டது. கிருஷ்ண பரமாத்மா சத்திய பாமாவை காதலித்து கரம்பிடித்தார். முருகப்பெருமான் தினைப்புனத்தில் காவல் இருந்த வள்ளியை காதலித்து திருமணம் செய்தார். அதுபோலவே கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஊடல் ஏற்படுவதையும் இறைவழிபாட்டில் காணலாம். சிவபெருமானுக்கும், பார்வதிக்கும் சிவம் பெரிதா, சக்தி பெரிதா என்ற ஊடல் ஏற்படுகிறது. இறுதியில் சக்தி இல்லாமல் சிவன் இல்லை. சிவன் இல்லாமல் சக்தி இல்லை என்ற தத்துவம் உணர்த்தப்படுகிறது. இங்கு ஆண், பெண் இருவரில் யார் உயர்வு, யார் தாழ்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. இருவரும் சமம் என்பது ஆலய வழிபாட்டில் பல்வேறு வகைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




ஆணும் பெண்ணும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. இந்து மத தெய்வக் கோட்பாட்டில் சிவலிங்கத்தின் தத்துவமே இதுதான். அர்த்தநாரீஸ்வரர் வழிபாட்டின் தத்துவமும் இதனை உள்ளடக்கியதுதான். எந்த நிலையிலும் ஆண் பெண் சரிநிகர் சமம் என்பதை இந்து மதம் காலம் காலமாக உணர்த்தியபடி உள்ளது. இந்த அடிப்படையில் தான் இந்து ஆலயங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் மையங்களாக உருவாக்கப்பட்டன.

**திருவிழாக்கள்**

ஆலயங்களில் நடத்தப்படும் திரு விழாக்கள் அனைத்தும் நமது சமுதாயத்தை ஒருங்கிணைப்பதற்கு நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்டவையாகும். தேர்த் திருவிழா நடக்கும் போது ஏழை, பணக்காரார், தாழ்ந்த சாதி, உயர்ந்த சாதி என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் தேர் வடம் பிடித்து இழுப்பார்கள். ‘இறைவன் முன்பாக நாம் அனைவரும் சமம்’ என்ற மிகப்பெரிய வாழ்வியல் நெறி அங்கு உணர்த்தப்படுகிறது. மேலும் வாழ்வில் எவ்வளவு துன்பம், துயரம், பிரச்சினைகள் வருகின்ற போதும் அத்தனையையும் அடிபணிய வைப்பது ஆலய வழிபாடுதான்.

**நம்பிக்கை**

‘நான் கும்பிடும் கடவுள் என்னை வழிநடத்துவார்’ என்ற அசைக்க முடியாத நம்பிக்கையிலேயே 99 சதவீதமானவர்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தத் தெய்வ நம்பிக்கையும் அசாத்திய துணிச்சலும்தான் மனதில் உள்ள பய உணர்வுகள் அனைத்தையும் இல்லாது செய்கிறது. நம்பினார் கெடுவதில்லை. இது நான்குமுறைத் தீர்ப்பு. புராணங்கள், இதிகாசங்கள், நாயன்மார், ஆழ்வார்களின் பாடல்களும் நம்மை நெறிப்படுத்தும் சக்தி படைத்தவை. இவை கடவுளிடம் எமை முழுமையாக ஒப்படைக்க உதவி புரிகின்றன. கடவுளிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காத தன்மை உண்டாகும். இப்படி நமது வாழ்வியலின் ஒவ்வொரு செயலிலும் இந்து சமயக் கோட்பாடுகள் இரண்டறக் கலந்துள்ளது. அந்தக் கோட்பாடுகளை சரியாக கடைபிடிப்பவர்களே பிறவிச் சூழலில் இருந்து விடுபட முடியும்.

**கடமை**

இந்து தர்மத்தால் மட்டுமே பிறப்பு இறப்பு சூழலில் இருந்து நம்மை விடுவிக்க முடியும். இதற்கு ஒவ்வொருவரும் சில கடமைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

- தினமும் சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே உறக்கத்தில் இருந்து எழ வேண்டும்.
- காலையில் நீராடி தூய ஆடை அணிந்ததும் தவறாமல் இறை வழிபாடு செய்ய வேண்டும்.
- காலை, மாலை என இரு பொழுதுகளும் நெய் விளக்கேற்றி நைவேத்தியம் படைத்து வழிபாடு செய்வது மிகவும் நல்லது.
- நேர மீதமுடையோர் உரிய மந்திரங்கள் சொல்லி வழிபாடு இயற்றுங்கள்.
- நெற்றியில் திருநீறு, குங்குமம் அணியாமல் இருக்கக் கூடாது.
- தினமும் புராண, இதிகாச, தேவார மற்றும் திவ்ய பிரபந்தம் உள்ளிட்ட சமய நூல்களை படிக்க வேண்டும்.
- வீட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தினமும் தியானம் பழக வேண்டும்.
- ஆலயங்களில் நடத்தப்படும் பஜனை, சத்சங்கம், கதாகாலட்சேபம், சமய சொற்பொழிவுகளை சென்று கேட்க வேண்டும்.
- வீட்டில் நம் கண்ணுக்கு அடிக்கடி படும் இடத்தில் ‘ஓம்’ படத்தை வைத்தல் நன்று.
- விரத நாள்கள், பண்டிகை தினங்களை பொழுதுபோக்கு நாள்களாகக் கருதாமல் ஐதீகத்தை உணர்ந்து அவற்றை ஆத்மார்த்தமாக கடைபிடிக்க வேண்டும்.
- மாதத்துக்கு ஒரு தடவையாவது வீட்டில் நாம சங்கீர்த்தனம் செய்வது அல்லது சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நற்பலாபலன்களை தரும்.
- மடாதிபதிகள், துறவிகள், ஞானிகளை சந்தித்து ஆசி பெற வேண்டும். துறவிகள் பார்வை நம் மீது பட்டால் தோஷங்கள் விலகும்.
- தினமும் ஆலயம் செல்ல வேண்டும். முடியாதவர்கள் வாரத்துக்கு ஒரு தடவையாவது ஆலயத்துக்கு சென்று, நிதானமாக மனதை ஒருமுகப்படுத்தி இறை வழிபாடு செய்ய வேண்டும்.
- ஆலயத்துக்குச் செல்லும்போது தனியாகச் செல்லாமல், மனைவி மற்றும் குழந்தைளை அழைத்துச் சென்று உரிய முறைப்படி வழிபாடு செய்ய வேண்டும்.

இவை அனைத்தும் நம் வாழ்வை மேன்மைப்படுத்தும். இவை தவிர இன்னும் ஏராளமான இந்து தர்மக் கோட்பாடுகள் உள்ளன. அவை மூலம் நாம் நிறைவான விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஞானச் சுரங்கமான நமது இந்து சமய பண்பாட்டில் அள்ள அள்ளக் குறையாத பலன் தரும் விடயங்கள் ஏராளமாக உள்ளன. கடந்த 60 வாரங்களாக நாங்கள் கொடுத்திருப்பது ஒரு கைபிடி அளவுதான்.

**இந்து சமய பண்பாட்டை பேணிப் பாதுகாப்போம்**

தினமும் ஆலயத்துக்குச் சென்றால் நாளடைவில் வழிபாட்டு இரகசியங்கள் உங்களுக்குப் புரிந்து விடும். ஆலய வழிபாட்டில் உள்ள கேள்விகளுக்கு விடை கிடைக்கத் தொடங்கி விடும். அந்த விடைகள் உங்களை முழு மனிதனாக்கும். மனிதருள் மாணிக்கமாக நீங்கள் ஒளி வீசுவீர்கள். அந்த நிலையைப் பயன்படுத்தி பிறவிப் பெருங்கடலில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

நாளை

28.07.2018

சனிக்கிழமை

ஆடி 12

திதி: பிரதமை பி.இ 04.02 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.இ. 04.02 வரை
சுபநேரம்: 03.02 – 04.32 வரை
ராகுகாலம்: 09.02 – 10.32 வரை

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# சீன - இந்திய பனிப்போர் களமாக மாறும் இலங்கை

சீன – இந்திய வல்லாதிக்கப் போட்டிக்குள் இலங்கை சிக்கிக் கொண்டு திணறப்போகின்றது என்பது மேலும் மேலும் தெளிவாகி வருகின்றது. இதுவரை தெற்கில் மட்டுமே இருந்துவந்த இந்தப் போட்டி இப்போது வடக்கு வரைக்கும் விரிவாக்கம் கண்டுள்ளது. இது இனிவரும் காலங்களில்சீனஇந்தியபனிப்போர்க்களமாக இலங்கையை மாற்றும் என்று ஆருடம் கூறுவதில் தப்பில்லை.

இந்திய– சீனஅதிகாரப்போட்டியில்வடக்குமக்களுக்கான வீடமைப்புத்திட்டம்அடிபட்டுப்போகக்கூடாதுஎன்றுதெரிவித்திருக்கின்றார்அமைச்சரவைப்பேச்சாளரானஅமைச்சர் ராஜித சேனாரத்ன. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்சந்திப்பிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். இந்தவிடயம் குறித்து அமைச்சரவையில் சூடானவிவாதம் நடந்திருக்கிறது என்பதை அவரது கருத்தில் இருந்து புரிந்து கொள்வது ஒன்றும் கடினமான காரியமல்ல.

1.3 மில்லியன் ரூபா செலவில் சீனா 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது. இந்தியாவோ 2.2 மில்லியன் ரூபா செலவில் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. எனவே சீனாவுக்கு இந்த வாய்ப்பைக் கொடுக்கலாம் என்பது அமைச்சர் சுவாமிநாதனின் பரிந்துரையாக இருந்தது என்றும் அமைச்சர் ராஜித தெரிவித்தார். இது, வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டிக்குமத்தியில் உள்ளூர் கட்சிகளின் அரசியல் போட்டியும் சேர்ந்தோடுகின்றது என்பதை அப்பட்டமாகக் காட்டுகின்றது.

வடக்கில் வீடுகள் அமைக்கும் திட்டத்தை இந்தியாவிடம் கொடுக்குமாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அண்மையில் தலைமை அமைச்சரிடம் வலியுறுத்தியிருந்தது. இலங்கையில் தவிர்க்க முடியாமல் சீனாவின் ஆதிக்கம் பரந்து விரிந்து வரும் நிலையில் தனக்கு மிக நெருக்கமாக இருக்கும் நிலப்பரப்பான வடக்கைத் தன் முழு ஆளுகைக்குள் வைத்துக் கொண்டு சீனாவை அங்கு காலூன்றவிடாமல் தடுக்கவேண்டும் என்று புதுடில்லி விரும்புகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் ஆதரவு பொம்மை என்பது வெளிப்படையான ஒன்று என்பதால், இந்த விடயத்திலும் அது இந்தியாவுக்கே ஆதரவாக இருக்கின்றது.

ஈழத்தமிழர்கள்விடயத்தில் இந்தியாநல்லது எதையும் செய்யவில்லை என்றாலும் எதையாவது செய்துவிடும் என்று நம்புவதன் காரணமாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இந்தியாவிக்பக்கம்சாய்ந்துகிடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். அதேநேரத்தில் அமைச்சர்சுவாமிநாதன்முன்வைத்த 60 ஆயிரம் பொருத்துவீட்டுத்திட்டத்தைக் கடுமையாகஎதிர்த்து அதைநிறுத்தியிருந்ததுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.எனவேஇப்போதுகூட்டமைப்புஆதரவளிக்கும் இந்தியாவின்வீட்டுத்திட்டதைஎதிர்த்துசீனாவின்வீட்டுத்திட்டத்தைவடக்குக்குள்நுழைக்கஅமைச்சர்சுவாமிநாதன் எடுக்கும் நடவடிக்கைகள் புரிந்துகொள்ளப்படக்கூடியனவே.

எது எப்படியிருந்தாலும்சீன இந்திய ஆதிக்கப்போட்டியின் களமாகஇலங்கைஉருமாற்றம்பெற்றுவருவதுஅதிகரிக்கின்றது என்பது தொடர்ந்து உறுதியாகி வருகின்றது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனா தன்வசமாக்கியதைத் தொடர்ந்து மத்தள விமான நிலையத்தை இந்தியா தன்வசமாக்கிக்கொள்ள அதீத முயற்சிகளை எடுத்து வருகின்றது. தொடர்ந்து இப்போது வடக்கில் வீட்டுத்திட்டத்தைக்கைப் பற்றுவதற்கான போட்டியில் வந்து நிற்கின்றது.

தெற்கில் முதலீடு, வடக்கில் உதவித் திட்டங்கள் என்கிற வகையிலேயே காலூன்ற முடியும் என்பதைச் சீனா நன்கு உணர்ந்து வைத்துள்ளதால் அதற்கேற்ப அது காய் நகர்த்துகின்றது. சீனா அளவிற்கு முதலீட்டுத் திட்டங்களில் குதிக்க முடியாத இந்தியா, தமிழர்கள்வாழும் பிரதேசங்களை இன, மத, மொழிச் சொந்தத்தின் ஊடாகவும் வடபகுதியை நில அமைவைக் காரணம் காட்டியும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்குப் பார்க்கிறது.

இந்தப்போட்டியைத்திறம்படக்கையாள்வதன்மூலம்தனது நலன்களை இலகுவாக அடைய முடியும் என்று கொழும்பு அதீத இராஜதந்திரக்கணக்குகளைப்போடுகின்றது. போடப்படும் கணக்குகள் அனைத்தும் சரிவர நிறைவேறும் என்பது எப்போதும் நிச்சயமில்லை. சீன – இந்திய ஆதிக்கப்போட்டியால் இலங்கை சொர்க்கமானால் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். அதுவேநரகமாகிவிட்டால்? பார்த்துநடந்துகொள்வது மிக முக்கி...

# தீர்க்கதரிசனமற்ற முடிவுகளால் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ள இலங்கை அரசு

சிங்கள மூலம்- பேராசிரியர் நாலக கொடஹேவா
தமிழில்- வீ.எஸ்.ரீ

இன்றைய அரசு பதவிக்கு வந்த நாள்முதல் ஜெபிக்கும் ஒரே மந்திரம் "விற்பனை செய்தல்" என்பதாகும். சிலவேளை இன்றைய தலைமை அமைச்சர் காலையில் படுக்கையை விட்டு எழுவது, இன்று எதனை விற்பனை செய்யலாம் என்ற சிந்தனையுடனேயே எனக்கொள்ள முடிகிறது. ஏனெனில் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் எதையாவது விற்பதன் மூலமே தீர்வுகாண இயலுமென தலைமை அமைச்சர் நம்புவதாகத் தோன்றுகிறது.

அண்மையில் ஒருநாள், நாட்டின் பொருளாதாரம் 30வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது என வெளியான செய்தியை முழுநாடுமே தெரிந்து கொண்டது. அத்தோடு ரூபாவின் பெறுமதி பின்னடைவு கண்டிருப்பதாக நாட்டின் தலைமை அமைச்சர் பகிரங்கமாகவே கருத்து வெளிப்படுத்தியிருந்தார். ஆசிய வட்டகை நாடுகளில் விரைவான பொருளாதார முன்னேற்றத்தில் இரண்டாம் இடத்தை ஈட்டிய நிலையில் இயங்கிவந்த இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை, கூட்டு அரசு பொறுப்பேற்று மூன்றரை ஆண்டுகள் ஓடிக் கழிந்துவிட்ட நிலையிலேயே, இன்று 30வீத பொருளாதார வீழ்ச்சிக்கு நாடுமுகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

அந்த வகையில், 2014ஆம் ஆண்டில் நாட்டின் சகலதுறை பொருளாதார முன்னேற்ற விடயத்தில், தென்னாசிய வட்டகையில் இலங்கை முதலாவது அல்லது இரண்டாவது இடத்தை வகித்து வந்தது. நாட்டின் நிகர பொருளாதார அபிவிருத்தி வேகம் 7வீதத்தை அண்மித்திருந்தது. அதே பொருளாதார நிலை இன்று 30வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதுவரை தம்மால் பயன்படுத்தப்படாத திருக்கைவாலால், நாலு சாத்துச் சாத்துவதற்கு அரசதலைவருக்கு இவரை விடப்பொருத்தமான ஒருவரைத் தேடிக் கண்டு பிடிப்பது சிரமமானதாக அமையும்.

## தமது அரசினால் நாட்டின் பொருளாதாரம் நலிவடையச் செய்யப்பட்டதை ஒப்புக்கொள்கின்றார் ரணில்

"வாய் பொய் கூறினாலும், நாக்கு ஒருபோதும் பொய் பேசாது" என்ற பழைய முதுமொழியொன்று வழக்கில் உள்ளது. அதன்படி, தமது அரசினால் நாட்டின் பொருளாதாரம் நலிவடையச் செய்யப்பட்டது என்பதைக் காலம் பிந்தியாவது தலைமை அமைச்சர் பகிரங்கமாக ஒப்புக்கொள்வது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றானபோதிலும், மற்றொரு வகையில், அது பயங்கரமானதொரு செய்தியாக அமைவது. தலைமை அமைச்சர், அரசு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு என்றவகையில் சிறிது நேர தாமதத்தின் பின்னர் தெரிவித்த கருத்தாக அமைவதால் ஆகும். "அப்படியானால் நாங்கள் இவற்றையும் விற்றுவிடுவோமே!" என தலைமை அமைச்சர் வெளியிட்ட கருத்தை கேட்கவும், பார்க்கவும் பலரால் முடிந்தது.

இந்தத் தடவை எதனை விற்பனை செய்யத் தலைமை அமைச்சர் திட்டமிடுகிறார் என்பது குறித்துத் தெளிவு இல்லாதபோதிலும், தலைமை அமைச்சரது நீண்ட விற்பனைப் பொருள்களது பட்டியலை நோக்கும்போது, எந்தவொரு தேசிய சொத்தையும் பாதுகாக்க அரசிடம் உறுதிப்பாடு இல்லை என்பதை நாட்டின் பொதுமக்கள் தற்போதே உணர்ந்து கொண்டுள்ளனர்.

இலங்கைக்கு இரண்டாவதானதொரு பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் தேவையை உணர்ந்து கொண்ட முதலாவது அரசு, மகிந்த ராஜபக்சவின் அரசல்ல. அம்பாந்தோட்டை துறைமுகத்திட்டம் போன்று மத்தள வானூர்தி நிலையத்திட்டமும் பல அரசுகளால் வெறும் வாய்ப்பேச்சுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த திட்டங்களாக இருந்த போதிலும், கடந்த அரசின் நிர்வாகத்தின் கீழ் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன.

## நாட்டை முன்னேற்ற நினைக்கும் அரசுக்கு புரிந்துணர்வும் வேலைத் திட்டமும் அவசியம்

ஒருநாட்டை முன்னேற்ற வேண்டுமானால், அந்த நாட்டை நிர்வகிக்கும் அரசுக்கு புரிந்துணர்வும் சரியான வேலைத் திட்டமும் இருத்தல் அவசியமாகும். தமக்கென புரிந்துணர்வும் திட்டமும் இல்லாது, மற்றவர்கள் மீது குறைகூறுவதன் மூலம் காலநேரத்தை வீண் விரயம் செய்வதற்கு அரசு என்று ஒன்று தேவையில்லை. கடந்த மகிந்த அரசின் வசமிருந்த திட்டத்தின் ஒரு அம்சமாக அமைந்ததன் காரணமாகவே, அன்று இலங்கையை தென் ஆசிய வட்டகையில் கடல் மற்றும் வான் பயணத்தின் கேந்திர நிலையமாக ஆக்கும் நோக்குடனேயே மத்தள வானூர்தி நிலையம் உருவாக்கப்பட்டது. அம்பாந்தோட்டை சுற்றாடலை பன்னாட்டு துறைமுக வசதிகொண்ட தொழில் நகரமாக ஆக்கும்போது அதன் அருகில் வானூர்தி நிலையமொன்றும் அமைக்கப்படல் அவசியம் என்பதை உணர்ந்துகொள்ள பெரும் வர்த்தக அறிவு எதுவும் தேவைப்படாது.

உரிய சுற்றுச்சூழல், நில அமைவு என்பவை முறைப்படிஆய்வு செய்யப்பட்ட பின்னரே மத்தளவில் வானூர்தி நிலையம் அமைக்க முடிவு மேற்கொள்ளப்பட்டது. தற்போதைய அரசு, குறித்த மத்தள பிரதேசம் வானூர்தி நிலையமொன்றை உருவாக்கத் தரம் வாய்ந்த இடமாக அமையவில்லை எனக் கூறுவதை நம்புவோரிடம், அவர்களது அந்த வாதம் சரியானதாயின், அந்த வானூர்தி நிலைய நிர்வாகத்தை பொறுப்பேற்பதற்கு இந்தியாவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கக் கூடுமா? என வினா எழுப்ப வேண்டியுள்ளது. உண்மையில் இந்தியா மத்தள வானூர்தி நிலையத்தின் முக்கியத்து வத்தை, பெறுமதியை நன்கு உணர்ந்துள்ளதாகவே கொள்ள முடிகிறது. அதே வேளை, இன்றைய ஆட்சியாளர் தரப்பின் இயலாத்தனம் மற்றும் பரந்த நோக்கின்மை என்பவை இந்தியத் தரப்புக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்துள்ளதாகவும் கொள்ளமுடிகிறது. அதே வேளை, பூகோள அமைவுக்கமைய முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ள அம்பாந்





தோட்டை துறைமுகத்தின் நிர்வா கத்தைக் கைப்பற்றிக்கொண்டுள்ள சீனாவுக்கு அதுவோர் அதிர்ஷ்டவசமான வாய்ப்பு என்றே கொள்ளமுடிகிறது.
அம்பாந்தோட்டை கைத்தொழில் நகரம் அமைக்கப்பட்ட பின்னர், வருடாவருடம் இலட்சக்கணக்கான வானூர்திப் பயணிகள் அம்பாந்தோட்டைக்கு பயணம் மேற்கொள்வரென்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. வர்த்தக ரீதியான பயணங்களை மேற்கொள்பவர்கள் போன்றே, உல்லாசப் பயணிகளாகவும் பெருந்தொகையினர் அவ்விதம் இலங்கைக்கு வரக்கூடும். கைத்தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்கள் போன்றே, அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் ஒரு பகுதி வானூர்தி மூலம் எடுத்துவரப்படவும், எடுத்துச் செல்லப்படவும் வாய்ப்பமையும். அதே வேளை கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்குப் பதிலாக சில விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் மத்தள வானூர்தி நிலையமூடாக தமது பயணிகள் சேவையை ஒழுங்கு செய்யக்கூடும்.

**மத்தள வானூர்தி நிலைய உருவாக்கத்தின் சாதக பாதகங்கள்**

மத்தள வானூர்தி நிலையத்தைப் பயன்படுத்தி தற்போது புதிய வானூர்தி போக்குவரத்து மார்க்கங்கள் சில ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் மலே சியா போன்ற நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வானூர்திப் பயணங்களை மேற்கொள்வோர் பயண மார்க்கத்தில் குறைவான தூரத்தை பயணிக்க நேர்வதால், வானூர்திப் பயணக் கட்டணங்களும் குறைவடைய வாய்ப்பமையும்.

அதுமட்டுமன்றி மத்தள வானூர்தி நிலைய மார்க்கத்தைப் பயன்படுத்தும் சகல வானூர்திகளும், அவை மத்தள வானூர்தி நிலையத்தில் தரை இறங்காவிடினும், மத்தள வானூர்தி நிலையச் சுற்றாடலில் பறப்பை மேற்கொள்வதன்மூலம், இலங்கையின் ஆகாய எல்லைக்குள் பறப்பை மேற்கொள்வதால் மத்தள வானூர்தி நிலைய நிர்வாகத்துக்கு அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டி ஏற்படும்.

மத்தள வானூர்தி நிலையம் நீண்டகால பயன்பாட்டை கருத்தில் கொண்டே திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப் பெரிய வானூர்திகளைக் கூடத் தரையிறக்குவதற்கான ஏற்பாடுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது முதலாவது கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதோடு, வருடமொன்றுக்கு பத்து இலட்சம் பேர் வரையிலான வானூர்திப் பயணிகள் மத்தள வானூர்தி நிலையம் ஊடாகப் பயணிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் இந்த வானூர்தி நிலையம் விஸ்தரிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால், பாதிப்பு எதுவுமின்றி குறைந்த செலவுடன் மேலதிக நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளத்தக்க விதத்தில் உரிய திட்டமிடல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எந்தவொரு வர்த்தக நடவடிக்கைக்கும் வர்த்தக ரீதியிலான திட்டமிடல் அவசியமாகிறது. அந்தவகையில் சில வானூர்தி பயண நிறுவனங்கள், மத்தள விமான நிலைய நிர்வாகத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன. அம்பாந்தோட்டை தொழில் நகரம் உருவாக்கப்பட்டு முடிந்தவுடனும், உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி செய்யப்படுமிடத்தும், தேவையின் அதிகரிப்புக்குச் சமாந்தரமாக, அவ்விதம் மென்மேலும் வானூர்தி நிறுவனங்க ளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிட்டும். ஆனால் கடந்த 2015ஆம் ஆண்டின் அரசியல் மாற்றத்தின் பின்னர், குறித்த இந்த வர்த்தகத் திட்டம் புறமொதுக்கப்பட்டிருந்தது. மத்தள வானூர்தி நிலையக்கட்டடங்கள் நெல் பாதுகாத்து வைக்கும் களஞ்சியங்களாக கூட்டு அரசால் மாற்றப்பட்டன. அந்த வகையில் புதிதாக விமானப் போக்குவரத்துத் தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஒருசில வானூர்திப் பயண நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் கைவிடப்பட நேர்ந்தது.

**அம்பாந்தோட்டை துறைமுகம்- மத்தள வானூர்தி நிலையம் தொடர்பில் ஒரேவித கொள்கை நிலைப்பாட்டைக் கடைக்கொள்ளும் அரசு**

அந்தவகையில், அம்பாந்தோட்டை துறைமுக விடயத்தில் செயற்பட்டமை போன்று, மத்தள வானூர்தி நிலைய விடயத்திலும், ரணிலின் அரசு ஒரே விதமான கொள்கை நிலைப்பாட்டையே கடைக்கொண்டது. அது, முதலாவது வர்த்தக ரீதியான செயற்பாடுகளை நலிவடைய விட்டு, இரண்டாவதான திட்டத்தை வெளித்தரப்புக்கு விற்பனை செய்தமையை நியாயப்படுத்துதல் ஆகும்.

அரசு கூறும் எந்தவொரு பொய்யையும் உண்மையெ நம்பும் சிலர், மத்தள வானூர்தி நிலையம் நாட்டுக்கு பெரும் சுமையான, பெரியதொரு முதலீடாகுமென நம்புவது உண்மையான அடிப்படைத் தகவல்களை அறியாதிருப்பதனால் ஆகும். உண்மையில் மத்தள வானூர்தி நிலையம் உருவாக்கப்பட்டது 30 பில்லியன் ரூபாக்களுக்குக் குறைவான செலவிலேயே ஆகும். இன்றைய கூட்டு அரசு பதவிக்குவந்த பின்னர் மேற்கொண்ட இரண்டு தவறான முடிவுகளான துறைமுக நகர் உருவாக்கும் திட்டத்தை இடைநிறுத்தி வைத்தமை மற்றும் சிறிலங்கன் வானூர்திச் சேவை நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்படவிருந்த புதிய விமானங்களுக்கான கொள்வனவுக் கட்டளையை கைவிட்டமை என்பவற்றின் மூலம் செலுத்தவேண்டி ஏற்பட்ட நட்ட ஈட்டுத் தொகை மட்டும் 40 பில்லியன் ரூபா வரையாகுமெனத் தெரிய வருகின்றது.

நாட்டின் சொத்துக்களின் நிர்வாகத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கையளித்து, அந்த நிறுவனங்கள் மூலம் அவை அபிவிருத்தி செய்யப்படும்போது அது இலங்கைக்கு இலாபகரமானது என்றதொரு மாயைத் தோற்றம் தலைமை அமைச்சர் ரணிலின் அரசால் நாட்டு மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டு வருகின்றது. ஆனால், அதற்காக இந்த நிறுவனங்களுக்கு பெருமளவிலான வரிச்சலுகை அரசினால் வழங்கப்படுகிறது என்பதையும், அதன் காரணமாக அடுத்த பரம்பரைக்குக்கூட இலங்கை அரசின் இந்த வர்த்தக முயற்சியால் இலாபமெதுவும் ஈட்டத்தக்க வாய்ப்பு இல்லை என்ற உண்மையையும் அரசு பொதுமக்களுக்கு வெளிப்படுத்தாமல் மறைத்து விடுகிறது.

இவை மட்டுமன்றி, அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தம் முதல் , மேற்கொள்ளப்படவுள்ள இந்திய வர்த்தக ஒப்பந்தம் வரை, நிர்வாக அதிகாரிகள் தொடக்கம் அந்தத் திட்டங்களில் கடமையாற்றவுள்ள கூலித்தொழிலா ளர்கள்வரை, தத்தம் நாட்டுப் பிரசைகள் மத்தியிலிருந்தே நியமனம் செய்வதற்கான சலுகை இந்த வெளிநாட்டு நிறுவ னங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இந்த நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு குறித்த வெளிநாட்டு நிறுவனங்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களில் வேலை வாய்ப்புப்பெறும் சந்தர்ப்பம் கிட்டாது போய்விடவுள்ளது. அந்த வகையில் இந்த அரசுத் தலைவர்களது இத்தகைய ஏமாற்றுக்களை இனம் கண்டு தெரிந்து கொள்ள சாதாரண பொதுமக்களால் முடிவதில்லை. இன்றைய அரசுத் தலைவர்கள் நாளாந்தம் இந்த நாட்டுக்குச் செய்யும் துரோகம் மிகமிகப் பாரதூரமானது.

**நீர்மூழ்கிக் கப்பற்படைப் போர் இடம்பெறலாமென எதிர்வு கூறும் ரணில்**

அண்மையில் குறிப்பிட்ட அரச நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துவெளியிட்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, புதுமையான தகவலொன்றைத் தெரிவித்திருந்தார். மிகக்கிட்டிய எதிர்காலத்தில் இலங்கையை சூழவுள்ள கடற்பிராந்தியத்தில் இரு நாடுகளது நீர்மூழ்கிக் கப்பல் படைப் பிரிவுகள் மத்தியில் போர் ஒன்று இடம்பெற வாய்ப்பிருப்பதால், அதற்கு முகம் கொடுக்கும்வகையில்எமதுநாட்டுத்துறைமுகங்களைப் பாதுகாக்க அரசு கடற்படையினருக்கு முன்னுரிமை வழங்கவுள்ளதாக தலைமை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இது விடயத்தில் எதிர்காலத்தில் இலங்கையில் தமது முக்கியத்து வத்தை நிலைநாட்ட சீனாவும் இந்தியாவும் போரொன்றில் ஈடுபட வாய்ப்புள்ளது என்பதையே தலைமை அமைச்சர் இவ்விதம் சொல்லாமல் சொல்லியிருக்கிறார் எனக் கொள்ள முடிகிறது.

அந்த வகையில் தனது அண்டை நாடுகளான இந்தியா மற்றும் சீனாவுடன் அரசியல் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாத இலங்கையை, பன்னாட்டு ரீதியிலான போரொன்றில் மாட்டிக்கொள்ள வைக்கும் வகையில் ஆபத்து நிலையொன்றை உருவாக்கி வைத்துள்ளவர்கள் எவர் என்ற கேள்வி இங்கு எழுகிறது.
ஒன்றுக்கொன்று மிகக்குறுகிய தூர இடைவெளியில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள வானூர்தி நிலையம் என்பவற்றை முறையே சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றுக்கு நிர்வகிக்க வழங்கியுள்ளதன் மூலம் மோதல்களுக்குத் தானே வழியமைத்துக் கொடுத்துள்ளது இன்றைய இலங்கை அரசு.


இன்றைய அரசின் தான்தோன்றித்தனமான இந்தச் செயற்பாடுகள் இலங்கையின் எதிர்காலத்துக்கு எத்தகைய பாரதூரமான பாதிப்பை, அபாயத்தை ஏற்படுத்தப் போகின்றன என்பது குறித்து தற்போது எதனையும் எதிர்வுகூற இயலாதுள்ளது.

## ஆசிரியருக்கான கடிதம்

# பார்த்தீனியப் பரம்பலை முற்றாக அழித்தொழிப்போம்

கந்த புராணத்தில் அரக்கனான சூரபத்மன் வெட்டவெட்டத் தளைக்கும் விதத்தில் சிவபெருமானிடம் சாகாவரம் பெற்றிருந்தான் என்று கந்தபுராணப் படிப்பின்போது பயன்கூறியவர் விளக்கம் கூறச் கேட்டமை இன்றும் ஞாபகத்தில் உள்ளது.
அந்த வகையில் எவ்வளவுதான் முயற்சித்த போதி லும், எனது தோட்ட நிலத்திலிருந்து பார்த்தீனியச் செடிகளை என்னால் முற்றாக அழித்தொழிக்க இயலவில்லை என்பது கசப்பானதொரு உண்மையாகவே உறைக்கிறது.
மூன்று தசாப்தகால உரிமைப்போரில் இடைநடுவில் தமிழர்களது ஆபத்பாந்தவர்கள் என்று [illegible] வந்து, வடபகுதியில் கெட்டித்தனம் காட்டிவிட்டுப்போன இந்திய அமைதிப் படையினர் தமிழர் பகுதிகளுக்கு தானமாகத் தந்துவிட்டுச் சென்ற சாகாவரம் பெற்ற பார்த்தீனியத்தின் பரம்பலால் வடபகுதி விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பு சொல்லுந்தரமன்று.
நிலவும் தற்போதைய வறட்சி நிலையில் வாடி வதங்கி, மண்ணோடு மண்ணாக மறைந்திருந்து ஜாலம் காட்டும் பார்த்தீனியம், ஒரு மழையைக் கண்டதும் என்ன மாதிரி "கிசு கிசு" வென்று தலைதூக்கி புது மணப்பெண் போல் தன்னை இனங்காட்ட ஆரம்பித்து விடுவது ஆச்சரியம் தருமொன்றே.
"பட்டகாலிலே படும்: கெட்ட குடியே கெடும்" என்பதற்கேற்ப இத்தனை இழப்புக்கள், துன்ப துய்ரங்களையும் தாங்கிக் கொண்டு, தமது விவசாய முயற்சிகளில் கண்ணும் கருத்துமாகச் செயற்படும் யாழ்ப்பாண குடாநாட்டு விவசாயிகள் இந்தப் பார்த்தீனியத்தின் பாதிப்புக் காரணமாக முன்னைய காலகட்டத்தைப் போன்று தமது விவசாய முயற்சிகளில் உச்சக்கட்டப் பலாபலனைப் பெற்றுக்கொள்ள இயலாது சிரமப்படுகின்றனர்.
இத்தகைய பாதிப்புக் குறித்து அனுபவ ரீதியில் நன்கறிந்துள்ள விவசாயத் திணைக்களம்சார் அதிகாரத் தரப்பினர்கள், பார்த்தீனியத்தின் பரவலை முற்றாக ஒழித்துக்கட்டும் நோக்கில் தடுப்பு நடவடிக்கைகளில் ஆர்வம்காட்டிச் செயற்பட ஆரம்பித்திருப்பதான செய்தி மனதுக்கு மகிழ்ச்சி தருமொன்று. இது விடயத்தில் வடக்கு விவசாய அமைச்சர் அக்கறை காட்டிச் செயற்பட முனைவதாகக் கூறப்படுகிறது.
அதேவேளை இந்தப் பார்த்தீனியப் பரம்பலை முடிந்த அளவுக்குக் கட்டுப்படுத்த பொது மக்கள் தரப்பிலிருந்து ஒத்துழைப்பு வழங்கப் படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தவறானதெனக்கூற இயலாத அளவுக்கு, எம்மவர்கள் பார்த்தீனியத்தின் பரவல் குறித்துக் கவலைப் படுவதாகவோ, அதன் பரம்பலை கட்டுப்படுத்த அக்கறை காட்டுவதாகவோ கூறிக் கொள்ள இயலவில்லை. குறிப்பாக இத்தகைய அக்கறையீனம் மற்றும் பொறுப்பற்ற தன்மையைக் கண்டிக்கும் விதத்தில் விவசாயத் திணைக்களத்தினர், பொலிஸார் மற்றும் பொதுத்துறைசார் திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் பார்த்தீனியச் செடிகளை அழிக்காது அதன் பரம்பலுக்குக் காரணமாக ஆகும் காணி உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கத் தீர்மானித்து, அதனை நடைமுறைப்படுத்த முன்னுரிமை வழங்கிச் செயற்பட முன்வந்துள்ளமை இன்றைய காலத்தின் முக்கிய தேவையொன்றாக ஆகியுள்ளது. அந்த வகையில் எமது சுற்றாடலில் காணப்படும் பார்த்தீனியச் செடிகளை அடியோடு அழித்தொழிக்கும் செயற்பாட்டில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருவோமா?

*ப.பரந்தாமன், கோப்பாய்*



# நாற்பதாவது வயது

உடம்பின் நடுப்பகுதி வயிறு
அதுபோல வாழ்க்கையின் நடுப்பகுதி நாற்பது

இந்த நாற்பதாவது வயது ஆரம்பத்தில்
நீங்கள் எப்படி இருப்பீர்களோ,அப்படித்தான்
இறுதி வரையில் இருப்பீர்கள்.

தொந்தி கனக்க விடாதீர்கள் அதனால்
தொந்தரவு வரும்.
மனம் கனக்க விடாதீர்கள் அதனால்
சாவு வரும்.

ஒரு மனிதன்
வியாதியுடன் வாழப்போகிறானா,
வீரியமுடன் வாழப்போகிறானா,
நெஞ்சு நிறைவோடு வாழப்போகிறானா
என்பதைத் தீர்மானிக்கும் வயதுதான்
இந்த நாற்பது.

நிறைய வேலை செய்வதால்
எமக்கு நிம்மதி போவதில்லை.
உடம்பு உருக்குலைவதில்லை.

என்ன நடக்குமோ என்ற
பயமும் கவலையும்தான்
மனிதன்மீது பாரமாக இறங்கி
அவனை நொறுக்கிவிடுகின்றன.

பரபரப்பின்றிச் செயல்படுங்கள்.
கோபப்படாமல் காரியமாற்றுங்கள்.
நிதானத்தைக் கடைபிடியுங்கள்.
ஆரவாரம் வேண்டாம்.
அலட்டிக் கொள்ளாதீர்கள்
பொறுப்புக்களை சீராக நிறைவேற்றுங்கள்.

அவசியமற்ற சுமைகளைப் போட்டுக்
கொள்ளாதீர்கள்.
அடிக்கடி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

முகத்தை மலர்ச்சியுடன்
வைத்துக் கொள்ளுங்கள்.
கடுகடுப்பும் சிடுசிடுப்பும் வேண்டாம்.

'ஸ்ட்ரஸ்' உண்டாக்கிக் கொண்டால்,
'அட்ரஸ்' இல்லாமல் போய்விடுவீர்கள்.

கவலையைக் கழுத்தைப் பிடித்து வெளியே
தள்ளுங்கள்



# ஜூங்காவில் ரப்பர் போல் ஆடுகிறார் சாயிஷா!

கோகுல் இயக்கத்தில் உருவாகிவரும் ஜூங்கா படத்தில் விஜய் சேதுபதி ஜோடியாக சாயிஷா, பிரியா பவானி ஷங்கர் நடித்துள்ளனர். யோகி பாபு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

முழுக்க முழுக்க வெளிநாடுகளில் படமாகி இருக்கும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதி, 'ஜூங்கா' என்ற கதாபாத்திரத்தில் மாறுபட்ட தோற்றத்தில் நடித்திருக்கிறார். தற்போது இந்தப் படத்தின் "பாரிஸ் டு பாரிஸ்" பாடலின் காணொலி வெளியாகியுள்ளது. இதில் சாயிஷா ரப்பர் போல வளைந்து ஆடுவதைக் கண்டு அனைவரும் வியந்துள்ளனர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். தாமதமான செயல் கூட எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். சமூகப் பணி புரிவதில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சுயநலத்துடன் சிலர் உங்களிடம் அணுகலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் உருவாகலாம். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவு அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**துலாம்:** சுயநலத்துடன் சிலர் உங்களிடம் பழகலாம். தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உடல்நிலை அதிருப்தி அளிக்கலாம் கவனம்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானம் தேவை. தகுதிக்கு மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** நேர்மையை மதித்து செயல்படுவீர்கள். எளிய முயற்சியால் பலமடங்கு நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும்.

**மகரம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் முன்னேற கூடுதல் உழைப்பு அவசியம்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பிற்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவரும் நட்பு பாராட்டி நெருங்குவர். தொழில்வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள்.


**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைபடுவர். கூடுதல் உழைப்பால் தொழிலில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.







நாங்களே ஒரு பாட்டுப் பாடி அதை
அலாரமா வைக்கணும்




அப்பதான் அலாரம்
அடிச்சா பயத்தில உடனே
எழுந்திருப்போம்..






வாழ்க்கையின் கடந்த காலத்தை
தட்டி எழுப்பாதீர்கள்..
அது கண்ணீரைப் பரிசளிக்கும்.. எதிர்
காலத்தை நினைத்து கலங்காதீர்கள்..
அது ஒரு பயத்தை விதைக்கும்..

இந்த நொடி எதுவோ அதை
சந்தோசமாக எதிர்கொள்ளுங்கள்!!
அதை ரசித்து வாழ்ந்து பாருங்கள்!!
வாழ்க்கைப் பயணம் அழகாகும்...

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | 7 | | | | | |
| 1 | | | | 8 | | | | |
| 6 | | | | | | | | |
| | | | | | 7 | | 4 | |
| 2 | | | | | | 6 | | |
| 8 | | | | 1 | | | 9 | 2 |
| | | | 8 | 5 | | | | |
| | 2 | 4 | 3 | | | | | 5 |
| 7 | | | | | 6 | 1 | | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 7 | 2 | 6 | 5 | 3 | 8 |
| 7 | 8 | 5 | 1 | 9 | 3 | 2 | 6 | 4 |
| 2 | 3 | 6 | 5 | 8 | 4 | 7 | 9 | 1 |
| 6 | 1 | 3 | 2 | 5 | 7 | 4 | 8 | 9 |
| 4 | 5 | 7 | 9 | 3 | 8 | 1 | 2 | 6 |
| 9 | 2 | 8 | 6 | 4 | 1 | 3 | [illegible] | 7 |
| 3 | 7 | 2 | 4 | 6 | 9 | 8 | 1 | 5 |
| 8 | 9 | 4 | 3 | 1 | 5 | 6 | 7 | 2 |
| 5 | 6 | 1 | 8 | 7 | 2 | 9 | 4 | 3 |

# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதி – 2018

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிட்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 0212222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 30.07.2018 –13.08.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி **முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 30.07.2018 ம் திகதியில் இருந்து 13.08.2018 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 14.08.2018ஆம் திகதி மாலை 2.00 மணிக்குமுன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது) நாள்களுக்கு (02.10.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக் கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 08.08.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/06 / PSDG/2018/02 | கமால் ஒழுங்கை மற்றும் உப ஒழுங்கை புனரமைப்பு | 1.21 | 02 மாதங்கள் | C9 &C8 வீதி | 12,500.00 | 30.10.2018 |

முதல்வர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
26.07.2018

(IN/7365)(10)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல கட்டுமான நிறுவனத்திற்கு
N.C.T Civil/Q.s, HNDE / NDT (Civil eng),
HND. B.Tech ivq level -V (Civil/Qs)
தகைமையுடைய அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை.


தொடர்பு - 077 744 4098
Email dandevakumar@gmail.com

## வீடு. வளவு விற்பனைக்கு உண்டு

சிவபூமி அறக்கட்டளைக்குச் சொந்தமான மாதகல் வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்கள் :- மாதகல் கிழக்கு, மாதகல் என்னும் முகவரியில் அமைந்துள்ள வீட்டில் வசிக்கும் கலாநிதி ச.கனகசபை அவர்களை நேரில் சந்தித்து விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (CS/18495)(11)

சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் தர்மலிங்கம் மனோகரன்
(சின்னத்தம்பி)

மண்ணில் 15.11.1965
விண்ணில் 13.06.2018

நாள்கள் 45 ஆகியும் உன்
புன்னகை வதனம் - எம் நெஞ்சில்
நீங்காது வாழ்கிறது
நல்லவனே உன் ஆன்மா
ஆனந்தமாய் இளைப்பாற
தினமும் நாம் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெரியவிளான்,
இளவாலை.
குடும்பத்தினர்

## நினைவஞ்சலிகள்
## 13ஆம் ஆண்டு – முதலாம் ஆண்டு





தோற்றம் 28.04.1928 மறைவு 21.07.2005
தோற்றம் 31.03.1938 மறைவு 07.08.2017

அமரர்
கார்த்திகேசு
செல்லத்தம்பி
*திதி : அபரபக்க பிரதமை*
*(28.07.2018)*

திருமதி
சாந்தநாயகி
செல்லத்தம்பி
*திதி : பூரணை*
*(27.07.2018)*

உம் புகழ் பூவுலகம் வாழும் காலம் வரை அப்பா அம்மா......
தாயே கருவறையில் பாதுகாத்து எங்களை உம் வயிற்றில் சுமந்தாய்
காலமெல்லாம் சுமந்தாய் உம் நெஞ்சில் தாயென்று சொல்ல நீங்கள் வேண்டும்
தினமும் எங்களுக்கு தந்தையே உறக்கம் தொலைத்தாய் களைத்தாய் வியர்வையில்
குளித்தாய் நாங்கள் நலமாய் வாழவே..... வலிகள் எமைத் தாக்கினால் வலிப்ப
தென்னவோ உமக்கெல்லவா..... துயரங்களால் எம் விழி நனைந்தால் துடைப்பது
உம் விரல்கள் அல்லவா..... சோதனையானாலும் வேதனையானாலும் தோள்
கொடுக்கும் தெய்வங்கள் நீங்களல்லவா...அனுதினமும் போற்றப்பட வேண்டும்
உங்கள் புகழ் பூவுலகம் வாழும் காலம் வரை...... அப்பா அம்மா

என்றும் அன்புடன் :
பிள்ளைகள்

உசன், மிருசுவில்

## 18ஆம் ஆண்டு நினைவலைகள்

"நீத்தல்,
வாழ்வின்
முடிவு அல்ல;
புதியதொரு
புனித வாழ்வின்
தொடக்கம்."



அமரர்
தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்
[இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.]
*தோற்றம் : 26.06.1941* *மறைவு : 14.08.2000*

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி
குடும்பத்தினர்

## LG InstaView குளிர்சாதனப்பெட்டி - இரண்டு முறை தட்டி குளிர்சாதனப் பெட்டியினுள் உள்ளவற்றை இலகுவாக பார்த்திடுங்கள்.

தேவையற்ற விதத்தில் நீங்கள் உங்கள் குளிர்சாதனப் பெட்டியை திறந்து மூடுவதால் உங்கள் குளிர்சாதனப் பெட்டியின் குளிர்க்காற்று வீண் விரையமாகின்றது என்பது நீங்கள் அறிந்த உண்மையாகும். அண்ணளவாக ஒரு தினத்திற்கு 79 முறைகள் உங்கள் வீட்டு குளிர்சாதனப் பெட்டியின் கதவு திறந்து மூடப்படுவதாக ஆய்வு ஒன்றின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் உங்கள் குளிர்சாதனப் பெட்டியினால் உற்பத்தி செய்யப்படும் குளிர்க் காற்று வீண் விரையமாவதோடு, குளிர்சாதனப் பெட்டியை மீண்டும் குளிர்ச்சியூட்டுவதற்கு மேலதிக மின்சாரம் செலவாகிறது. இவ்வாறான வீண் விரையங்களை தடுப்பதற்காகவே சிறப்பு கண்ணாடி பேனல் ஒன்றுடன் கூடிய LG Insta View குளிர்சாதனப் பெட்டியை LG அறிமுகம் செய் துள்ளது. மேலும், இந்த பேனலை தட்டுவதன் மூலம் குளிர்சாதனப் பெட்டியினுள் இருக்கும் விளக்கு ஒளிரும் போது உங்களுக்குத் தேவையான பொருள் குளிர்சாதனப் பெட்டியினுள் உள்ளதா, என குளிர்சாதனப் பெட்டியின் கதவை திறக்காமலே வெளியிலிருந்து மிகவும் இலகுவாக பார்க்க முடியும்.



சிறப்பு செயல்திறனும், கவர்ச்சிகரமான நிறைவும் கலந்து LG Insta View குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. டோ-இன்-டோ தொழில்நுட்பம் மற்றும் 33" கண்ணாடி பேனலுடன் வருகிறது. மேற்கூறியவாறு இந்த பேனலை 2 முறை தட்டுவதன் மூலம் குளிர்சாதனப் பெட்டியினுள் ஒளியூட்டப்படுகிறது. டோ-இன்-டோ கம்பார்ட்மென்ட் அறையில் அடிக்கடி உங்களுக்கு தேவைப்படும் உணவுப் பொருள்களை சேமித்து வைக்க முடியும் என்பதனால் குளிர்சாதனப் பெட்டியில் உள்ள குளிர் காற்றை வீணாக்காமல் மிகவும் இலகுவாக உங்களுக்கு தேவையான பொருளை வெளியில் எடுக்க முடியும். இதன்மூலம் வீண் விரையமாகும் குளிர் காற்றை தடுத்து 42% வரை குறைத்து மின்சாரத்தை அதிகம் சேமித்து.

இந்த குளிசாதனப் பெட்டியிலுள்ள விசேட சிறப்பம்சம் யாதெனில் இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸராகும். இதிலுள்ள லீனியர் பிஸ்டன் ஒரு இடத்தில் மாத்திரம் மோதுண்டு மிகவும் மெதுவாக மோதி செயற்படுவதால் குளிரூட்டியின் வெப்பநிலையை மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் செல்வதை குறைத்து குளிரூட்டியில் சேமித்து வைக்கப் பட்டுள்ள உணவுப் பொருள்களை 7 நாள்கள் வரை புத்துணர்வாக பாதுகாக்கிறது.

மேம்படுத்தப்பட்ட Hygiene Fresh + சுத்திகரிப்பு செயற்பாட்டினால் குளிர்சாதனப் பெட்டியினுள் உள்ள குளிர்க்காற்றை சுத்திகரிப்பதோடு, சேமித்து வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்களின் புத்துணர்வையும், ஆரோக்கியத்தை உறுதிசெய்கிறது. 5 படிமுறைகளாக செயற்படுத்தப்படும் இந்த சுத்திகரிப்பு செயற்பாட்டினால் மரக்கறிகள், பழங்கள் மற்றும் சமைத்த உணவில் இருந்து வெளியாகும் ஈரலிப்பையும், துர்நாற்றத்தையும் நீக்குகிறது. மேலும் வெளிப்புறமாக உள் நுழையும் பேக்டீரியாவையும், கிருமிகளையும் 99.99% அழிப்பதோடு, உணவுப் பொருள்கள் விரைவாக கெட்டுப் போகும் அபாயத்தை அகற்றுகிறது. அதேபோல் உங்கள் குடும்பத்திலுள்ள சகல உறுப்பினர்களுக்கும் ஆரோக்கியமான மற்றும் புத்துணர்வான உணவுகளை சுவைத்திடுவதற்கு வழிவகுக்கின்றது. இதனால் உங்களுக்கு அடிக்கடி உணவுப்பொருள்களை வாங்குவதற்கு கடைகளுக்கு போகாமல் உங்கள் நேரத்தையும், பணத்தையும் சேமித்துக்கொள்ள முடியும்.

புதிய LG Insta View குளிர்சாதனப் பெட்டிகளின் அணிவகுப்பை நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

(C/32011)(10)

★ ★ ★

## நீங்கள் இருக்கும் போதே உங்கள் வீட்டுப் பாவனையின் உற்பத்திகளை புதுப்பித்துத் தரும் துரிதசேவையை அபான்ஸ் வழங்கிவருகிறது



இலத்திரனியல் மற்றும் வீட்டுப்பாவனை மின் உற்பத்திகளுக்கு சேவையைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் புதுப்பித்துக் கொள்வதற்கான தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் இந்த காலகட்டத்தில், அதற்கான தேவைகளை சிறப்பாக பூர்த்தி செய்து சிறப்பான சேவையை அபான்ஸ் சேவைப் பிரிவு வழங்கிவருகிறது. அந்த வகையில் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் அல்லது குறித்த கிளையில் இருக்கும் அந்த தருணத்தில் அந்த நேரத்திலேயே வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்யும் ஒரு சேவைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் வெள்ளவத்தை அபான்ஸ் சேவை நிலையம் மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் மிகவும் குறுகிய காலத்தில் உயர் தரத்திலான துரித விற்பனையின் பின்னரான சேவையை அபான்ஸ் வழங்கி வருகிறது. வாடிக்கையாளர்கள் பழுதடைந்த உற்பத்தியை சேவை நிலையத்தின் துரித சேவைகவுண்டரில் ஒப்படைக்கவேண்டும். அதன் பின்னர் 30 நிமிடங்கள் வரைவாடிக்கையாளர் அந்த இடத்தில் தேநீர் அல்லது காஃபி அருந்தும் போது வாடிக்கையாளரின் உற்பத்தியைபழுது பார்த்து தரப்படும்.

வாடிக்கையாளருக்கு சேவை நிலையத்திற்கு போவது கடினமாக இருந்தால் உங்கள் அருகாமையில் உள்ள அபான்ஸ் கிளையில் உங்கள் பழுதடைந்த உற்பத்தியை ஒப்படைத்து துரித சேவையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதன் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு எந்தவித தொந்தரவும் அல்லது அசௌகரியமும் இல்லாமல் மிகவும் சிறப்பான ஒரு சேவையை உங்கள் தேவைக்கு ஏற்பபெற்றுக் கொள்ள முடியும்.

தமதுவாடிக்கையாளர்களின் வசதியை எப்போதும் கருத்தில் கொண்டு செயல்படும் அபான்ஸ் சேவைநிலையம் நாடளாவிய ரீதியில் 17 சேவைநிலையங்கள் மற்றும் அதிகாரப்பூர்வ சேவை முகவர்கள் 100க்கும் அதிகமானவர்களை கொண்டு இயங்கி வருகிறது. மேலும் நாடளாவிய ரீதியில் மிகச்சிறந்த சேவையையும், அசல் உதிரிப்பாகங்களையும்வழங்கிவருகிறது. அபான்ஸ் வழங்கிவரும் உலகின் முதல்தர LG, ஹ°வர், மிட்சுபிஷி இலெக்ட்ரிக், இலெக்ட்ரோ லெக்ஸ், எல்பா உள்ளிட்ட, பலவிசேட உற்பத்திகளுக்குவிற்பனையின் பின்னரானசிறப்புசேவையைஅபான்ஸ் சேவை நிலையம் வழங்கிவருகிறது. சேவைகள் மற்றும் புதுப்பித்தல்களை மேற்கொள்ளும் தொழில் நுட்பவியலாளர்களுக்கு வெளிநாட்டு அனுபவங்கள் மற்றும் விசேட பயிற்சிகள் வழங்கப் படுகிறது.

எல்லோருக்கும் எப்போதும் சேவை என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுவரும் அபான்ஸ் சேவை நிலையத்தின் சேவைகளை அபான்ஸ் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியை அபான்ஸ் சேவைப் பிரிவு வழங்கியுள்ளது. 0115 555 888 என்ற துரித இலக்கத்தை அழைத்து அபான்ஸ் சேவை நிலையத்தி னால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக அறிந்து கொள்ளுங்கள். வெள்ளவத்தை, தம்புள்ளை, காலி, மாத்தறை, கண்டி, அனுராதபுரம், கம்பஹா, இரத்தினபுரி, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம், புத்தளம், நீர்கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் பதுளை ஆகிய பிரதான நகரங்களில் உள்ள அபான்ஸ் சேவை மத்திய நிலையங்களில் அதிசிறந்த சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொள்ளமுடியும்.

(C/32010)(10)

★ ★ ★

நீங்கள் சாதாரண தரப்பரீட்சையில் தோற்றி,

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA

(O/L) 5 S

பெறுபேற்றினைப் பெற்றவரா?......

மருத்துவத்துறையில் நீங்களும் ஒரு
தாதியாவதற்கான (Nurse) அரிய சந்தர்ப்பம்



Hotline : 071 71 40000
071 077 0770

சாதாரண தரப்பரீட்சையில் 5S பெறுபேற்றுடன் 30 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் அனைவரும் விண்ணப்பிக்கமுடியும்.

TVEC நிறுவனத்தினால் NVQ - 04 தர சான்றிதழ் வழங்கப்படும்.

மாதாந்தம் 25,000/- அடிப்படை சம்பளத்துடன் உறுதியான தொழில் வாய்ப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ் எங்களினால் வழங்கப்படும்

அரச அங்கீகாரம் பெற்ற தாதிய பாடசாலை

அய்வா தாதியர் பாடசாலை

323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம்
071 8722350, 071 8722352.

36/1, 38/1 இரண்டாம் குறுக்கு வீதி, வவுனியா
071 8722351

SKT சிறி குமரன் ரெக்ஸ்

ஆடி பிறந்திருச்சி
ஆடித்தள்ளுபடி
ஆரம்பமாயிருச்சு

தட்டாதெரு சந்தியில்
அசத்தலான
ஆடித் தள்ளுபடி!



இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள் அனைத்தும் தள்ளுபடி விலையில்

விசேடமாக Office wear சாறிகள் மிக குறைந்த விலையில்

இல. 770, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(Sup/1525)(10)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

### 2018 ஆம் ஆண்டுக்கான பகிரங்க மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட புதிதாக அமைக்கப்பட்ட இறைச்சிக்கடையினை 2018.08.15ஆம் திகதி தொடக்கம் 2018.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 30.07.2018 – 07.08.2018 பி.ப 1.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 07.08.2018 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 07.08.2018 பி.ப 2.00 மணிக்கு

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | மயிலங்காடு ஆட்டிறைச்சிக்கடை, | 500.00 | 2000.00 | 17136.00 | 250.00 |

1. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**க.தர்சுஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**
**26.07.2018**

(in/7364) (13.17)


CAPITAL MAHARAJA
சிறுவர்களுக்கு கூட தெரியும்...!
அறிவுபூர்வமாக சிந்தியுங்கள் எஸ்-லோன் மட்டும் வாங்குங்கள்
வாழ்க்கைக்கே ஒன்று அது நிச்சயம்
• உயர்தரமான பொருட்கள்
• ஒப்பற்ற சர்வதேச தரம்
• அதிநவீன தொழில்நுட்பம்
• 60 ஆண்டுகள் கடந்த நம்பிக்கை
எஸ்-லோன் லங்கா (பிரைவட்) லிமிட்டெட்.
515/7, டி.பி ஜெயா மாவத்தை, கொழும்பு-10 | தொ.பே: 011 4 760 100 ஃபெக்ஸ்: +94 11 4 760 170
மின்னஞ்சல்: slonsales@slon.maharaja.lk
S-lon
வாழ்விற்கு நீர்

# யானையும் சில்வண்டும்

ஒரு நாள் யானை ஒன்று ஒரு சில்வண்டைக் கண்டது. அந்தச் சில்வண்டு தனது முதுகு தரையிற் படபடுத்துக் கிடந்தது. அதன் சிறிய கால்கள் காற்றில்உயர்ந்து மேல் நோக்கி நின்றன. "சில்வண்டே, சில்வண்டே நீ என்ன செய்கிறாய்?" என யானை கேட்டது. அதற்கு சில்வண்டு "இன்று வானம் இடிந்து கீழே விழக்கூடும் எனக் கேள்விப்பட்டேன்"என்று பதில் கூறியது. "அதற்கு நீ என்னசெய்யப் போகிறாய்"என்றது யானை. "அவ்விதம் வானம் இடிந்து விழுமாயின் அதனைத் தாங்கிப் பிடிக்கத் தயாராக நான் உள்ளேன்"என்றது சில்வண்டு.

யானை உடனே சிரித்து விட்டது. அந்தச் சிறு பிராணியைக் கேலி செய்தது "உன்னுடைய இந்தச் சிறிய கால்கள் வானத்தைத் தாங்கிப் பிடிக்குமென நீ நினைக்கிறாயா?"என்று யானை கேட்டது.


என்னால் மட்டும் இதனைத் தனியாகச் செய்ய முடியாது. நீங்கள் ஒவ்வொருவரும் தங்களால் ஆகக் கூடியதைச் செய்ய வேண்டும். என்னால் இதனை மட்டும் தான் செய்ய முடியும்"என சில்வண்டு பதிலளித்தது.

ஒவ்வொருவரும் ஒன்றுபட்டுத் தம்மால் இயன்றதைச் செய்தால், வெற்றி கொள்ள இயலாதது எதுவுமில்லை. ஒற்றுமையே பலம்.




# எறும்பு கொல்லி

எறும்புகளைத் தின்று வாழும் ஒரு விலங்கு எறும்புண்ணியாகும். கறையான்களையும் இது உண்ணும். நுண்ணிய எறும்புகளையும் கறையான்களையும் தின்றே இது ஏறத்தாழ ஒன்றரை மீற்றர் நீளமும் ஒரு மீற்றர் உயரமும் வளர்கின்றது. எறும்புகளையும் கறையான்களையும் தவிர வேறெதையும் உண்ண முடியாதபடி இதன் வாய் நீண்டு ஒடுங்கி அமைந்துள்ளது.



எறும்புண்ணிகளில் எலி அளவிலான சில வகைகளும் உள்ளன. இவைகள் நிலத்தில் வாழ்கின்ற வகையினவாகவும் மரங்களில் வாழ்கின்ற வகையினவாயும் இரண்டு வகைகளாக உள்ளன. நிலத்தில் வாழ்பவற்றுக்கு வாய்ப்பக்கத்தில் நீண்ட ஊரோமம் காணப்படும். இவை உயரத்தில் பெரியவை. அதனால் பெரும் எறும்புண்ணிகள் எனப்படுகின்றன. இவற்றின் தலை உடலின் அளவுக்குச் சிறியதாயும், வாய்ப்பகுதி நீண்ட குழாய் போன்றும், வாயை ஒட்டினாற்போல இருசிறிய மூக்குத் துவாரங்களும் உள்ளன. வாயிலிருந்து நெளியும் புழுப்போன்ற நீளமான நாக்கு ஒன்று சுறுசுறுப்பாக உள்ளும் வெளியும் சென்ற வண்ணமிருக்கும். இந்த நாக்கின் மேற்பாகத்தில் எப்போதும் பசைபோன்ற நீர் சுரந்தபடி இருக்கும். புற்றுக்களை உடைத்து அதில் உள்ள எறும்புகளையும் முட்டை போன்றவற்றையும் பசை சுரக்கும் நாக்கால் ஒற்றி எடுத்து நாக்கை வாய்க்குள் இழுத்து அவற்றை உண்ணும். முக்கியமாகப் புற்றுக்களிலுள்ள ஆயிரக்கணக்கான எறும்பு முட்டைகள் இதற்கு உணவாகின்றன.

இதன் முன்னங்கால்களில் பலம் பொருந்திய கூர்மையான நகங்கள் காணப்படுகின்றன. இவை எறும்புப் புற்றுக்களை எளிதில் தகர்க்க உதவுகின்றன. எறும்புண்ணிகள் வட தென் அமெரிக்கக் கண்டங்களில் வெப்ப வலய காட்டுப்பகுதிகளின் ஆறுகளை அடுத்த நாணல் காடுகளில் காணப்படுகின்றன. இவை இரவில் இரைதேடி பகல் நேரத்தில் உறங்குகின்றன. இவை தனித்து வாழும் இயல்பு கொண்டவை. இந்த இனத்தில் தாயும் குட்டிகளும் சேர்ந்தே இருப்பதைக் காணலாம். இது ஒரு தடவைக்கு ஒரு குட்டியையே ஈனும். நடமாடும் பழக்கம் வரும்வரை குட்டி தாயின் முதுகிலேறிச் சவாரி செய்யும். எறும்புண்ணிகள் இயற்கையாகவே சாதுவானவை. விரோதிகளைக் கண்டதும் தப்பி ஓடமுயலும். முடியாவிட்டால் தீவிரமாக சண்டைபோடும். எறும்பு இனத்தின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் விலங்காக எறும்புண்ணிகள் உள்ளன.



## வர்ணம் தீட்டுவோம்





# உழவன்

மண்ணைக் கிண்டி சேறாக்கி
நெல்லை விதைப்பான் கமக்காரன்

முளைத்து நெல்லும் எழுந்தவுடன்
களைகள் அகற்ற முனைகின்றான்.

தண்ணீர் பாய்ச்சிக் கட்டுகிறான்
மண்ணில் உரத்தைப் போடுகிறான்

கதிர்கள் தோன்றி வரும் போது
கவன மாகக் கொத்துகிறான்

முற்றிப் பழுத்துச் சாய்ந்தவுடன்
சுற்றிச் சூழ்ந்து அறுக்கின்றான்

கட்டுக் கட்டாய் சுமக்கின்றான்
கொட்டிலருகே குவிக்கிறான்

வைக்கோல் வேறாய் நெல்வேறாய்
சூடு மிதித்துப் பிரிக்கிறான்

நெல்லைச் சாக்கில் கட்டுகிறான்
எல்லாம் வீட்டினில் சேர்க்கின்றான்

உழவன் இன்றேல் உணவில்லை
அன்பாய் அவனை மதித்திடுங்கள்

## சிந்திப்பதற்குச் சில வார்த்தைகள்

- பெற்ற தாய் கோவிலாகும். பெற்ற தந்தையின் வார்த்தைகள் மந்திரமாகும்.
- பொறுமை கசப்பானதுதான். ஆனால் அதன் பயன் இனிப்பானது.
- செருக்கு அன்பைக் கொல்கிறது. அது அடக்கத்தை அழிக்கிறது.
- ஒருவன் சிரிக்கும் போதெல்லாம். அவனது மரணம் தள்ளிப் போடப்படுகிறது.
- கயிற்றின் மேலேறிக் கரணம் போட்டாலும். காசு வாங்கக் கீழே தான் வந்தாக வேண்டும்.
- புத்தகங்கள் மனிதப் பிறவிகள் அல்ல. ஆனால் அவை என்றென்றும் உயிரோடிருக்கின்றன.
- இதயத்தால் எண்ணுகிறவாறே இருக்கிறான் மனிதன்.
- நேர்மையாக வாழுங்கள்: இதுவே தோல்வியை வெற்றியாக மாற்றும்.
- அறிவே ஒருவனது உண்மையான பலம்.
- விடா முயற்சியுடன் தொடர்ந்து செயற்படுபவனே மேதை.
- நம்பிக்கையே இனிமையான எதிர்காலத்தை உருவாக்குகிறது.
- எதிர்பார்ப்பது சிறியதாக அமைந்தால் ஏமாற்றம் அதிகம் ஏற்படாது.
- உங்களுக்கு என்ன உரிமை வேண்டுமோ, அதனையே பிறருக்கும் அளியுங்கள்.

## புத்திசாலி யார்?


ஒரு கிராமத்தவன் ஆடு வாங்கவெனச் சந்தைக்குப் போனான். அதே கிராமத்தைச் சேர்ந்த இன்னொருவன் சந்தையிலிருந்து வந்துகொண்டிருந்தான். இருவரும் வழியிலிருந்த ஆற்றுப் பாலத்தில் சந்தித்தனர். சந்தையிலிருந்து வந்துகொண்டிருந்தவன். சந்தைக்கு சென்றுகொண்டிருந்தவனைப் பார்த்து "இது எங்கள் மூதாதையர் கட்டிய பாலம். நீ எங்கள் விரோதி. நீ ஆடு வாங்கிக்கொண்டு இந்த வழியாகத் திரும்பி வந்தால் உதைப்பேன் என்றான்." எங்கே, உன்னால் முடியுமானால் உதை பார்க்கலாம்" என்றான் மற்றவன்.

"இப்போது இல்லை, நீ திரும்பி வரும்போது உதைப்பேன்!"சண்டை முற்றும் போது அதே கிராமத்தைச் சேர்ந்த இன்னொருவன் சந்தையிலிருந்து அரிசி வாங்கிக்கொண்டு பாலத்தின் வழியே வந்தான். அவன் இடையில் புகுந்து "முட்டாள்களே! இல்லாத ஆடுகளுக்காக ஏன் சண்டை போடுகிறீர்கள்?"என்று கேட்டு தன் தலையிலிருந்த மூடையை இறக்கி அரிசியை முழுவதுமாக ஆற்றில் கொட்டினான். பின்னர் வெறும் சாக்கை இருவருக்கும் காட்டி "இந்தப் பைக்குள் இப்போது என்ன இருக்கிறது?"என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை"என்றார்கள் இருவரும்.

"இது போலத்தான் உங்கள் இருவர் தலையிலும் கொஞ்சமும் மூளை இல்லை"என்றான் அவன்.

இந்த மூவரில் யார் புத்திசாலி? கண்டுபிடிப்போம்.



## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 323
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.07.26

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,066,255/-

வெற்றி இலக்கங்கள்
05 30 53 54
ஆங்கில எழுத்து: S

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## வேலையாள்கள் தேவை

- Computer Typesetting
( தமிழ், ஆங்கிலம்)
- Coreldraw
- Photoshop

தெரிந்த அனுபவமுள்ளவர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும். (CS/18536)(11,17)

**021 312 6118, 077 798 9464**
**போஸ்கோ**
**307, K.K.S. Road, Jaffna**

## ஊர்க் கோழி குஞ்சு

வான் கோழி. கினிக்கோழி காடை. ஊர்க்கோழி குஞ்சுகள். டோபமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 5925 085**

## வீட்டுப்பணிப் பெண் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு தங்கி இருந்து வேலை செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். (CS/18534)(11,17)
**021 222 5601, 071 154 4917**

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1486
சீட்டிழுப்பு திகதி: 26.07.2018

வெற்றி இலக்கங்கள்
03 35 40 57
ஆங்கில எழுத்து: G

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 31, 744, 288/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## விற்பனைக்கு

டசோன் ஆண். பெண் நாயும். பொமேரியன் ஆண். பெண் நாயும். அல்சேசன் ஆண் நாயும். 45 நாள் பூர்த்தியான அத்ன் குட்டிகளும். வன்ரம். வெள்ளடியன். மனிதாரா. ஊர்க்கோழி விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 075 4597 540 லி. மயூரன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவைபிள்ளையார் கோயில் முன்பாக பூதராயர் கோயிலடி.**

## கடை வாடகைக்கு

184. ஆஸ்பத்திரி வீதியில் மேல் மாடியுடன் சேர்ந்த கடை வாடகைக்குண்டு.
(1200 சதுர அடி கொண்டது)
**071 560 4213, 076 965 6789** (CS/18538)(11,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 05.10.1991
இறப்பு 26.07.2018

**சிவகுமார் சிவசாந்தன்**
**(மயூரன்)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் சிவசாந்தன் (மயூரன்) நேற்று (26.07.2018) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார். அன்னார் சசிதரன் (குவம்) நிர்மலா தம்பதியரின் மூத்தமகனும் மகிந்தன் காலஞ்சென்ற கிருசாந்தன் மற்றும் றஜிதா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ரேபேக்காவின் அன்புக்கணவரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**077 729 6712**

## சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 163
சீட்டிழுப்பு திகதி ▶ 26.07.2018 வியாழக்கிழமை

ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 10 25 59
விதி எண்: 07

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.32, 103, 800/=

## ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| குருநாகல் | 9905903 |
| யாழ்ப்பாணம் | 7167362 |
| கண்டி | 8869835 |
| பொலநறுவை | 7807748 |
| கம்பஹா | 9363074 |

2018.07.28 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## மாடி வீடு வாடகைக்குண்டு

உயரப்புலம், ஆனைக்கோட்டையில் பிடாரி அம்மன் கோயில் அருகில் சகல நவீன வசதிகள் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு.
அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
**077 136 3047**

## காணி விற்பனைக்கு

இயக்கச்சி, முள்ளியான், மருதங்கேணி பிரதான வீதியில் வீதியை வடக்கு எல்லையாகக் கொண்டு முள்ளியானில் 40 ஏக்கர் காணி விற்பனைக் குண்டு. ஒருங்கிணைந்த பண்ணை, தோட்டம், தொழிற்சாலை முதலியன அமைக்க உகந்த இடம்
**தொடர்பு - 077 666 0344, 075 760 4313**

## MAJESTIC CINEPLEX




Jaffna Bronze
1.30PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)




Jaffna Platinum
10.30AM | 1.30PM | 4.30PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)




Jaffna Silver
10.15AM | 4.15PM | 7.15PM




Jaffna Bronze
10.30AM | 4.30PM
Jaffna Silver
1.15PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
021 2227712

CEYLON THEATRES
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டிகரன அழைப்பும்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

தோற்றம் 13 . 10 . 1946
மறைவு 26 . 06 . 2018



**திருமதி தவமணிதேவி செல்வநாயகம்**


26.06.2018 ஆம் திகதி இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி அறிதல்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று வெள்ளிக் கிழமை (27.07.2018) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மு.ப. 11 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் பெனடிற் பத்மகுமாரன்

**(உரிமையாளர் - யோகாஸ் ஆடையகம், யாழ்ப்பாணம்)**



தோற்றம் 07.08.1959
மறைவு 25.07.2018

நவாலியைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு. வட்டுக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட பத்மநாதன் பெனடிற் பத்மகுமாரக் கடந்த (25.07.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் ஜெயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் தீபன் (லண்டன்), வினு (கனடா), வேணு, ர்மியா (லண்டன்) ஆகி யோரின் பாசமிகுதந்தையும் கோபி (லண்டன்), இலக்கியா (கனடா), பாபு (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்ற பத்மஜெகன், பத்மகதிரினி (பிரான்ஸ்), பத்ம ராஜினி, பத்மஜெயந்தி (லண்டன்), பத்ம ரஞ்சனி (ஜேர்மனி), பத்மலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருந்தவநாதன் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (ஜேர்மனி), ஜானகி (ஜேர்மனி), காலஞ்சென்ற இரஞ்சிதமலர், அற்புதலிங்கம், ஆனந்தலிங்கம், இரத்தினமாலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் விபூசன் (லண்டன்), ரிலக்சன் (கனடா), அஸ்வின் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2018) வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்று மு.ப. 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**அராலி மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**

## சமூகம்...

பார்த்து அவற்றிலுள்ளது போன்று செயற்பட விரும்புகின்றனர். இந்த நிலைமையை மாற்ற சமூகம் முன்வரவேண்டும். பிள்ளைகளில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த ஆளுநர் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார். வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்தாவது:

சமயத் தலங்களில் வெறுமனமே வழிபாடுகளுடன் நின்றுவிடாது நற்பண்புகளைப் புகட்டுவதிலும் முன்னிற்கவேண்டும். இரவு நேரங்களில் வீடுகளுக்குள் பொலிஸாரை அனுப்ப முடியாது. வீட்டுக்கு வீடு பொலிஸாரைக் காவலுக்கு வைக்கவும் முடியாது. இது தொடர்பான விடயங்களில் சமூகமே சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

**போதைப் பொருள் பாவனை**

அமெரிக்கா வல்லரசு நாடு. அங்கும் போதைப் பொருள்கள் அதிகளவில் காணப்படுகின்றது. அங்கும் இராணுவத்தினர் உள்ளனர். அவர்களால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதுபோன்றுதான் இங்கும் படையினர், பொலிஸாரைக் கொண்டு போதைப் பொருளை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தியா மிக அருகில் உள்ளது. அங்கு விரைவாகச் சென்று போதைப் பொருளைப் பெற்று இங்கு கடத்துகின்றனர்.

**தொண்டர் ஆசிரியர் நியமனம்**

அண்மையில் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் குறைபாடுகள் உள்ளன என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக அரச தலைவருக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளேன். ஆராய்ந்து வருகின்றேன் - என்றார். (ற-6)

## நாட்டில்...

நாட்டில் மீண்டும் போர் ஏற்படாது.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் "தெரிந்தால் கற்பியுங்கள்; தெரியாவிட்டால் கற்றுக்கொள்ளுங்கள்" என்ற 2017ஆம் ஆண்டுக்கான வானொலி நிகழ்ச்சியில் சிறப்புப் பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட மாணவ, மாணவியருக்கு மதிப்பளிக்கும் தேசிய நிகழ்வு அமைச்சர் மனோ கணேசன் மற்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே தலைமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

கண்டியில் பெரும் கலவரம் ஏற்பட்டது. நாட்டுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டதை நாம் கண்டோம். இனிமேல் அவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டோம். போர் முடிந்து விட்டாலும் ஐக்கியம் ஏற்படவில்லை. தற்போது ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பியுள்ளோம். அதற்காகவே இரு முக்கிய கட்சிகளும் ஒன்றிணைந்தன. துரிதமாக நாடு வளர்ச்சி அடைந்தால் சிறந்த எதிர்காலம் கிட்டும். இல்லாவிட்டால் நாம் வெளிநாடுகள் சென்று வாழ வேண்டியிருக்கும். நாடு துரித வளர்ச்சியடைய அமைதி, நல்லிணக்கம் அவசியம். 1967ஆம் ஆண்டு நான் பாடசாலையில் இருந்து வெளியேறும் போது இலங்கை உலகின் தலைசிறந்த நாடாக இருந்தது. ஏனைய நாடுகளை விடவும் சிறப்பாக இருந்தது. அதனால் நான் இங்கிலாந்து செல்லாமல் நாட்டிலேயே இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தேன்.

இந்த காலப்பகுதியில் மலேசியாவில் தமிழர்களுக்கும் மலே மக்களுக்கும் இடையில் இனவாத குழப்பம் ஏற்பட்டது. அந்தக் கலவரத்துக்குப் பின்னர் இதுவரை எந்தவொரு கலவரமும் அந்த நாட்டில் ஏற்படவில்லை. அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இலங்கையைவிடத் தலைசிறந்த அபிவிருத்திமிகு நாடாக மலேசியா பரிணமித்துள்ளது. மலேசியாவின் இனவாத கலவரத்தை பார்த்த பின்னர் சிங்கப்பூரும் தமது நாட்டில் இனவாத கலவரங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு அதிதீவிரமாகச் செயற்பட்டது. சீன, மலே, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை அரச மொழியாக சிங்கப்பூர் பிரகடணப்படுத்தியது. அந்த மொழிகளைக் கட்டாயமாக்கியது. தற்போது சிங்கப்பூர் ஏனைய நாடுகளைவிட தலைநிமிர்ந்து காணப்படுகின்றது. சிங்கப்பூர் குடிமக்களின் வருமானம் அமெரிக்க குடிமக்களின் வருமானத்துக்குச் சமமாகும்.

1978 ஆம் ஆண்டு துரிதமான அபிவிருத்தியை நோக்கி இலங்கை பயணித்தது. 1983 ஆம் ஆண்டு கலவரம் ஏற்பட்டது. அதன் பின்னர் இன, மத, மொழி ரீதியாக இலங்கையராகிய நாம் பிளவுபட்டோம். நாடு என்ற வகையில் போர் செய்தோம். போர் முடிவடைந்தது. ஆனால் ஐக்கியம் ஏற்படவில்லை. எதிர்காலம் தொடர்பில நம்பிக்கை வைக்க முடியாத நிலைமை உருவானது. ஐக்கியம் ஏற்படவில்லை என்பதே அதற்கான முதன்மைக் காரணமாகும்.

ஐக்கியத்தை ஏற்படுத்தவே நாம் அனைவரும் இணைந்தோம். நாட்டில் மீண்டும் போர் ஏற்படாது. அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக நாங்கள் செயற்படுகின்றோம். 1963ஆம் ஆண்டுக்கு பின்னர் கடந்த மூன்று வருடங்களில் சிறப்பான நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

எமது பிரச்சினையை தீர்த்துக்கொள்ளும் நிலமையை நாமே உருவாக்கவேண்டும். புதிதாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிப்போம். அடுத்த தலைமுறையினருக்கே இதன் பயன்கள் கிடைக்கும் - என்றார். (ற-61)

## டெனீஸ்...

கூட்டமைப்புக்கு நெருக்கமானவரும் கூட்டமைப்புக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக் கும் இடையில் நடுநிலைத் தரப்பாகச் செயற்படக்கூடியவருமான கொழும்பில் உள்ள மூத்த, பிரபல சட்டத்தரணி ஊடாக இந்த விடயத்தை அணுகிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இந்த விடயத்தை நேரடியாகச் சொல்லாவிட்டாலும், "மாகாண சபையின் அடுத்த அமர்வு ஓகஸ்ட் 9 ஆம் திகதி நடப்பதற்கு முன்பாக அமைச்சரவை தொடர்பான சிக்கலைத் தீர்க்க முடியும் என்று நம்புகின்றேன். வடக்கு முதலமைச்சரும் இது தொடர்பில் சாதகமான சில நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்" என்று நேற்று நடந்த வடக்கு மாகாண சபை அமர்வில் தெரிவித்தார் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம். வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் எழுப்பப்பட்ட சிறப்புரிமை பிரச்சினை தொடர்பில் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

"வடக்கு மாகாணசபையின் அமைச்சர் சபை செயற்படவில்லை. இது சட்டவாக்கச் சபை. நிறைவேற்று நிர்வாகச் செயற்பாடுகள் இடம் பெறவில்லை. இப்படியானதொரு நிலையில் சபை அமர்வு இங்கு நடத்தப்படவேண்டுமா? இந்தப் பிரச்சினை தீர்க்கப் படும் வரையில் சபையின் அமர்வை ஒத்திவையுங்கள். இதனை எனக்கு வாக்களித்த மக்கள் சார்பாக நான் கேட்டுக் கொள்கின்றேன்" என்று கூறி ஆளும் கட்சி உறுப்பினரான கே.சயந்தன் சிறப்புரிமை பிரச்சி னையை எழுப்பிக் கூறியதாவது.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், "ஆளுநருக்கு என்னால் அறிவுரை வழங்கமுடியாது. அவருக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினர் ஆலோசனை வழங்குவார்கள். நடைமுறைப்படுத்த முடியாத கட்டளை என்பதால்தான், உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளோம். உயர் நீதிமன்றில் உள்ள விடயத்தைப் பேசுவது பொருத்தமல்ல" - என்றார்.

உயர் நீதிமன்றம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்துள்ளதால், அதுவரையில், பா.டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்வார் என்பதையும் சுட்டிக்காட்டினார் ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன்.

அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பதிலளிக்கையில், "அமைச்சரவை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடனும் வடக்கு மாகாண முதலமைச்சருடனும் பேசினேன். முதலமைச்சர் சில நிலைப்பாடுகளைத் தெரிவித்திருக்கின்றார். இந்தப் பிரச்சினையைச் சாதகமாகத் தீர்க்கக்கூடிய வாய்ப்பு வந்துள்ளது" என்றார்.

இதற்கிடையே பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள வழக்கைத் திரும்பப்பெற வைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான திரைமறைவு முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று உதயன் அறிந்தான்.

கூட்டமைப்பு மற்றும் முதலமைச்சருக்கு நெருக்கமான கொழும்பில் உள்ள சட்டத்தரணி மூலமாக இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வழக்கைத் திரும்பப் பெற்று இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருமாறு குறித்த சட்டத்தரணி டெனீஸ்வரனைத் தொடர்பு கொண்டு வலியுறுத்தினார் என்றும் உதயன் அறிந்தான். ஆனால், முதலமைச்சர் தனது தவறை ஏற்றுக்கொண்டால் வழக்கைத் திரும்பப் பெறுவேன் என்றும் இல்லையென்றால் தானும் தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கமாட்டேன் என்றும் டெனீஸ்வரனும் தனது பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க வில்லை என்றும் தெரியவந்தது.

## அனந்தியின்...

ஏற்பட்டது. அமைச்சர் அனந்தி சசிதரன் கைத்துப்பாக்கி பெற்றுக் கொள்வதற்கு விண்ணபித்தமைக்கான ஆதாரங்களை அஸ்மின் சபையில் சமர்ப்பிக்க, அதனை மறுக்காத அனந்தி சசிதரன், தன்னிடம் துப்பாக்கி உள்ளமைக்கான ஆதாரங்களை அஸ்மின் முன்வைக்கவேண்டும் என்று கோரினார். கைத்துப்பாக்கிக்கு விண்ணப்பிப்பதற்கும், அவற்றை வைத்திருந்தார் என்று கூறுவதற்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் இல்லை என்று ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது. அதில், சபையின் பெண் அமைச்சர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கைத்துப்பாக்கி பெற்றுள்ளார் என்று ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் தன்னிலை விளக்கத்தை திருமதி அனந்தி சசிதரன் நேற்று வழங்கினார். தன்னிடம் அவ்வாறு துப்பாக்கி இல்லை என்றார். துப்பாக்கி வைத்திருப்பதாகக் கூறுபவர்கள் அதற்கான ஆதாரத்தை முன்வைக்க வேண்டும் என்றார்.

குற்றச்சாட்டை முன்வைத்த உறுப்பினர் அஸ்மின், கைத்துப்பாக்கிக்கு அனந்தி விண்ணப்பித்த ஆதாரத்தைச் சபையில் சமர்ப்பித்தார். கைத்துப்பாக்கி வழங்கப்பட்டமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அது கிடைத்ததும் சபையில் சமர்பிக்கப்படும் என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், அமைச்சர் சர்வேஸ்வரன் ஆகியோர் அனந்திக்குச் சார்பாக விவாதத்தில் உரையாற்றினார்கள். இதனால் ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே கருத்து மோதலை இந்த விவாதம் ஏற்படுத்தியது.

திருமதி அனந்தி சசிதரனுக்கு கடும் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று அவர் உறுப்பினராக இருந்தபோது கோரியமையினால், நம்பிக்கைக்குரிய பொலிஸார் ஒருவர் பாதுகாப்புக்கு வேண்டும் என்று கேட்டமையினால், பிஸ்டலுடன் பெண் பொலிஸ் அதிகாரியை நானே பெற்றுக் கொடுத்தேன் என்று ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் சபையில் குறிப்பிட்டார். அதற்குப் பின்னரும் கைத்துப்பாக்கிக்கு விண்ணப்பித்தன் ஊடாக ஆயுதத்தைப் பெறும் எண்ணம் அவருக்கு இருந்திருக்கின்றது என்று குறிப்பிட்ட சயந்தன், துப்பாக்கிக்கு விண்ணப்பித்ததும், அவர் துப்பாக்கி வைத்திருக்கின்றார் என்று சொல்வதில் தவறில்லை எனவும் சுட்டிக்காட்டினார். (உ-5)

## தான்...

சியின் ஆயுள் முடிவடைவதற்கு ஒன்றரை மாதங்களுக்கு முன்பாக வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்.

வழக்கைத் தாமே தாக்கல் செய்திருந்த போதும் தமது தரப்பு வாதங்களை முன்வைக்க கால அவகாசம் வேண்டும் என்று முதலமைச்சர் தரப்பு நேற்றுக் கோரியதை அடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தன்னை அமைச்சர் பதவியில் இருந்து வடக்கு முதலமைச்சர் நீக்கியதை எதிர்த்து பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அதனை விசாரித்த நீதிமன்றம் அவர் பதவி நீக்கப்பட்ட முறைமை தவறு என்று கூறி அவர் அமைச்சராகத் தொடர அனுமதிக்கப்படவேண்டும் என்று இடைக்கால உத்தரவு வழங்கியது. அதனை எதிர்த்தே வடக்கு முதலமைச்சர் இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரிப்பதா, இல்லையா என்பதை உயர் நீதிமன்றம் கடந்த18ஆம் திகதி ஆராய்ந்தது. அந்த அமர்வில் நீதியரசர்கள் குழாமில் ஒருவராக இருந்தவர் நீதியரசர் தெகிதெனிய. டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டபோது முதலில் அதனை நிராகரித்த நீதியரசர் குழாமில் இருந்தவர் அவர். எனவே உயர் நீதிமன் றில் நடக்கும் விசாரணையில் அவர் பங்கெடுக்கக்கூடாது என்று ஆட்சேபம் கிளப்பியது டெனீஸ்வரன் தரப்பு.

நீதியரசர் தெகிதெனிய உள்ளிட்ட அமர்வு டெனீஸ்வரனின் வழக்கைத் தள்ளுபடி செய்ததை எதிர்த்து அவர் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பை நிராகரித்த உயர் நீதிமன்றம் வேறு நீதிபதிகள் அமர்வு முன்பாக டெனீஸ்வரனின் வழக்கைத் தொடர்ந்து விசாரிக்குமாறு உத்தரவிட்டது. அந்த வழக்கிலேயே டெனீஸ்வரன் பதவியில் தொடர வேண்டும் என்கிற இடைக்கால உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியது. எனினும் இதுவரையில் அந்த உத்தரவை முதலமைச்சர் செய்யற்படுத்தவில்லை. (உ-5)

## நிதி...

நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்தாவது:

கிளிநொச்சி பொதுச் சந்தைக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் 767 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் திட்டம் வரையப்பட்டது. அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. எனினும் திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்கு இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை. அடுத்த வாரமே அனுப்பப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. அதனால் இந்தத் திட்டத்திற்குத் திறைசேரியால் இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை

கிளிநொச்சி பொதுச் சந்தை எரிந்த பின்னர் அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் சுவாமிநாதன் ஆகியோருடன் நான் பேசியதற்கு அமைவாக அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு புதிய கட்டடத்திற்கான அனுமதி பெறப்பட்டது. 150 மில்லியன் ரூபா நிதியை புதிய சந்தை கட்டடம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டது. அதில் முதற்கட்டமாக 80 மில்லியன் நிதி மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் அந்த நிதி வேறு திட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டது.

பின்னர் 767 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் வரையப்பட்டு அமைச்சரவை அனுமதிக்கு கொண்டு சென்றபோது அங்கு நிதி அமைச்சர் சந்தை அமைப்பதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டது. தற்போது புதிய திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இது பெருமளவு நிதி என்பதனால் தேசிய திட்டமில் திணைக்களத்தின் அனுமதி அதற்குப் பெறப்படல் வேண்டும். தற்போது அதற்கான பணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். ஒரு வாராத்திற்குள் அந்தப் பணிகள் நிறைவுறும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை எந்த நிதி ஒதுக்கீடும் கொடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை என்றார் ஆளுநர்.

கடந்த வாரம் வடக்குக்கு வந்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள சந்தைக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அந்த நிகழ்வு நடைபெறவில்லை. இந்த நிலையிலேயே சந்தை தொடர்பாக ஆளுநர் இந்த விள்க்கத்தை வழங்கியுள்ளார்.

வடக்கு மகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கிளிநொச்சி இரணைமடு குளத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் பார்வையிட்டார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இரணைமடு குளத்தின் முதன்மை அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குளத்தின் அணைக்கட்டை உயர்த்துதல், வான் கதவுகளைப் புதிதாக அமைத்தல் மற்றும் சீரமைத்தல், அணைக்கட்டின் உட்பகுதி சீரமைப்பு, புதிய மேம்பாலம் அமைத்தல், நீர்தடுப்பு அணைக்கட்டு அமைத்தல் உட்பட பல பணிகளின் தற்போதைய நிலமை என்ன என்பதை அவர் நேரில் ஆய்வு செய்தார்.

ஆளுநருடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் சுந்தரம் டிவகல்லா ஆகியோரும் சென்றிருந்தனர். (ற-214, 35,6)

## காணி...

எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச.

"மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது ஆபத்தானது. கொழும்பு அரசினால்கூட மாகாண சபைகளைக் கட்டுப்படுத்த முடியாது. மாகாண சபைகளின் முதலமைச்சர்களே இந்த அதிகாரங்கள் தொடர்பில் தீர்மானம் எடுப்பார்கள். அது அரசியல் சார்ந்ததாக மாறிவிடும்" என்றார் அவர்.

2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மகிந்த அணி சார்பில் கோத்தபாய ராஜபக்ச களமிறங்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அதற்கான தீவிர பரப்புரை நடவடிக்கைகளில் கோத்தபாய ஈடுபட்டு வருகின்றார். சிறுபான்மை மக்களின் ஆதரவையும் திரட்டிக்கொள்வதில் அவர் கவனம் செலுத்தி வருகின்றார். அதனால் முஸ்லிம் மக்களின் இப்தார் நிகழ்வுகளில் பங்கேற்கிறார். அவர்களைப் போன்று உடையணிந்து கொள்கிறார். அதே போன்று தமிழ்ப் பகுதிகளுக்கும் ஆலயங்களுக்கும் சென்று திருநீறு, பொன்னாடைகளையும் அணிந்துகொள்கிறார்.

இந்தப் பின்னணியில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்றுத் தனது பணியகத்தில் சந்தித்தார் கோத்தபாய. சுமார் 2 மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

சந்திப்பில் கோத்தபாய மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டதும் பொருளாதாரத் தீர்வுக்கே முதலில் வழி செய்வேன். பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்படாமையினாலேயே அரசியல் உள்படப் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. பொருளாதார வாய்ப்பு முடக்கப்பட்டமையின் விளைவே 30 ஆண்டு கால ஆயுதப் போராட்டம். பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்தால் அரசியல் பிரச்சினை தீரும்.

வெளிநாட்டுக் கடன்களை நாம் பெற்றதாகப் பலரும் குற்றம் சுமத்துகின்றனர். வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்யவே நாம் அந்தக் கடன்களைப் பெற்றோம். அதைப் பற்றி எவரும் பேசுவதாக இல்லை.

மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது. பொலிஸ் அதிகாரத்தை மாகாணத்துக்கு வழங்கினால், மாகாண முதலமைச்சரே அதைக் கையாள்வார். பொலிஸ்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டதாகிவிடும். பொலிஸாருக்குரிய ஆயுதங்களை மாகாணமே கொள்ளவனவு செய்யும். கொழும்பு அரசு அதில் தலையீடு செய்ய முடியாது. இது ஆபத்தானது. மாகாணங்களுக்கு காணி அதிகாரம் வழங்கினாலும், இதே நிலைமைதான். கொழும்பு அரசு அதில் தலையிட முடியாது.

போர் முடிந்த சில நாள்களில் இந்தியத் தூதரகத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை நேரில் சந்தித்துப் பேசியிருந்தேன். அதன் பின்னர், சில தினங்களுக்கு முன்னர்தான் நேரில் சந்தித்தேன். அவருடன் தொடர்ந்து சந்தித்துப் பேச்சு நடத்துவேன்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் ஈ.பி.டி.பி. மற்றும் புளொட்டிடமிருந்து ஆயுதங்களைக் களைந்தோம். ஆயுதங்களை மீளப் பெற்றால் கூட்டமைப்புடன் இணையப் போவதாக சித்தார்த்தன் கூறினார். அதனையும் மீறி அவர்களின் ஆயுதங்களைப் பறித்தோம். தேர்தலை ஜனநாயக ரீதியில் நடத்தவே இதனைச் செய்தோம்.

இலங்கையில் இருப்பது சிங்கள இராணுவம் அல்ல. அது தேசிய இராணுவம். வடக்கு முதலமைச்சர் தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றார்.

புதிய அரசமைப்பு ராஜபக்சாக்களுக்கு எதிராகவே தயாரிக்கப்படுகின்றது. இரட்டைக் குடியுரிமையுடையவர்களைத் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்துள்ளனர். பெரும்பான்மையான மக்களை திருப்திப்படுத்தும் அளவுக்கு புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதாகத் தெரியவில்லை. புதிய அரசமைப்பை தீர்வுக்கான ஏற்பாடாக நான் கணிக்கவில்லை - என்றார். (உ-5)

## உண்மை...

பதில் எதுவும் சொல்லாது அமைதி காத்தார் மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன். அந்தப் போலிப் பத்திரிகையைத் தனக்கெதிராக உதயன் பத்திரிகை நிறுவனமே வெளியிட்டது என்று பொய்யான குற்றச்சாட்டைத் அவர் தெரிவித்து வந்தபோதும் நேற்றையதினம் மற்றைய உறுப்பினர்கள் உண்மையைச் சொன்ன போது வாய்பொத்திப் பேசாமல் இருந்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், திருமதி அனந்தி சசிதரன் மீது அஸ்மின் குற்றச்சாட்டு முன்வைத்தார். 2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலின்போது அனந்தியின் வீடு தாக்கப்பட்டமை, போலி உதயன் பத்திரிகை வெளியிடப்பட்டமை தொடர்பில் அப்போது பேசினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய ஆளும் கட்சி மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தேர்தல் காலத்தின்போது போலி உதயன் பத்திரிகையை வெளியிட்டது அப்போதைய அரசு என்று குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், தொலைக்காட்சி நேர்காணலிலும் வேறு நேர்காணல்களிலும் போலி உதயன் பத்திரிகையை வெளியிட்டது, உதயன் பத்திரிகை நிறுவனம்தான் என்று பொய் கூறி வந்திருந்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று மேற்கண்டவாறு கூறும்போது, திருமதி அனந்தி சசிதரன் மௌனமாக, மறுப்புத் தெரிவிக்காமல் இருந்தார். (உ-5)

## தவராசாவிடமும்...

அமைப்பின் முன்னாள் உறுப்பினருமான சி.தவராசா.

"என்னிடம் கேட்டிருந்தால் நானே கைத்துப்பாக்கியைத் தந்திருப்பேன். கடந்த பெப்ரவரி மாதம் தான் அதனைத் திருப்பிக் கொடுத்தேன்" என்று அமைச்சர் அனந்தி சசிதரனுக்குத் தெரிவித்தார் அவர்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கைத்துப்பாக்கி வைத்திருப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் அவர் தன்னிலைவிளக்கமளித்தார். இதன் பின்னர் இடம்பெற்ற விவாதத்தின்போதே தவராசா மேற்கண்டவாறு கூறினார்.

"பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் துப்பாக்கி வைத்திருக்கலாம். அதில் எந்தப் பிழையும் இல்லை. என்னிடம் கேட்டிருந்தால் நானே கைத்துப்பாக்கியைத் தந்திருப்பேன். கடந்த பெப்ரவரி மாதம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கூறிய பின்னர், நான் எனது கைத்துப்பாக்கியை ஒப்படைத்துவிட்டேன்" - என்றார். (உ-5)

## அடுத்த...

யாழ்ப்பாணம், ஜூலை 27

மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்று நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இணக்கம் காணப்படவில்லை. ஆனாலும், 7 மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஜனவரி 5ஆம் நாள் நடத்துவது என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்டது.

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்றுக் காலை நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் நடைபெற்றது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் தொடர்ச்சியாகவே இந்தக் கூட்டம் நடைபெற்றது.

தற்போதுள்ள எல்லை நிர்ணயத்தில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாகச் சிறுபான்மைக் கட்சிகளினால் குற்றம் சுமத்தப்பட்டது. புதிதாக எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதுவரை காத்திருக்காமல் தேர்தலைத் தாமதிக்காமல் பழைய முறைமையின் பிரகாரம் உடன் தேர்தலை நடத்தவேண்டும் என்று சிறுபான்மைக் கட்சிகள் தீர்மானம் எடுத்திருந்தன.

இந்தத் தீர்மானத்தைக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவிடம் சிறுபான்மைக் கட்சிகள் முன்வைத்தன. ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் தாமதமாகும் என்றால் பழைய முறையில் தேர்தலை நடத்த வேண்டும் என செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முன்வைத்தது. பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்தவேண்டும் என்பதற்கு அமைச்சர் பைசர் முஸ்தபா கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

சிறுபான்மைக் கட்சித் தலைவர்களுக்கும் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கும் இடையில் வாக்குவாதங்களும் ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது. மக்கள் விடுதலை முன்னணியும் புதிய முறைமையில் தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தியது. கூட்டு எதிர்க்கட்சி எந்த முறைமையிலாவது தேர்தலை உடன் நடத்த வேண்டும் எனச் சுட்டிக்காட்டியது.

கட்சித் தலைவர்களுக்கிடையே இணக்கப்பாடு எட்டப்படாதமையின் காரணமாக தீர்மானமின்றி கட்சித் தலைவர்கள் கூட்டம் முடிவுக்கு வந்தது. அடுத்த வாரம் புதன்கிழமையன்று மீண்டும் கூடி ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-5,31)

## மாகாணத்...

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஒவ்வொரு வலயத்திலும் மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ள வலயங்களுக்கு அடுத்த தவணை ஆரம்பத்தில் அனுப்பப்படுவார்கள். எமது மாகாணத்துக்கெனத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இந்த நியமனம் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் நேற்று அறிவித்தார். வடக்கு மாகாணத்தில் ஆசிரிய இடமாற்றம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று வடக்குச் சபை அமர்வில் நேற்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஒரு ஆசிரியர் 13ஆண்டுகளாக நாவற்குழிப் பாலத்தையும், மண்டைத்தீவுப் பாலத்தையும் தாண்டாது பணி புரிந்து வருகின்றார்" என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சுட்டிக்காட்டினார்.

"கர்ப்பவதி ஆசிரியைகளுக்கு போதனா வைத்தியசாலையை அண்மித்ததாக நியமனம் வழங்கவேண்டும் என்று கூறினாலும் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. தமிழர்கள் ஒரு பிள்ளையும் பெறாமல் இருப்பதற்கு வழி வகுக்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்பவர்கள் தங்கள் சேவைக் காலம் முடிந்ததும் இங்கு திரும்பி வருகின்றார்கள். ஆனால் இங்கிருந்து அதற்குச் சமனான தொகை ஆசிரியர்கள் அந்த இடங்களுக்கு அனுப்பப்படுவதில்லை. இது ஒருவழிப் பாதை போன்றுதான் இருக்கின்றது" என்று ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றம் சுமத்தினார்.

"வவுனியா வடக்கிலிருந்து 60 ஆசிரியர்கள் சென்றார்கள். அந்த இடத்துக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டபோதும் நியமிக்கப்படவில்லை. வவுனியா தெற்கிலிருந்து ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை" என்று ஆளும் கட்சியின் மற்றொரு உறுப்பினரான ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் பதிலளித்து உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு வலயங்களிலும் உள்ள மேலதிக ஆசிரியர்களின் விவரங்களைத் திரட்டி வருகின்றோம். தற்போது தவணை முடிகின்றது. அடுத்த தவணை ஆரம்பத்தில் அவர்களை இடமாற்றம் செய்வோம். எங்களது இடமாற்றக் கொள்கையில் சிறு திருத்தங்களைச் செய்யுமாறு ஆளுநர் கூறியிருக்கின்றார். அதனைச் செய்து இரண்டொரு தினங்களில் நடைமுறைப்படுத்துவோம்.

சில ஆசிரியர்கள் நீண்ட காலமாக இடமாற்றப்படாமல் இருக்கின்றார்கள். அவர்கள் அரசியல் செல்வாக்கைப் பிடித்து இங்கேயே தங்கி விட்டார்கள். வடக்கில் 16 ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் 71 சதவீதமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 85 சதவீதமானவர்கள் பெண்கள். ஆசிரியர் நியமனம் வழங்கும் ஒவ்வொரு தடவையும், வன்னிப் பிராந்தியத்தில் 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள், 7ஆண்டுகள் கடமையாற்றவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அந்தக் காலம் முடிந்ததும் அவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பிவர நினைக்கின்றார்கள். அவர்களுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்தக் காலம் முடிந்ததும், யாழ்ப்பாணத்துக்கு திருப்பி அழைப்பதாகச் சொல்லவில்லை. ஆகக் குறைந்த பதவிக்காலம் இத்தனை ஆண்டுகள் வன்னிப் பிராந்தியத்தில் சேவையாற்றவேண்டும் என்றுதான் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்களது ஆகக் குறைந்த பதவிக் காலம் முடிந்தது, ஒரு நூறுபேர் சேர்ந்ததும் தங்களை இடமாற்றச் சொல்லிப் போராட்டம் நடத்தத் தொடங்கி விடுவார்கள். ஊடகங்களில் அது வரும். பெரிய பிரச்சினையாகிவிடும். எங்களின் இடமாற்றக் கொள்கை அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கி நடைமுறைப்படுத்தினாலும் பிரச்சினை நூறு சதவீதம் தீர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது - என்றார். (உ-5)

## வட மாகாண...

மாகாணத் தேர்தல் முதலில் நடக்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல. இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாண சபைத் தேர்தல் முறைமை உருவாக்கப்பட்டது. அதனால் வடக்கு மாகாண சபைத் தேர்தலையே முதலில் நடத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறையில் நடத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்குகளைத் தங்கள் பக்கம் திருப்பிக் கொள்ள அரசு நுணுக்கமான முறையில் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வந்தது. ஆனால் அரசின் எதிர்பார்ப்பு அரசுக்கு எதிராகவே அமைந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெறுபேறுகள் எதிரணிக்கே சாதகமாக அமைந்தன. அதனால் அரச தரப்பினரே தற்போது பழைய முறையில் தேர்தலை நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

வடக்கு மாகாணம் தவிர்த்து ஏனைய ஐந்து மாகாணங்களுக்கும் தேர்தல் நடத்த எதிர்பார்த்துள்ளனர். ஆனால் வடக்கு மாகாண சபைத் தேர்தலையை முதலில் நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

உரிய காலத்தில் அங்கு தேர்தலை நடத்தினால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். அரசு வடக்கு மாகாணத் தேர்தலைப் பிற்போட முயற்சிப்பது அதன் நிர்வாகப் பலவீனத்தைக் காட்டுகின்றது - என்றார். (ற-31)

## தாயாரின்...

வாழும் பிரதீபன் (வயது - 31) என்பவரே இவ்வாறு நேற்று உயிரிழந்தார்.

தனது தாயாரின் இரண்டாம் ஆண்டு திவச நாளுக்கு முல்லைத்தீவிலிருந்து மீசாலை மடத்தடியில் உள்ள தனது சகோதரன் வீட்டுக்கு வந்திருந்தார் எனவும் மதியம் 2.00 மணியளவில் வாழை இலை வெட்டச் சென்ற வேளை தவறுதலாக தண்ணீர் தொட்டிக்குள் விழுந்துவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த அவரை உடனே சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரனை அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனையை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதிவான் பொலிசாருக்கு உத்தரவிட்டார். (உ-159)

## பெண்ணின்...

நபர் ஒருவர் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுத் தப்பினார். படுகாயமடைந்த சத்திய சோதி சிறிகௌசி (வயது - 48) பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பட்டப் பகலில் நடந்த இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தும்பளைப் பகுதியில் பிள்ளையுடன் வசித்து வரும் சிறிகௌசி தனது வீட்டில் தைத்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பின்பக்கமாக வந்த மர்ம நபர் ஒருவர் அவருடைய வாயினை பொத்தியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெண் மர்மநபரின் பிடியிலிருந்து தப்பப் போராடினார். கூக்குரல் எழுப்பினார். இதனால் பெண்ணின் கழுத்தை கத்தியால் அறுத்துவிட்டு மர்ம நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸில் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த சிறிகௌசிக்கு கழுத்தில் 12 தையல்கள் போடப்பட்டுள்ளன. பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ-8,173)

## வடக்கில்...

களில் கூடுதலான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். சில இடங்களில் ஆசிரியர் வெற்றிடம் பூர்த்தியாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் 2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன. 457 பேர் தொண்டர் ஆசிரியர் நியமனம் ஊடாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள். விரைவில் 265 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க இருக்கின்றோம். இந்த ஆண்டுக்குள் ஆயிரம் பேரை ஆசிரியர்களாக உள்ளீர்த்துவிடுவோம்.

இங்கு தகுதியான ஆசிரியர்கள் இல்லை. வெற்றிடம் உள்ள சில பாடங்களுக்கு நாங்கள் விண்ணப்பங்கள் கோருகின்றபோதும் ஆள் கிடைப்பதில்லை. தகுதியானவர்கள் இங்கு இல்லை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப் போகின்றோம். விண்ணப்பங்கள் வராது என்று தெரியும். இருந்தாலும் கோரப் போகின்றோம் - என்றார். (உ-5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

**திருமகள் ச.ச.நி.**
**துடுப்பாட்டத் தொடர்**

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் மற்றும் இறுதியாட்டம் என்பன அரியாலை கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெட்லையினஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொம்பாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த அரையிறுதிகளில் வெற்றிபெறும் அணி தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் மோதும்.

**யங்கம்பன்ஸ் வி.க.**
**கால்பந்துத் தொடர்**

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் வடமராட்சி ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாகவும் தொடரொன்றை நடத்தி வந்தது. இந்தத் தொடரில் இரவு 8 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சைனிங்ஸ் வி.க**
**கால்பந்தாட்டம்**

சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ரெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து தீருவில் அணி மோதவுள்ளது.

சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்துத் தொடரொன்றையும் நடத்தி வந்தது. இந்தத் தொடரில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் நேதாஜி அணியை எதிர்த்து ரேவடி அணி மோதவுள்ளது.

**வசந்தசிறி வி.க**
**தாச்சித் தொடர்**

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)




# ஆவரங்கால் மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 27

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் தனது 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய அணி கிண்ணம் வென்றது.

திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதியது. இதில் ஆவரங்கால் மத்திய அணி 25:19, 26:24, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாநகரசபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச்சங்க தலைவர் கி.மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-422,108,23)

## இறுதியில் வைகறை

யாழ்ப்பாணம், ஜூலை 27

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும்தாச்சித்தொடரில்வைகறை அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டிகண்ணகிவிளையாட்டுக் கழக அணி மோதியது. 8:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வைகறை அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# அல்வாய் மனோகரா வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் சம்பியனாகியது அல்வாய் மனோகரா இளைஞர் கழகம்.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சமரபாகு நியூட்டன் இளைஞர் கழக அணியும் அல்வாய் மனோகரா இளைஞர் கழக அணியும் பலப்பரீட்சை நடத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதேநிலைதான். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற



கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது அல்வாய் மனோகரா இளைஞர் கழக அணி. (ம-108)

## சைனிங்ஸ் அசத்தல்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சைனிங்ஸ் அணி வெற்றிபெற்றது.

றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் சைனிங்ஸ் அணி வென்றது. (ம-23)

# சண்டிலிப்பாய் இந்து இளைஞர் இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

புத்தூர் கிராமசபையின் முன்னாள் உபதலைவர் அமரர் சி. அரியகுட்டியின் 100ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டு கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி 25:11, 25:19, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)



# நோர்வே பெண்கள்மீது துர்நடத்தை குணதிலகவிடம் தீவிர விசாரணை

இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் குணதிலகவிடம் நோர்வே பெண்களை துர்நடத்தைக்கு உட்படுத்தியமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

விளையாட்டு வீரருக்கு உரித்தான ஒழுக்க விதிகளை மீறி நடந்தார் என்று தெரிவித்து இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஸ்க குணதிலக மீது, தற்காலிகத் தடை விதித்து அண்மையில் நடவடிக்கை மேற்கொண்டது இலங்கை கிரிக்கெட் சபை. இந்த விடயம் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை விடுத்திருந்த அறிவிப்பில், "வீரரின் ஒழுக்க விதிகளை மீறி குணதிலக நடந்துகொண்டதால் தனுஸ்க குணதிலக ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுகிறார்.

விசாரணைகள் முடியும் வரை தனுஸ்க குணதிலகவுக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்படுகிறது. அத்துடன் தனுஸ்கவின் ஆண்டு ஊதியத்தில் இருந்து 20 சதவீதம் தண்டம் விதிக்கப்படுகிறது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் எந்த விடயத்துக்காக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படவில்லை. இவ்வாறிருக்க, "நோர்வே பெண்கள் இருவர் பாலியர் துர்நடத்தைக்கு உட்பட்டமை தொடர்பில் குணதிலக பொலிஸாரால் விசாரிக்கப்படுகிறார்" என்ற தகவல் தற்போது வந்துள்ளது.


குணதிலகவின் நண்பரொருவர் இங்கிலாந்தில் உள்ளார். இவர் லண்டன் கழகத்துக்காக விளையாடுகிறார். அண்மையில் அவர் இலங்கைக்குச் சுற்றுலா வந்தபோது நோர்வேப் பெண்கள் இருவரை குணதிலகவின் விடுதி அறைக்கு அழைத்துச்சென்று பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று தெரியவந்துள்ளது. இது விடயத்தில் குணதிலகவுக்கும் தொடர்பிருக்கலாம் என்ற கோணத்திலேயே அவர் விசாரிக்கப்படுகிறார். (ம)




# அன்டர்சன் முதலிடம்!

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் தொடர்ந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த ரபாடா அன்டர்சனிடம் அந்த இடத்தைப் பறிகொடுத்தமை மிகப்பெரிய மாற்றமாகக் கருதப்படுகிறது.

டெஸ்ட் பந்துவீச்சாளர்களைப் பொறுத்தமட்டில் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் அன்டர்சன் முதலிடத்தில் உள்ளார். அவர் 892 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நீண்டகாலமாக முதலிடத்தில் நீடித்து வந்த தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா இரண்டாவது இடத்துக்குச் சரிந்தார். அவர் 882 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இந்திய வீரர் ஜடேயா 866 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், தென்னாபிரிக்க வீரர் பிளன்டர் 826 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், அஸ்வின் 811 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறு முதல் பத்து வரையிலான தரப்படுத்தலில் கம்மின்ஸ், போல்ட், கேரத், வாக்னர், ஹசில்வூட் ஆகியோர் உள்ளனர். (ம)






# அம்பாள் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 27

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் உடுவில் அம்பாள் அணி கிண்ணம் வென்றது.

அரியாலை திருமகள் சனசமூக நிலைய முன்றலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணி 17:12, 22:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி கிண்ணம் வென்றது. (ம-23)

# தீருவில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 27

சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தீருவில் அணி வெற்றிபெற்றது.


தீருவில் அணியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் தீருவில் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# மீண்டும் ஹமில்டன்

உலகக் கார்பந்தயத் தொடரின் 11ஆவது சுற்றில் வெற்றி பெற்றார் பிரிட்டன் வீரர் லூயிஸ் ஹமில்டன்.

ஜேர்மனியில் இந்தத் தொடர் நடைபெற்றது. 306.458 கிலோமீற்றர் தூரமுடைய இலக்கை ஒரு மணித்தியாலம், 32 நிமிடங்கள், 29 செக்கன்களில் அடைந்து முதலிடம் பிடித்தார் ஹமில்டன். பின்லாந்து வீரர் போத்தாஸ் இரண்டாவது இடத்தைத் தனதாக்கினார்.

11 சுற்றுக்களின் முடிவில் ஹமில்டன் 188 புள்ளிகளுடன் முதலிடத்திலும், செபஸ்டியன் வெட்டல் 171 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். 12ஆவது சுற்று ஹங்கேரியில் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)



# கிளியூர் கிங்ஸ் அணி இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கிளியூர் கிங்ஸ் அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தமிழ் யுனைற்ரெட் அணியை எதிர்த்து கிளியூர் கிங்ஸ் அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் கிளியூர் கிங்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)



# மேற்கிந்தியத் தீவுகள் தக்க பதிலடி!




பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது மேற்கிந்தியத் தீவுகள்.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முன்னதாக நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றிபெற்றதால் இரண்டாவது ஆட்டத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு இருந்தது.

நர்ணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அந்த அணி 271 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹெட்மையர் 125 ஓட்டங்களையும், பவல் 44 ஓட்டங்களையும், கெய்ல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரூபல் கொசைன் 3 இலக்குகளையும், ரகுமான், சகிப் அல் ஹசன் இருவரும் தலா 2 இலக்குகளையும், மோர்ரசா, மிராஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதையடுத்து 3 ஓட்டங்களால் வென்றது மேற்கிந்தியத் தீவுகள். ரகிம் அதிகபட்சமாக 68 ஓட்டங்களையும், சகிப் அல் கசன் 56 ஓட்டங்களையும், இக்பால் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம)


## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அம்பலவாணர் குலசேகரம்**

(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி. டிறிபேர்க் கல்லூரி. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

தோற்றம் 26.08.1937 — மறைவு 24.07.2000

என்றும் உங்கள் நினைவுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் மனைவி, பிள்ளைகள்.

கைதடி நுணாவில், சாவகச்சேரி.

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900/=Kg
ஜேர்மனி-700/=Kg
நெதர்லாந்து-700/=Kg

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

**வேலையாள்கள் தேவை**

**K.Kapinaya Engineering (pvt) Ltd**

- மேசன்
- தச்சுத் தொழிலாளர்
- கம்பி வேலையாளர்
- குழாய் பொருத்துநர் (Plumber)
- மின்னிணைப்பாளர்கள்
- உதவியாளர்கள்

தர்மக்கேணி, பளை. 077 550 1520 077 712 6690 (CS/18530)(11)


## மரண அறிவித்தல்

# திருமதி ஜெயராணி (வசந்தா) கணேசலிங்கம்



இல.24, சட்டநாதர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி (வசந்தா) கணேசலிங்கம் நேற்று (26.07.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்திரராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசலிங்கத்தின் (ராசு) அன்பு மனைவியும், சுகன்யா (சட்டத்தரணி), டற்சிகன் (மாணவன் - மொறட்டுவ பல்கலைக்கழகம்), குலரூபன் (பழைய மாணவன் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், செந்தூரனின் (மின் இணைப்பாளர்) அன்பு மாமியும், ஜெயராஜாவின் (ஓய்வு நிலை சாலை முகாமையாளர் - காரைநகர் சாலை), அன்புச்சகோதரியும், பராசக்தி, சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் புவனேஸ்வரி, யோகலிங்கம், திலகராணி, யோகராணி, விஜயலிங்கம், ஜெயலிங்கம், உமா (ஆசிரியை - யா/செங்குந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.24, சட்டநாதர் வீதி, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 515 2082 , 077 662 3721**

(in 7349) (13)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.